சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை

# வனம்

## கொள்கை விளக்கக் குறிப்பு 2022 - 2023

மானியக் கோரிக்கை எண். 54


**கா. ராமச்சந்திரன்**
வனத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2022

# அட்டவணை


| வ. எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 2–6 |
| 2. | தமிழ்நாட்டின் வன வளங்கள் | 6–28 |
| 3. | நடைமுறையிலுள்ள திட்டங்கள் | 28–50 |
| 4. | 2021–2022–ஆம் ஆண்டில் புதிய முயற்சிகள் | 51–79 |
| 5. | இயக்கங்கள் | 80–95 |
| 6. | 2022–2023 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டங்கள் | 96–101 |
| 7. | வனக் கொள்கை மற்றும் சட்ட கட்டமைப்பு | 102–124 |
| 8. | வனம் மற்றும் வன உயிரின மேலாண்மைக்கான சட்டப்படியான அமைப்புகள் | 125–142 |
| 9. | வன மேலாண்மை | 142–162 |
| 10. | வன வருவாய் மற்றும் செலவின விவரங்கள் | 162–164 |
| 11. | வனக் கழகங்கள் | 165–180 |
| 12. | 2021–2022–ஆம் ஆண்டின் முக்கிய நிகழ்வுகள் | 180–184 |
| 13. | முடிவுரை | 184 |

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2022 – 2023
# வனத்துறை

**"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண்பு அரிது".**

விண்ணிலிருந்து மழைத்துளி
விழுந்தாலன்றி மண்ணில் பசும்புல் தலை
காண்பது அரிதான ஒன்றாகும்.

## தொலைநோக்குப் பார்வை (Vision)

வனம் மற்றும் வன உயிரினங்களை சமூக பொறுப்பு மற்றும் அறிவியல் சார்ந்த மேலாண்மையில் நம் மாநிலத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்கி தற்போதைய மற்றும் வருங்காலத் தலைமுறையினருக்கு நிலையான நீடித்த பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல், பண்பாட்டுப் பயன்களை வழங்குதல்.

## தொலைநோக்கு செயல் (Mission)

தமிழ்நாட்டிலுள்ள வனம் மற்றும் வன உயிரினங்களை சமுதாயப் பங்களிப்பு, புதுமை முயற்சிகள்

கூட்டாண்மை மற்றும் அறிவியல் வழி மேலாண்மை செய்து வளமான வனங்களை உருவாக்குதல்.

வனத்துறையிலுள்ள பணியாளர்களுக்கு தேவையான பணியாற்றல், திறன் உள்ளவர்களாக அதிகாரம் அளிப்பதன் மூலம் வனச்செல்வங்களை நன்முறையில் மேலாண்மை செய்தல்.

வெளிப்படைத்தன்மையான கொள்கை வகுத்தல் மற்றும் திட்டச் செயலாக்கத்தின் மூலம் நீடித்த, நிலையான வனங்களை தற்போதைய மற்றும் வருங்கால தலைமுறையினருக்கு அளித்தல்.

## முன்னுரை

மனித இனத்திற்கு கிடைக்கப்பெற்ற சிறந்த இயற்கை வளங்களில் காடுகளும் ஒன்றாகும். ஒவ்வொரு நாட்டின் நிலைத்தன்மையும், வளமும், அந்நாட்டின் தற்கால தலைமுறையின் தேவைகளைப் நிறைவு செய்வது மட்டுமின்றி, வருங்கால தலைமுறையின் நலனை பாதிக்காத சீரான சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றையும் உறுதி செய்கிறது. மனித இனத்தின் உயிர்ச்சூழல் பாதுகாப்பினை உறுதி செய்ய, தூய்மையான நீர், மற்றும் வளமான மண் ஆகியன அவசியமானதாகும்.

வனங்களின் சுற்றுச்சூழல், இச்சமூகத்திற்கு தூய காற்று, நீர் வளங்கள், வளமான மண், உயிர்ப்பன்மை, வாழ்வதற்கேற்ற சூழல் வழங்குகின்றன. அவை நமக்கு நேர்முக மற்றும் மறைமுக ஆதாரங்களை வழங்குகின்றன. இல்லையெனில், உயிரினங்களின் வாழ்க்கை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படும். பெரும்பாலான பழங்குடியினர் உள்ளிட்ட பல்வேறு கிராமப்புற சமுதாய பிரிவினர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு நேரடியாக வனங்களைச் சார்ந்துள்ளனர். வனங்கள், மண் மற்றும் தழை மக்கிய சத்துள்ள மண்ணைப் பாதுகாப்பதால் அவைகள் நுண்துளைகளையுடைய நீர்த்தேக்கங்கள் போன்று செயல்பட்டு, நீரினைத்தேக்கி அதனை படிப்படியாக விடுவித்து காலம் காலமாக நிலையாகக் கிடைக்கும் வண்ணம் செயல்படுகிறது.

கரியமில வாயுவினை மறு சுழற்சி செய்து அதன் வெளிப்பாட்டினைத் தணிக்கும் வடிகாலாக செயல்படுதல், பருவநிலையை முறைப்படுத்துவதில் உதவி புரிதல், நீரினை சுத்திகரித்தல், இயற்கை சீற்றங்களைத் தணித்தல் மற்றும் மரபணு காப்பகமாக செயல்படுதல் உள்ளிட்ட பல்வேறு வகையான சூழலமைப்பு சேவைகளை வனங்கள் வழங்கி

வருகின்றன. வனங்கள் பொழுதுபோக்குப் பகுதிகளாகவும் விளங்குகின்றன. அவை நுண்ணிய காலநிலை மாற்றத்தை குறைத்தல், வெப்பமண்டலங்களில் உயர் வெப்பநிலையினைக் குறைத்தல் மற்றும் வாழ்வதற்குத் தேவையான மழைப்பொழிவினை வழங்கும் மேகங்களின் இயக்கம் போன்ற பல்வேறு வகையினை சுற்றுச்சூழலமைப்பினை வனங்கள் வழங்குகின்றன.

வனங்கள் தரங்குன்றுவதால் இது போன்று வாழ்வாதார அமைப்புகளில் எதிர்மறை விளைவுகளை ஏற்படும். தொடர்ந்து அதிகரித்து வரும் மக்கள்தொகை மற்றும் பெருகி வரும் தொழில் மயமாக்கல் ஆகியன நமது நிலப்பரப்பு மற்றும் நீர்வாழ் சூழலமைப்புகளின் பாதுகாப்பிற்குக் கடும் சவாலாக விளங்குகின்றன. அதிவேக மக்கள் தொகைப்பெருக்கத்தால், நமது வளங்கள் பெருமளவில் துய்க்கப்படுகின்றன. இது வனங்கள் தரங்குன்றுவதற்கும், மற்றும் வேளாண் நிலங்கள் மாற்றுப் பயன்பாட்டு நிலங்களாக மாறுவதற்கும் வழிவகுக்கிறது. குடிசைகள் அதிகரிப்பு, ஈரநிலங்கள் அழிதல், கழிவுநீர் அதிக அளவில் வெளியேறுதல் காரணமாக மாசடைந்த காற்று மற்றும் நீர் போன்றவை அதிவேக நகரமயமாக்கலின் விளைவுகளாகும். எனவே, பயன்தரும் சூழல் சார்ந்த

வளர்ச்சி என்பது காலத்தின் தேவையாகும். பொருளாதார வளர்ச்சிக்கும் மற்றும் சீரான சூழலமைப்பினைப் பேணுதலுக்கும் இடையே சமநிலை இருப்பது அவசியமாகும்.

மாநிலத்தின் சமூகப்பொருளாதார வளர்ச்சியினை முன்னெடுத்துச் செல்வதில் சீரான சூழலமைப்பின் பங்கினை தமிழ்நாடு அரசு நன்கு உணர்ந்துள்ளது. பருவநிலை மாற்றத்தின் காரணமாக ஏற்படுகின்ற இயற்கை வளங்களின் மீதான தாக்கங்கள் குறித்து தமிழ்நாடு அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. வனங்களையும், வன விலங்குகளைப்பாதுகாக்கவும், அதே நேரத்தில் வனம் சார்ந்த சமூகத்தின் வாழ்வாதாரத் தேவைகளை நிறைவுசெய்யவும் இவ்வரசு உறுதிபூண்டுள்ளது.

தேசிய வனக்கொள்கை, 1988, மாநில வனக்கொள்கை, 2018, மற்றும் நிலையான வளர்ச்சிக் குறிக்கோள்கள் போன்றவற்றின்கீழ் உள்ள இலக்குகளை அடைவதற்கான திட்டங்களை உருவாக்கும் முயற்சியில் வனத்துறை அதிக அக்கறையுடன் தொடர்ந்து முழுவீச்சுடன் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

தற்போதைய நிலையினை உணர்ந்து, வனங்களுக்கு வெளியே வன மற்றும் மரப்பரப்பினை அதிகரித்து பசுமைப்பரப்பின்கீழ் கொண்டு வருவதிலும் வனத்துறை அனைத்து விதமான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. அதே நேரத்தில் தரங்குன்றிய வனங்களை மீட்டெடுத்தல், மண் மற்றும் ஈரப்பதப்பாதுகாப்புப் பணிகள், வாழ்விட மேம்பாடு, கருத்தரங்குகள், பட்டறைப் பயிற்சிகள் வாயிலாக மக்களுக்கு விழிப்புணர்வு அளித்து, அவர்களின் திறனை மேம்படுத்தி ஊக்குவித்தல் வாயிலாக உள்ளூர் சமூகங்களுக்கும், பொது மக்களுக்கும் அதிகாரமளித்தல் ஆகியவற்றில் ஒருமுக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.


## 2. தமிழ்நாட்டின் வன வளங்கள்

ஒன்றிய தொலையுணர் செயற்கைக்கோள் மூலம் பெறப்படும் தரவுகளின் அடிப்படையில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒன்றிய மாநிலங்களின் வனநிலை குறித்த அறிக்கை வெளியிடப்படுகிறது. 2021–ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த அறிக்கையின்படி, மாநிலத்தில் வனப்பரப்பு 26,419.23 சதுர கிலோமீட்டராக உள்ளது. இது மாநிலத்தின் புவிப்பரப்பில் 20.31 விழுக்காடாகும்.

களக்காடு – முண்டந்துறை புலிகள் காப்பகம்

வன அடர்த்தியைப் பொருத்தமட்டில், தமிழ்நாட்டில் 3593.01 சதுர கிலோமீட்டர் (2.76 விழுக்காடு), மிக அடர்ந்த வனப்பகுதியாகவும் (மிஅவ), 11.034.03 சதுர கிலோமீட்டர் (8.48 விழுக்காடு) அடர் வனப்பகுதியாகவும் (அவ), 11,729.19 சதுர கிலோமீட்டர் (9.07 விழுக்காடு) வனப்பகுதி திறந்த வனமாக (திவ) உள்ளது.


தமிழ்நாட்டின் வனப்பரப்பு
20000
15000
10000
5000
0
பரப்பளவு ச.கி.மி
மிஅவ
அவ
திவ
மொத்தம்
பதிவு செய்யப்பட்ட வனத்திற்கு உள்ளே
பதிவு செய்யப்பட்ட வனத்திற்கு வெளியே


மிஅவ
3%
அவ
28%


32%

ஒன்றிய வன நில அளவை நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள 2019 ஆம் ஆண்டுக்கான அறிக்கையுடன் 2021–ம் ஆண்டு அறிக்கையினை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது தமிழ்நாட்டின் வனப்பரப்பு 55.21 சதுர கிலோமீட்டர் அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டில் வனநிலம் அல்லாத நிலங்களில் மரப்பரப்பு 4,424 சதுர கிலோமீட்டராக உள்ளது என மாதிரி அடிப்படையிலான ஆய்வு மூலம் மதிப்பிடப்பட்டுள்ளது.

மாநிலத்தின் மொத்த வனப்பரப்பு மற்றும் மரப்பரப்பு 30,843.23 சதுர கிலோமீட்டராகும். இது மாநிலத்தின் நிலப்பரப்பில் 23.71 % விழுக்காடாகும்.

தமிழ்நாட்டில் உள்ள வனங்கள் 9, வன வகைக் குழுக்களாக (Forest Type Groups) வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் அவைகள் 39 வன உட்பிரிவு வகைகளாகப் (Forest Types) பிரிக்கப்படுகின்றன. முக்கிய வன வகைக் குழுக்கள் கீழே உள்ளவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

(1) வெப்பமண்டல ஈர பசுமை மாறாக் காடுகள்
(2) வெப்பமண்டல பகுதியளவு பசுமை மாறாக் காடுகள்
(3) வெப்பமண்டல ஈர இலையுதிர் காடுகள்
(4) அலையாத்தி மற்றும் சதுப்பு நிலக் காடுகள்

(5) வெப்பமண்டல வறண்ட இலையுதிர் காடுகள்,

(6) வெப்பமண்டல முட்புதர் காடுகள்,

(7) வெப்பமண்டல வறண்ட பசுமைமாறாக் காடுகள்

(8) பகுதி வெப்பமண்டல அகன்ற இலை காடுகள்

(9) மிதவெப்ப ஈர இலையுதிர் காடுகள் .

உலகிலுள்ள முக்கியமான 36 உயிர்ப்பன்மை மிக்க தலங்களில் மேற்குத் தொடர்ச்சி மலை ஒன்றாக விளங்குகிறது. மேலும் இந்தியாவின் 3 மாபெரும் தனிச்சிறப்பு மிக்க உயிர்ப்பன்மை நிறைந்த இடங்களில் ஒன்றாகவும் உள்ளது. மாநிலத்தின் நீண்ட கடற்கரையும், அதனுடன் கூடிய செழுமையான சதுப்புநிலங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வன வகைகள் இம்மாநிலத்தின் சிறப்பாகும். மாநில உயிர்ப்பன்மையின் செழுமைக்கு கிழக்குத் தொடர்ச்சி மலையும் முக்கியப் பங்களிக்கிறது. 2017-2031 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய வன உயிரினச் செயல் திட்டத்தில், வனங்களின் உயிர்ப்பன்மையினை செழுமைப்படுத்த வலியுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில், அரிதான மற்றும் அழிந்து வரும்

உயிரின வகைகளைப் பாதுகாத்தல் மற்றும் வன உயிரின வாழ்விடங்களை அதன் இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதன் மூலம் அதன் தரத்தினை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் தமிழ்நாட்டின் உயிர்ப்பன்மை மிக்க இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2.1 தாவர பல்லுயிர்ப் பெருக்கம்

இந்தியாவின் மூடுவிதை தாவர பன்முகத்தன்மை 17,672 இனங்களை உள்ளடக்கியது. இதில் 5,640 இனங்களுடன், தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது. மேலும், 533 உள்ளூர் வகை தாவரங்கள், 230 அச்சுறுத்தப்படும் வகையில் உள்ள இனங்கள், 1,559 மருத்துவத் தாவரங்கள் மற்றும் 260 வகையான பயிர் வகைகளின் மூல ஆதாரத் தாவர இனங்கள் மாநிலத்தில் கண்டறியப்பட்டுள்ளன. நாட்டில் திறந்தவிதை தாவர பன்முகத்தன்மை 64 இனங்கள், இதில் தமிழ்நாட்டில் 4 வகையான உள்ளளூர்வகையில் திறந்தவிதை தாவர இனங்கள் மற்றும் சுமார் 60 அறிமுகப்படுத்தப்பட்ட இனங்கள் உள்ளன. இந்தியாவில் பூவாத்தாவரங்களின்

பன்முகத்தன்மை 1,022 இனங்களை உள்ளடக்கியது, அவற்றில் தமிழ்நாட்டில் சுமார் 184 இனங்கள் உள்ளன. தமிழ்நாடு வனப்பகுதிகளில் ஏராளமான பிரையோபைட்டுகள் (பாசி), லிகன்ஸ் (மரப்பாசி), பூஞ்சை, பாசிகள், பாக்டீரியா ஆகியவை காணப்படுகின்றன.



யுஜீனியா சிங்கம்பட்டியானா, களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம்



லேடிஸ் சிலிப்பர், களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம்

## 2.2 விலங்கினப் பல்லுயிர்ப்பெருக்கம்

தமிழ்நாட்டின் உயிரின பல்லுயிர்ப் பெருக்கத்தில் 165 வகையான நன்னீர் மீன்கள், 76 வகையான நீர்நில வாழ்வன, 177 வகையான ஊர்வன, 454 வகையான பறவைகள் மற்றும் 187 பாலூட்டிகள் ஆகியவை அடங்கும். உயிரினப் பேணுகை மற்றும் மேலாண்மை திட்ட அறிக்கையின்படி, அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் இனங்களில், 126 வகை

நீர் வாழ்வன, 56 வகையான நீர்நில வாழ்வன, 77 வகையான ஊர்வன, 32 வகையான பறவைகள் மற்றும் 40 வகையான பாலூட்டிகள் ஆகியவை அடங்கும். உள்ளூர் வகை விலங்கினங்களாக 36 நீர்நில வாழ்வன, 63 வகை ஊர்வன, 17 வகையான பறவைகள் மற்றும் 24 வகையான பாலூட்டிகள் இடம் பெறுகின்றன.

வனம் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாப்பதிலும், தேசிய பூங்காக்கள், வன உயிரின சரணாலயங்கள், பாதுகாப்புப் பகுதிகள் மற்றும் சமூகப் பகுதிகளை உள்ளடக்கிய பாதுகாக்கப்பட்ட பகுதிகளை அமைப்பதிலும் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகும். மேலும், வனம் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாக்கும் வகையில், புலியினை முதன்மைப்படுத்தி புலிகள் பாதுகாக்கப்படுவது மட்டுமன்றி, அதைச்சார்ந்த வன உயிரினங்களையும் பாதுகாப்பதற்காக 5 புலிகள் காப்பகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 1988 ஆம் ஆண்டு தேசிய வன உயிரின செயல் திட்டத்தில் கூறப்பட்டுள்ளவாறு, பாதுகாக்கப்பட்ட வன உயிரினப் பகுதிகள், வனப்பரப்பில் 25 விழுக்காடு கொண்டிருக்க வேண்டும் என்பதனைத்தாண்டி, தமிழ்நாடு 30.92


விழுக்காடு (7,073 சதுர கிமீ) வனப்பகுதியை பாதுகாக்கப்பட்ட பகுதியாகக் கொண்டிருப்பது நமது மாநிலத்தின் சிறப்பாகும்.



வரையாடு, ஆனைமலை.



பூநாரை, பழவேற்காடு



நீர்நாய், கிருஷ்ணகிரி.



கடமான், சத்தியமங்கலம்

## 2.3 தேசிய பூங்காக்கள்

வன உயிரினம், தாவர வளம், வனவிலங்குகள், உயிர்ச்சூழலியல், புவியமைப்பு போன்றவற்றில் தனித்தன்மையுள்ள இடங்களைப் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு, வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972, பிரிவு 35–இன் கீழ் தேசியப பூங்காக்கள் அறிவிக்கை செய்யப்படுகின்றன. நமது மாநிலத்தில் அவ்வாறு உயிர்ச்சூழலியல், புவியமைப்பு, இயற்கைச் சிறப்புகள் நிறைந்த கீழ்க்கண்ட 5 தேசிய பூங்காக்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன:

| வ. எண். | தேசிய பூங்கா | பரப்பளவ (ஹெக்டரில்) | மாவட்டம் | அறிவிக்கை செய்யப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| 1 | மன்னார் வளைகுடா கடல்வாழ் தேசிய பூங்கா | 52,602.00 | இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி | 1986 |
| 2 | இந்திரா காந்தி தேசிய பூங்கா | 11,710.00 | கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் | 1989 |
| 3 | கிண்டி தேசிய பூங்கா | 270.57 | சென்னை | 1978 |
| 4 | முக்குர்த்தி தேசிய பூங்கா | 7,846.00 | நீலகிரி | 2001 |
| 5 | முதுமலை தேசிய பூங்கா | 10,323.00 | நீலகிரி | 2005 |

## 2.4 வன உயிரின சரணாலயங்கள்

ஒரு குறிப்பிட்ட இடத்தின் தனித்துவமான சூழலியல், தாவர வகைகள், உயிரினங்கள் மற்றும் நிலப்பரப்பு போன்றவற்றைக் கருத்தில்கொண்டு அப்பகுதிகள் வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972 பிரிவு 18 மற்றும் 26 A ஆகியவற்றின் கீழ் வன உயிரின சரணாலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சுற்றுச்சூழல் மற்றும் வன உயிரினங்களைப் பேணுதல், மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களைக் கொண்டு தமிழ்நாட்டில் 15 வன உயிரின சரணாலயங்கள் உள்ளன. அவை பின்வருமாறு:

| வ. எண் | வன உயிரின சரணாலயம் | பரப்பளவு (ஹெக்டரில்) | மாவட்டம் | அறிவி-க்கை செய்யப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| 1 | முதுமலை வன உயிரின சரணாலயம் | 21,776.00 | நீலகிரி | 1940 |
| 2 | முண்டந்துறை வன உயிரின சரணாலயம் | 58,207.58 | திருநெல்வேலி மற்றும் தென்காசி | 1962 |

| வ. எண் | வன உயிரின சரணாலயம் | பரப்பளவு (ஹெக்டரில்) | மாவட்டம் | அறிவி-க்கை செய்யப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| 3 | கோடியக்கரை வன உயிரின சரணாலயம் | 1,728.81 | நாகப்பட்டினம் | 1967 |
| 4 | இந்திரா காந்தி வன உயிரின சரணாலயம் | 84,149.00 | கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் | 1976 |
| 5 | களக்காடு வன உயிரின சரணாலயம் | 22,358.00 | திருநெல்வேலி மற்றும் தென்காசி | 1976 |
| 6 | வல்லநாடு வெளிர்மான் சரணாலயம் | 1641.00 | தூத்துக்குடி | 1987 |
| 7 | சாம்பல் நிற அணில் சரணாலயம் | 48,520.00 | விருதுநகர் | 1988 |
| 8 | கன்னியாகுமரி வன உயிரின சரணாலயம் | 40,239.55 | கன்னியாகுமரி | 2007 |
| 9 | சத்தியமங்கலம் வன உயிரின சரணாலயம் | 141,160.94 | ஈரோடு | 2008 |

| வ. எண் | வன உயிரின சரணாலயம் | பரப்பளவு (ஹெக்டரில்) | மாவட்டம் | அறிவி–க்கை செய்யப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| 10 | மேகமலை வன உயிரின சரணாலயம் | 26,910.81 | தேனி மற்றும் மதுரை | 2009 |
| 11 | கோடியக்கரை வன உயிரின சரணாலயம் பிளாக் ஏ & பி | 12,407.27 | திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் | 2013 |
| 12 | கொடைக் கானல் வன உயிரின சரணாலயம் | 60,895.48 | திண்டுக்கல் மற்றும் தேனி | 2013 |
| 13 | கங்கைகொண்டான் புள்ளிமான் சரணாலயம் | 288.40 | திருநெல்வேலி | 2013 |
| 14 | காவேரி வடக்கு வன உயிரின சரணாலயம் | 50,433.48 | கிருஷ்ணகிரி | 2014 |
| 15 | நெல்லை வன உயிரின சரணாலயம் | 35,673.33 | தென்காசி | 2015 |

## பறவைகள் சரணாலயங்கள்

உலகளவில் தமிழகம் அதிக எண்ணிக்கையிலான இடம்பெயர் பறவைகளை ஈர்க்கும் இடமாக அறியப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வலசை போகும் பறவைகள் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு குளங்கள் மற்றும் ஏரிகளில் குவிகின்றன, அவற்றிற்கு உணவளிப்பதற்கும், இனப்பெருக்கம் செய்வதற்கும் மற்றும் வளர்ப்பதற்கும் சிறந்த சூழல் பாதுகாப்புடன் கூடிய வாழ்விடங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளது. இதுவரை தமிழ்நாட்டில் பின்வரும் 16 பறவைகள் சரணாலயங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன:–

| வ. எண் | பறவைகள் சரணாலயங்கள் | பரப்பளவு (சதுர கி.மீ) | மாவட்டம் | அறிவிக்கை வெளியிட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| 1 | வேட்டங்குடி பறவைகள் சரணாலயம் | 38.40 | சிவகங்கை | 1977 |
| 2 | பழவேற்காடு ஏரி பறவைகள் சரணாலயம் | [illegible] | திருவள்ளூர் | 1980 |
| 3 | கரிக்கிலி பறவைகள் சரணாலயம் | 61.21 | காஞ்சிபுரம் | 1989 |
| 4 | கஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம் | 104.00 | இராமநாதபுரம் | 1989 |
| 5 | சித்திரங்குடி பறவைகள் சரணாலயம் | 47.63 | இராமநாதபுரம் | 1989 |
| 6 | கூந்தன்குளம் காடன்குளம் பறவைகள் சரணாலயம் | 129.00 | திருநெல்வேலி | 1994 |
| 7 | வெள்ளோடு பறவைகள் சரணாலயம் | 77.18 | ஈரோடு | 1997 |
| 8 | வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் | 30.00 | காஞ்சிபுரம் | 1998 |
| 9 | உதயமார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம் | 45.28 | திருவாரூர் | 1998 |
| 10 | மேலச்செல்வனூர் - கீழச்செல்வனூர் பறவைகள் சரணாலயம் | 593.08 | இராமநாதபுரம் | 1998 |
| 11 | வடுவூர் பறவைகள் சரணாலயம் | 128.10 | திருவாரூர் | 1999 |
| 12 | கரைவெட்டி பறவைகள் சரணாலயம் | 453.74 | அரியலூர் | 1999 |
| 13 | தேர்த்தங்கல் பறவைகள் சரணாலயம் | 29.29 | இராமநாதபுரம் | 2010 |
| 14 | சக்கரக்கோட்டை குளம் பறவைகள் சரணாலயம் | 230.49 | இராமநாதபுரம் | 2012 |
| 15 | நஞ்சராயன் பறவைகள் சரணாலயம் | 125.865 | திருப்பூர் | [illegible] |
| 16 | கழுவேலி பறவைகள் சரணாலயம் | [illegible] | விழுப்புரம் | [illegible] |



பழவேற்காடு ஏரி பறவைகள் சரணாலயம், திருவள்ளூர்



கரிக்கிளி பறவைகள் சரணாலயம், காஞ்சிபுரம்

## 2.6 வன உயிரின காப்பகங்கள்

பயிரின வகைகள் மற்றும் உயிரினங்களை பாதுகாக்க சில பொது நிலங்கள், வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972 –இன் படி வன உயிரின காப்பகங்களாக அறிவிக்கை செய்யப்படுகின்றன. உள்ளூர் மக்களுடன் கலந்தாலோசித்தே இந்தப் பகுதிகள் வன உயிரின காப்பகங்கள் என அறிவிக்கப்படுகின்றன. மாநிலத்தில், வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972 பிரிவு 36A–ன் கீழ் பின்வரும் இரண்டு வன உயிரின காப்பகங்கள் உள்ளன :–

| வ. எண். | பாதுகாப்புப் பகுதிகள் | பரப்பளவு (ஹெக்டரில்) | மாவட்டம் | அறிவிக்கை செய்யப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| 1 | திருப்புடைமருதூர் பறவைகள் பாதுகாப்புப் பகுதி | 2.84 | திருநெல்வேலி | 2005 |
| 2 | சுசீந்திரம் – தேரூர் – மணகுடி பாதுகாப்புப் பகுதி | 484.77 | கன்னியாகுமரி | 2015 |



சுசீந்திரம் – தேரூர் – மணகுடி பாதுகாப்புப் பகுதி

## 2.7 புலிகள் காப்பகங்கள்

இந்தியாவில் அழிந்து வரும் புலிகள் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கிலும், அதன் வாழ்விடங்களின் அறிவியல், பொருளாதார, கலாச்சார மற்றும் சூழலியல் மதிப்பீடுகளைக் காக்கும் நோக்கிலும் ஒன்றிய அரசால், 1973–ஆம் ஆண்டு,


ஏப்ரல் திங்கள் புலிகள் திட்டம் தொடங்கப்பட்டது. இதன் மூலம் வாழ்விட முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைப் பாதுகாப்பதும், மக்களின் கல்வி மற்றும் பொழுதுபோக்கு நன்மைகளை அவர்களுக்கு அளிப்பதும் இத்திட்டத்தின் ஒரு நோக்கமாகும். தமிழ்நாட்டில் 1962–ஆம் ஆண்டிலேயே திருநெல்வேலி மாவட்டம், முண்டந்துறையில் புலிகள் பாதுகாப்பின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு புலிகள் சரணாலயத்தை தமிழ்நாடு அரசு அறிவித்து முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள புலிகள் காப்பகங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எ ண். | புலிகள் காப்பகங்கள் | மாவட்டம் | உள் மண்ட லம் ச.கி.மீ | வெளி மண்ட லம் ச.கி.மீ | மொத்த பரப்பள வு ச.கி.மீ |
|---|---|---|---|---|---|
| 1 | களக்காடு – முண்டந்துறை புலிகள் காப்பகம் | திருநெல்வே லி மற்றும் தென்காசி | 895.00 | 706.54 | 1,601.54 |
| 2 | ஆனை மலை புலிகள் காப்பகம் | கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் | 958.59 | 521.28 | 1,479.87 |

| வ. எண். | புலிகள் காப்பகங்கள் | மாவட்டம் | உள் மண்டலம் ச.கி.மீ | வெளி மண்டலம் ச.கி.மீ | மொத்த பரப்பளவு ச.கி.மீ |
|---|---|---|---|---|---|
| 3 | முதுமலை புலிகள் காப்பகம் | நீலகிரி | 321.00 | 367.59 | 688.59 |
| 4 | சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் | ஈரோடு | 793.49 | 614.91 | 1,408.40 |
| 5 | திருவில்லி–புத்தூர் மேகமலை புலிகள் காப்பகம் | விருதுநகர், தேனி மற்றும் மதுரை | 641.86 | 374.71 | 1,016.57 |

**புலிகள் காப்பகம் உள் மற்றும் வெளி மண்டல பகுதிகள்**





ஆனை மலை புலிகள் காப்பகம்



முதுமலை புலிகள் காப்பகம்



திருவில்லி–புத்தூர் மேகமலை புலிகள் காப்பகம்



களக்காடு – முண்டந்துறை புலிகள் காப்பகம்



சத்தியமங்கலம் புலிகள் காப்பகம்

## 2.8 யானைகள் காப்பகங்கள்

யானைகள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களை பாதுகாக்கும் நோக்கத்துடன் 1992–ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் யானைகள் திட்டம் தொடங்கப்பட்டது. யானையின் வழித்தடங்கள் மற்றும் வாழ்விடத்தை பாதுகாத்தல், வனப்பகுதியில் யானைகள் வாழ்வதற்கு தகுந்த சூழ்நிலையினை உருவாக்குதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். யானைகளின் வாழ்விடம் மற்றும் இடம்பெயர்தல் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, மேலாண்மை நோக்கத்திற்காக யானைகள் காப்பகங்கள் அமைக்கப்படுகின்றன. ஒரு யானை காப்பகம் என்பது இரண்டு அல்லது மூன்று வனக்கோட்டங்கள் அல்லது மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கும். ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் பின்வரும் 4 யானைகள் காப்பகங்களை அறிவித்துள்ளது. அவை பின்வருமாறு:–

| வ. எண். | யானைகள் காப்பகங்கள் | மாவட்டம் | பரப்பளவு (ஹெக்டரில்) |
|---|---|---|---|
| 1 | நீலகிரி–கிழக்குத் தொடர்ச்சி மலை | நீலகிரி, ஈரோடு. தருமபுரி | 4,66,245 |

| வ. எண். | யானைகள் காப்பகங்கள் | மாவட்டம் | பரப்பளவு (ஹெக்டரில்) |
|---|---|---|---|
| | (நீலகிரி யானைகள் காப்பகம்) | மற்றும் கிருஷ்ணகிரி | |
| 2 | நிலம்பூர் அமைதிப் பள்ளத்தாக்கு – கோயம்புத்தூர் யானைகள் காப்பகம் (நிலம்பூர் யானைகள் காப்பகம்) | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி | 56,557 |
| 3 | பெரியார் யானைகள் காப்பகம் (திருவில்லிப்புத்தூர் யானைகள் காப்பகம்) | தேனி, விருதுநகர் மற்றும் தென்காசி | 1,24,910 |
| 4 | ஆனைமலை – பரம்பிகுளம் யானைகள் காப்பகம் (ஆனைமலை யானைகள் காப்பகம்) | கோயம்புத்தூர் மற்றும் திண்டுக்கல் | 1,45,723 |



**ஆனைமலை யானைகள் காப்பகம்**



**நீலகிரி யானைகள் காப்பகம்**


## 2.9 உயிர்க்கோள் காப்பகங்கள்

உயிர்க்கோள் காப்பகங்கள் ஒன்றிய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டு, யுனெஸ்கோவின் மனித மற்றும் உயிர்க்கோளம் (MAB) திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு உள்ளூர் சமூகங்களின் முயற்சி மற்றும் அறிவியல் சார்ந்த மேலாண்மை மூலம் தொடர்த்தகு வளர்ச்சியினை ஊக்குவிக்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்டன. 1971–இல் யுனெஸ்கோவால் உயிர்க்கோள் காப்பகங்கள் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கமானது உயிர்க்கோள் காப்பகப் பகுதிகளில் உயிரினங்கள் மற்றும் சூழலியல் தன்மை மாறாமல் பேணுவதாகும். மேலும் எல்லா உயிரினங்களையும் இயற்கையாகவே அமைந்துள்ள சூழலிலேயே அவற்றை காத்து வளர்க்கவும் மற்றும் சூழலியல் மண்டலங்களில் ஏற்படும் மாற்றங்களைக் கண்காணிப்பதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் ஏற்ற ஒரு பரிந்துரை அமைப்பாக இது செயல்படும். தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட 3 உயிர்க்கோள் காப்பகங்கள் உள்ளன:–

| வ. எண். | உயிர்க்கோள் காப்பகங்கள் | பரப்பளவு (ஹெக்டரில்) | மாவட்டம் |
|---|---|---|---|
| 1 | நீலகிரி உயிர்க்கோள் காப்பகம் | நீலகிரி | 2,53,800 |

| வ. எண். | உயிர்க்கோள் காப்பகங்கள் | பரப்பளவு (ஹெக்டரில்) | மாவட்டம் |
|---|---|---|---|
| 2 | மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பகம் | இராமநாதபுரம் தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி | 10,50,000 |
| 3 | அகத்தியர்மலை உயிர்க்கோள் காப்பகம் | கன்னியாகுமரி, தென்காசி மற்றும் திருநெல்வேலி | 1,67,236 |

**உயிர்க்கோள்** காப்பகம் **பரப்பளவு (ஹெக்டரில்)**




### 3. நடைமுறையிலுள்ள திட்டங்கள்

வனக்கொள்கையின் இலக்குகள், நிலையான வளர்ச்சிக் குறிக்கோள்கள் மற்றும் முக்கிய முடிவுப்பகுதிகள் போன்றவற்றை அடைவதற்கேற்ப பின்வரும் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 3.1 முக்கிய மாநிலத் திட்டங்கள்

#### 3.1.2 தேக்கு மரத் தோட்டங்கள்

2017–2018ஆம் ஆண்டு முதல், 8 ஆண்டு காலத்திற்கு 6,000 ஹெக்டேர் பரப்பில் தேக்கு மரத்தோட்டங்களை வளர்க்கும் இத்திட்டமானது ரூ.52.64 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2020–2021 வரை ரூ.24.05 கோடி செலவில் 4,745 ஹெக்டேர் பரப்பளவில் 9,49,000 மரக்கன்றுகள் நடப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 3.1.2 சந்தன மரத் தோட்டங்கள்

நமது மாநிலத்தில் ஜவ்வாது மலை, சேர்வராயன் மலை, கொல்லி மலை, பச்சைமலை மற்றும் சித்தேரி மலை ஆகிய பகுதிகள் பாரம்பரியமாக சந்தன மரங்கள் வளரும் பகுதிகளாக அமைந்துள்ளன. எனவே, பாரம்பரிய சந்தன மரப் பகுதிகளில் வளர்ந்து வரும் சந்தன மரங்களின் இருப்பை மேம்படுத்தும் வகையில் 2015–2016 முதல் 2024–2025 வரையிலான 10 ஆண்டு காலத்திற்கு காப்புக்காடுகளில் சந்தன மரத்தோட்டங்களை வளர்க்கும் திட்டம் ரூ.100 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் 2017–2018 ஆம் ஆண்டு வரை, இத்திட்டத்தின் கீழ் ரூ.8.94 கோடி செலவில் சுமார் 7.10 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

### 3.1..3 ஆசிய யானைகளில் ஏற்படும் இழப்புகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்

அதிகரித்து வரும் மனித வனவிலங்கு மோதல்களை தவிர்க்கும் பொருட்டு பல்வேறு பல்முனை உத்திகளான வாழ்விடத்தை மேம்படுத்துதல், நீர் ஆதாரங்களை பெருக்குதல், வனப்பகுதிக்குள் வனவிலங்குகளுக்கான வளங்களை மேம்படுத்துதல், வன எல்லையில் செயற்கை தடைகளை உருவாக்குதல் போன்ற தணிப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் உள்ளூர் மக்களிடையேயும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

### 3.1.4. வன உயிரினங்களால் ஏற்படும் பாதிப்பிற்கு இழப்பீடு வழங்குதல்

மனித–வன உயிரின மோதல் என்பது மனிதர்களுக்கும் வன உயிரினங்களுக்கும் இடையிலான எதிர்மறையான தொடர்புகளைக் குறிக்கிறது, இது மக்களுக்கும் அவர்களின்

வளங்களுக்கும் மற்றும் வன உயிரினத்திற்கும் அவற்றின் வாழ்விடங்களுக்கும் விரும்பத்தகாத விளைவைக் கொண்டுள்ளது. மனித வன உயிரின மோதலின் விளைவாக ஏற்படும் மனித உயிர் இழப்பு, மனித காயம் போன்றவை தனிப்பட்ட நபரை மட்டுமல்லாமல் முழு குடும்பத்தையும் பாதிப்பதுடன் எதிர்மறையான தாக்கங்களையும் ஏற்படுத்துகிறது. வன உயிரின மோதலைத் தடுக்க வன எல்லைகளில் அகழிகள் மற்றும் வேலிகள் அமைத்தல், வன உயிரின நடமாட்டங்களைக் கண்காணித்தல், தீவன மற்றும் நீர்வளங்களை அதிகரிப்பது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மனித உயிரிழப்புகள், பயிர்ச்சேதம் மற்றும் உடைமைகளுக்கு வன உயிரினங்களால் ஏற்படும் சேதங்களுக்கு இழப்பீட்டுத் தொகையை வனத்துறை வழங்கி வருகிறது. 2021–22–ஆம் ஆண்டில், மாநிலத் திட்டத்தின் மூலம் ரூ .10.00 கோடியும், பல்வேறு ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் பகிர்ந்தளிக்கும் திட்டங்களின் கீழ் ரூ.1.26 கோடியும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

### 3.1.5 சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள காப்புக்காடுகள் ஆக்கிரமிப்பு மற்றும் குப்பைகளைக் கொட்டுவதிலிருந்து பாதுகாக்க கான்க்ரீட் சுற்றுச்சுவர் மற்றும் உயிர்வேலி அமைத்தல்

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள காப்புக்காடுகளை ஆக்கிரமித்தல் மற்றும் திடக்கழிவு குப்பைகள் கொட்டுவதிலிருந்து பாதுகாக்க கான்க்ரீட் சுவர் மற்றும் உயிர்வேலி அமைக்கும் திட்டம் ரூ.25.00 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 23.10 கி.மீ. நீளத்திற்கு கான்க்ரீட் சுவர் மற்றும் 141 கி.மீ. நீளத்திற்கு உயிர்வேலி அமைக்கும் பணிகள் ரூ.18.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டன. 2021–22–ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ரூ.257.435 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு திட்டப் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.1.6 வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவினை மேம்படுத்துதல்

சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா 1855ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட நாட்டின் மிகப்பழமையான விலங்கு காட்சி

சாலையானது, தற்போதுள்ள வண்டலூர் காப்புக்காட்டிற்கு 1985–ஆம் ஆண்டு மாற்றப்பட்டு இயங்கி வருகிறது. 602 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இப்பூங்கா தென்கிழக்கு ஆசியாவிலேயே அமைந்துள்ள மிகப்பெரிய உயிரியல் பூங்காக்களில் ஒன்றாகும். விலங்குகளின் இயற்கையான வாழ்விடத்தை உருவகப்படுத்தும் இயற்கையான அமைப்பாகும். நவீன மற்றும் அறிவியல் முறையில் மேலாண்மை செய்யப்படும் இப்பூங்காவானது, உலகளாவிய உயிரியல் பூங்காக்கள் மற்றும் நீர்வாழ் உயிரினப் பூங்கா அமைப்பின் (WAZA) நிறுவன உறுப்பினராகவும் உள்ளது. இப்பூங்காவில் 47 பாலூட்டியின வகைகள், 97 பறவையின வகைகள், 38 ஊர்வன வகைகள் என மொத்தமாக 182 வகையான வன உயிரினங்கள் அடங்கிய 2,382 வன உயிரினங்கள் வளர்க்கப்படுகின்றன.

வன உயிரினங்கள், பயிரினங்கள் மீது அக்கறை செலுத்தி, மனித குலத்தின் நீண்டகால நலனுக்காக அவற்றைப் பாதுகாக்கும் சூழலியல் உணர்வுகொண்ட மக்களைக் கொண்டிருப்பதே அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவின் தொலைநோக்குப் பார்வையாகும்.

- கிழக்கு மற்றும் மேற்குத்தொடர்ச்சி மலைகளிலுள்ள உயிரினங்கள் குறிப்பாக சிங்கவால் குரங்கு, நீலகிரி கருங்குரங்கு, காட்டெருமை மற்றும் சிறு பாலூட்டியினங்களின் பாதுகாப்பு
- பூங்காவில் பேணப்படும் அனைத்து விலங்கினங்களுக்கும் உயர்தர வாழ்விட வசதி, பராமரிப்பு மற்றும் சுகாதார நலன்களை வழங்குதல்
- பூங்காவின் பார்வையாளர்களுக்கு வன உயிரினங்களை தடையின்றிக் காண்பதற்கான வாய்ப்புகள் மற்றும் புரிதல்களை வழங்குதல்
- உயிரியலின் பல்வேறு கூறுகள், அழிந்து வரும் வனஉயிரினங்களின் நடத்தை மற்றும் மரபணு ஒப்பாக்கம் மற்றும் அவற்றின் இனப்பெருக்கத்தினை எளிதாக்குதல் போன்றவை குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.
- பல்வேறு வகைகளில் மீட்கப்பட்ட வனஉயிரினங்களுக்கு தேவையான வாழ்விட வசதி, பேணுகை மற்றும் நலப்பயன்களை வழங்குதல்.

பல அழிந்து வரும் உயிரினங்களின் தலைசிறந்த இனப்பெருக்க மையமாகவும், வனங்களுக்கு வெளியே வெற்றிகரமாகப் பாதுகாக்கும் இடமாகவும் இப்பூங்கா உருப்பெற்றுள்ளது. இதனை அறிந்தேற்கும் வகையில் மத்திய உயிரியல் பூங்கா ஆணையம், சிங்கவால் குரங்கு, நீலகிரி கருங்குரங்கு, நீலகிரி வரையாடு ஆகியவற்றிற்கான ஒருங்கிணைந்த இனப்பெருக்க மையமாகவும், புலிகள், ஒன்றிய காட்டெருமை, சாம்பல் நிற அணில் மற்றும் காட்டு நாய்கள் ஆகியவற்றின் பங்கேற்பு உயிரியல் பூங்காவாகவும் ஏற்பளித்துள்ளது.

இணையதளப் பயனர்களின் எளிதான அணுகலுக்காக, BOT அமைப்பு –தொடர்பு கொள்ள உயிரியல் பூங்காவின் இணையதளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தனித்துவமான இணையதள நுழைவுச்சீட்டுகளுக்கு– விரைவு தகவல் குறியீடு (QR code) உருவாக்கப்பட்டுள்ளது. இணையதளப் பார்வையாளர்களின் கேள்விகளுக்கு சரியான நேரத்தில் பதிலளிக்க டாஷ்போர்டு உதவிப் பலகை உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இணையதளம் மூலம் விலங்குகளைத் தத்தெடுப்பதும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதி ஆதரவின் மூலம், நிசான் நிதியுதவியுடன் உயிரியல் பூங்காவின் இரண்டு இடங்களில் காற்றிலிருந்து தண்ணீருக்கு இரண்டு அலகுகள் நிறுவப்பட்டன. ரெனால்ட் நிசான் டெக்னாலஜி & பிசினஸ் சென்டர் இந்தியா, மஹிந்திரா சிட்டி (Renault Nissan Technology & Business Center India, Mahindra City) ஆகியன வனவிலங்கு ஆம்புலன்ஸ், அடையாளப் பலகைகள், கதிரொளி விளக்குகள் மற்றும் பேட்டரியில் இயங்கும் 2 எண் வாகனங்கள் வழங்கப்பட்டன. உயிரியல் பூங்காக்களில் 3 கழிப்பறைகளுக்கு பாரத ஸ்டேட் வங்கி நிதியுதவி அளித்தது.

ஊரடங்கு காலத்திலும் கூட, உயிரியல் பூங்கா மக்களுடன் மெய்நிகர் தளம் மூலம் இணைந்திருந்தது. மெய்நிகர் உயிரியல் பூங்கா தூதர் திட்டம், வனவிலங்கு பாதுகாப்பு சிக்கல்கள் குறித்த வலைப்பதிவுகள், போட்டிகள் மற்றும் முக்கியமான வனஉயிரின நாட்களில் நிகழ்வுகள் போன்றவைகள் நடத்தப்படுகிறது. உயிரியல் பூங்காவினுள்ள 16 விலங்குகளின் 24x7 நேரலை செய்தல் மக்களிடமிருந்து பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது மற்றும் இதுவரை 6 கோடி பார்வையாளர்கள் கண்டுகளித்துள்ளனர்.

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா பாதுகாப்புக் கல்வியைப் பரப்புதல் மற்றும் மனிதர்கள் மற்றும் வனஉயிரினங்களின் வாழ்வு முக்கியத்துவம் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் பல்வேறு கல்வி நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. இந்த நிகழ்ச்சிகளில், உயிரியல் பூங்காவிலுள்ள பூங்காக் கல்வியாளர்கள் வெளியிடப்பள்ளிகளுக்குச் சென்றும் கல்வி சம்மந்தமான நிகழ்ச்சிகள் நடத்திவருகின்றனர், உயிரியல் பூங்கா தூதர் திட்டம், சிறப்பு கருப்பொருள் பட்டறைகள், உயிரியல் பூங்காவினுள் பயிற்சி, தன்னார்வ நடவடிக்கைகளுக்கான உயிரியல் பூங்கா குழுமம், முக்கியமான வன மற்றும் வனஉயிரின நாள்களைக் கொண்டாடுதல் மற்றும் பல்வேறு போட்டிகள் ஆகியவை இவற்றுள் அடங்கும். உயிரியல் பூங்காவின் பூங்கா பள்ளியின்மூலம் பெரியவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான தனித்த இனங்களின் தூதுவர் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. தேவாங்கு, நீலகிரி கருங்குரங்கு ஆகிய சிறப்பு இனங்களைக் காப்பதற்காக குறிப்பிட்ட தூதர் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

### 3.1.7. உயர்நிலை வன உயிரின பாதுகாப்பு நிறுவனத்தினை மேம்படுத்துதல்

வன உயிரினப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு முயற்சிகளை வலுப்படுத்த சட்ட நடைமுறையில் அறிவியல் அறிவைப் புகுத்தும் நோக்கத்தில் உயர்நிலை வன உயிரினப் பாதுகாப்பு நிறுவனம் (ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் கல்வி) ஏற்படுத்தப்பட்டது. வன உயிரின தடயவியல் மையம், விலங்குகள் பராமரிப்பிற்கான அறிவியல் மையம், பாதுகாப்பு கல்வி மையம் ஆகிய மூன்று செயல்பாட்டு மையங்களை ரூ.7.31 கோடி செலவில் இந்நிறுவனம் நிறுவியுள்ளது. வன உயிரினம் குறித்த ஆய்வுகளுக்கான வளாக வசதிகளை மேம்படுத்த ஒரு பன்னாட்டு ஆராய்ச்சியாளர் விடுதி கட்டுமானத்தில் உள்ளது.

இந்நிறுவனத்தின் வன உயிரியல் தடயவியல் அறிவியல் மையத்தில், உயிரினங்களின் உடல் பாகங்கள், மரபணு (DNA), கழிவு மரபணு போன்றவற்றை ஆய்வு செய்யும் ஆய்வகங்களில் அடிப்படையான வன உயிரின தடயவியல் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 25 பாலூட்டிகள், 10 ஊர்வன இனங்கள் மற்றும் 13 பறவையினங்கள் உள்ளிட்ட தமிழ்நாட்டின்

48 முக்கியமான விலங்கினங்களின் மரபணு குறிப்புத் தகவல் தரவுகளை இந்நிறுவனம் உருவாக்கியுள்ளது. இந்த ஆய்வகங்கள் விலங்குகளின் உடலுறுப்புகளைக் கொண்டு, அவை எந்த வகை உயிரினம் என்பதைக் கண்டறிவதற்காக மிருகங்களின் மண்டை ஓடுகள், நீண்ட எலும்புகள், கொம்புகள், மான் கொம்புகள், தந்தங்கள், மிருகங்களின் ரோம மாதிரிகள், இறகுகள் மற்றும் தோல் பாகங்களின் மாதிரிகளை ஆய்வு செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

வன உயிரினப்பாதுகாப்பில் எதிர்கொள்ளும் அறைகூவல்களைத் திறம்படக் கையாள இந்நிறுவனத்தின் மரபணு (DNA) ஆய்வகங்கள், உருவவியல் ஆய்வகம் மற்றும் விலங்குகளுக்கான நோய் கண்டறியும் ஆய்வகம் போன்றவற்றை வலுப்படுத்துவதுடன், மிகச்சிறந்த வசதிகளையும் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பிற தலைசிறந்த உயர்தர அறிவியல் மையங்களுக்கு ஏற்ப, உரிய தன்னாட்சியுடன் செயல்படும் வகையில் இந்நிறுவனம் மறுசீரமைக்கப்படும். இதற்கென இந்நிறுவனத்தின் கல்வி மற்றும் தொடர்புத்

திட்டத்திலும், பல்வேறு பங்குதாரர்களின் அறிவியல் திறன் மேம்பாட்டிலும் உரிய கவனம் செலுத்தப்படும்.

### 3 .1. 8 வனக் குளங்கள்

மழைநீரைப் பாதுகாப்பதற்கும், நிலத்தடி நீர்மட்டத்தினை உயர்த்துவதற்கும் வனக் குளங்கள் உருவாக்கப்படுகின்றன. குளங்களில் பெறப்படும் நீர், நிலத்தடி நீர்மட்டத்தை மேம்படுத்துவதோடு, பாதுகாக்கப்பட்ட காடுகள் மற்றும் புலிகள் காப்பகப் பகுதிகளில் வறண்ட/ கோடை காலங்களில் வன உயிரினங்களின் பயன்பாட்டிற்கும் தண்ணீர் கிடைக்கும். இத்திட்டமானது, 2022 – 23 ஆம் ஆண்டில் தொடரப்படவுள்ளது.

## 3.2 ஒன்றிய மற்றும் மாநில அரசு பங்கேற்பு திட்டங்கள்

ஒன்றிய அரசும் மாநில அரசும் 60:40 என்ற வீதத்தில் பங்கேற்கும், முக்கியமான ஒன்றிய அரசுத் திட்டங்களாவன:

### 3.2.1 ஒருங்கிணைந்த வன உயிரின வாழ்விடமேம்பாட்டுத் திட்டம்

ஒருங்கிணைந்த வன உயிரின வாழ்விட மேம்பாட்டுத்திட்டம் பின்வரும் முக்கிய இனங்களைக் கொண்டுள்ளது.

- பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு ஆதரவு (தேசிய பூங்காக்கள், வன உயிரின சரணாலயங்கள், பாதுகாக்கப்பட்ட பகுதிகள் மற்றும் சமுதாயப் பகுதிகள்)
- பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளியே வன உயிரினங்களைப் பாதுகாத்தல்
- அழிவின் விளிம்பிலுள்ள இனங்கள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களை மீட்டெடுக்கும் திட்டங்கள்

தேசிய பூங்காக்கள், வன உயிரின சரணாலயங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் மேம்பாட்டுப்பணிகளை மேற்கொள்ள ஒன்றிய அரசு 28 திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது. 2021 – 22ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.8.796 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 2022–23–ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரும்.

### 3.2.2 புலிகள் திட்டம்

வேட்டையாடும் விலங்கினங்களில் முதன்மையானதாக உள்ள புலிகளின் இருப்பு, சூழலியல் அமைப்பின் ஒட்டுமொத்த செழுமையின் ஒரு குறியீடாகவும், அவற்றின் பாதுகாப்பின் முக்கியத்துவத்தினை உணர்த்துவதாகவும் உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள ஆனைமலை புலிகள் காப்பகம், நீலகிரி மாவட்டத்தில் உள்ள முதுமலை புலிகள் காப்பகம், ஈரோடு மாவட்டத்தில் உள்ள சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், தேனி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள திருவில்லிப்புத்தூர்–மேகமலை புலிகள் காப்பகம் என 5 புலிகள் காப்பகங்களில் புலிகளையும் அவற்றின் வாழ்விடங்களையும் பாதுகாக்க வனத்துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. புலிகள் காப்பகங்களில் வாழ்விடப் பாதுகாப்பு தொடர்பான பணிகள், தீத்தடுப்பு உள்ளிட்ட பாதுகாப்பு பணிகள், சூழல் மேம்பாடு, நீர்வளத்தைப் பெருக்குதல், சுற்றுலா மேம்பாடு, மனித–வனஉயிரின மோதல்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குதல் போன்ற பணிகளுக்கு

இத்திட்டம் துணைபுரிகிறது. முக்கிய புலிகள் வாழ்விடங்களில் மனித தலையீடுகளைக் குறைக்கும் விதமாக முதுமலை புலிகள் காப்பக உள்மண்டல பகுதியில் இருந்து 435 குடும்பங்கள் இடப்பெயர்ச்சி செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் தொடர் செலவினத்திற்கு ஒன்றிய மாநில அரசுகளால் 50:50 என்ற பங்கீட்டு அடிப்படையில் நிதியுதவி ஒப்புதலளிக்கப்படுகிறது. 2021 –22 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.36.35 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 2022– 23 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடரப்படவுள்ளது.

### 3.2.3 யானைகள் திட்டம்

அறிவியல் வழி மேலாண்மை மற்றும் வாழ்விடப் பாதுகாப்பு மூலம் யானைகள் பாதுகாப்புத் திட்டத்தினை செயல்படுத்துவதில் முன்னோடி மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். மே–2017ல் கணக்கீட்டின்படி தமிழ்நாட்டில் 2761 யானைகள் உள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. யானைகள் அதிகமாக உள்ள தொடர்ச்சியான நிலப்பரப்பு அமைப்புகள் மேலாண்மை யானைகள் காப்பகம் என வகைப்படுத்தப்பட்டிருப்பதாலும் இதற்கு சட்ட வழியாக அங்கீகாரம் ஏதும் இல்லை. தமிழ்நாட்டில் உள்ள

நான்கு யானைகள் காப்பகங்களில் யானைகள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களைப் பாதுகாக்கும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மனித வன உயிரின மோதல்களால் ஏற்படும் பயிரிழப்புக்காக விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் மனித வனஉயிரினங்களின் மோதல்களால் ஏற்படும் மனித உயிரிழப்பிற்கு நிவாரணம் வழங்குவதோடு, அத்தகைய மோதல்களைக் குறைக்கவும், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2021 –22ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.4.54 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 2022– 23 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடரப்படவுள்ளது.

### 3.2.4 நீலகிரி உயிர்க்கோள் காப்பகத் திட்டம்

மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் தென்னிந்தியாவின் நீலகிரிப் பகுதியில் நீலகிரி உயிர்க்கோள் காப்பகம் அமைந்துள்ளது. இதில் ஈர பசுமை மாறாக் காடுகள், பகுதியளவு பசுமை மாறாக் காடுகள், முட்புதர் காடுகள், சோலை மற்றும் புல்வெளிகள் ஆகியன உள்ளன. ஒட்டுமொத்த 3,300 பூக்கும் தாவர வகைகளில், 132 இனங்கள் நீலகிரி

உயிர்க்கோள் காப்பகத்திற்கு உரித்தான உள்ளூர் வகையைச் சேர்ந்தவையாகும். மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு உரித்தான உள்ளூர் இனங்களான 100 வகையான ஊர்வன மற்றும் நீர்நில வாழ்வன, 300 வகையான பட்டாம்பூச்சிகள், மேற்கு தொடர்ச்சி மலையினை சார்ந்த 31 நீர்நில வாழ்வன மற்றும் 60 ஊர்வன போன்ற உயிரினங்களை நீலகிரி உயிர்க்கோள் காப்பகம் தன்னகத்தே கொண்டுள்ளது. மூன்று தென் மாநிலங்களில் 5,520 ச.கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ள நீலகிரி உயிர்க்கோள் காப்பகம், தமிழக பகுதியில் 2537.6 ச.கி.மீ. பரப்பில் உள்ளது. நீலகிரி உயிர்கோள காப்பகம், நீலகிரி பீடபூமியை முழுவதும் சுற்றியுள்ளது. தமிழ்நாட்டில் நீலகிரி, ஈரோடு, மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் நீலகிரி உயிர்கோள காப்பகம் உள்ளது. இந்த பகுதியானது பயிரினங்களும் மற்றும் உயிரினங்களும் செழுமையாக உள்ளதாகும். 2022–22–ம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படும்.

### 3.2.5 மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பகத் திட்டம்

இராமேசுவரம் முதல் தூத்துக்குடி வரையிலான கடலோரப் பகுதிகளில் பவளப் பாறைகளுக்குப் புகழ்பெற்ற 21 தீவுகளைக் கொண்ட மன்னார்

வளைகுடா உயிர்க்கோள் காப்பகம், 1986–ஆம் ஆண்டில் மன்னார் வளைகுடா கடல்வாழ் உயிரின தேசியப் பூங்கா என தமிழக அரசால் அறிவிக்கை செய்யப்பட்டது. பின்னர் 1989ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் உயிர்க்கோள் காப்பகமாக இக்காப்பகம் மத்திய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டது. 4,223 வகையான பல்வேறு கடல்வாழ் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களைக் கொண்ட செழுமையான உயிர்ப்பன்மையுடன் கூடிய இக்காப்பகம் சுற்றியுள்ள கடல் ஆழமற்ற கடல் பகுதி தவிர, பவளப்பாறை, கடல் புல் மற்றும் அலையாத்தி காடுகளினால் முக்கியத்துவம் பெறுகிறது. மிகவும் அழியும் நிலையில் உள்ள இனங்களுக்கு அதாவது கடல் பசு, சுறா மீன்கள் உள்ளிட்ட திமிங்கல வகை சுறாக்கள், கடற்குதிரைகள், பச்சை நிற கடல் ஆமைகள், டால்பின்கள் மற்றும் கடல் அட்டைகள் போன்றவைக்கு மிகவும் ஆதரவாக இக்காப்பகம் திகழ்கிறது.

உலக சுற்றுச்சூழல் மையம் மற்றும் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின் உதவிபெறும் 'மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பகத்தின் கடலோர பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாடு குறித்த திட்டத்தினை விரைவாக மற்றும் சிறப்பாக

செயல்படுத்துவதை உறுதி செய்ய மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பக அறக்கட்டளை 2001–ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. அறக்கட்டளையின் செயல்பாடுகள் 2003 முதல் 2012–ஆம் ஆண்டு வரை 10 ஆண்டுகளுக்கு மேற்கொள்ளப்பட்டு வந்தன. தொடர்ந்து 2013 முதல் மாநில அரசின் நிதியில் செயல்படுத்தப்படுகிறது. விழிப்புணர்வு ஏற்படுத்துதல், சூழல் மேம்பாட்டுக் குழுக்கள்/கிராம மேலாண்மைக் குழுக்களைப் பலப்படுத்துதல், உயிரினத் தாக்கத்தினைக் குறைத்தல், வாழ்வாதார வாய்ப்புகளைப் பெருக்குதல், பூங்கா மேலாண்மையினைப் பலப்படுத்துதல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் போன்றவை முக்கியமான சாதனைகளாகும். சூழல் மேம்பாட்டுக் குழு / கிராம மேலாண்மைக் குழுக்களுக்காக உருவாக்கப்பட்ட ரூ.8.93 கோடி மதிப்பிலான சிறுநிதி மூலதனத்தின் கீழ், வட்டியின் மூலம் ரூ.4.49 கோடி பயனாளிகளிடமிருந்து வரவு ஈட்டப்பட்டுள்ளது. ரூ.2.27 கோடி வங்கிக் கணக்கில் வட்டியாக வரவு ஈட்டப்பட்டுள்ளது. இச்சாதனைகள், அரசின் தொடர் திட்டங்களுடன் சேர்க்கப்பட்டு ஒருங்கிணைக்கப்படும் .இவ்வளைகுடாப் பகுதிக்காக மத்திய அரசு மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகம் மற்றும்

பவளப்பாறைகள் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை ஆகிய இரு வெவ்வேறு திட்டங்களின் கீழ் நிதியுதவி செய்கிறது. 2022–23–ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படும்.

### 3.2.6. அகத்தியர்மலை உயிர்க்கோள் காப்பகம்

முக்கியமான சூழல் அமைப்பு வகைகள் மற்றும் நில அமைப்புகளை கருத்தில் கொண்டு அகத்தியமலை உயிர்க்கோள் காப்பகமானது உலக உயிர்க்கோள் காப்பகக் கட்டமைப்பில் ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் பண்பாட்டு நிறுவனமான யுனெஸ்கோவால் சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வுயிர்க்கோள் காப்பகத்தின் மொத்தப் பரப்பு 3500.36 ச.கி.மீ. ஆகும். இதில் 1828 ச.கி.மீ. கேரளாவிலும், 1672.36 ச.கி.மீ. தமிழகத்திலும் அமைந்துள்ளது. இவ்வுயிர்க்கோள் காப்பகம் தமிழ்நாட்டில் திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. இத்திட்டம் 2022–23–ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படும்.

### 3.2.7 ஈரநில பாதுகாப்பு மற்றும் மேலாண்மை

தமிழகத்தில் கோடியக்கரை, கழுவேலி மற்றும் பள்ளிக்கரணை ஈரநிலப்பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வாழ்விட மேம்பாடு, வன உயிரினப் பாதுகாப்பு, சூழல் மேம்பாட்டுப் பணிகள், விழிப்புணர்வு, ஆராய்ச்சி, கண்காணிப்பு மற்றும் இயற்கைக் கல்வி போன்ற முக்கிய பணிகள் இத்திட்டத்தில் அடங்கும்.

### 3.2.8 அலையாத்திக்காடுகள் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை

ஆழ்கடல் மற்றும் கடற்கரையோர நீரில் காணப்படும் பெரும்பாலான மீன்களின் இனப்பெருக்க, வளர்ப்பிடமாக ஆற்றுக் கழிமுகங்களில் உள்ள அலையாத்திக்காடுகள் செயல்படுகின்றன. பறவைகள், ஊர்வன மற்றும் பாலூட்டிகளின் இனப்பெருக்கத்திற்கும் இடமளிக்கின்றன. முத்துப்பேட்டை, பிச்சாவரம் மற்றும் இராமநாதபுரம் பகுதியிலுள்ள அலையாத்திக் காடுகள் யாவும் தமிழக வனத்துறையின் கட்டுப்பாட்டில் காப்புக்காடுகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. தரங்குன்றிய இடங்களில் அலையாத்திக்காடுகள் மறுசீரமைப்பு, ஏற்கனவே நடவு செய்யப்பட்ட தாவரங்களின் பராமரிப்பு,

அந்நிய களைத் தாவரங்கள் அகற்றம், வனப்பாதுகாப்பு, சூழல் மேம்பாட்டு நடவடிக்கைகள், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், கூர்ந்தாய்வு மற்றும் மதிப்பீடு ஆகிய முக்கிய வாழ்விட மேம்பாட்டுப் பணிகள் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.2.9 **வனத்தீ தடுப்பு மற்றும் மேலாண்மை**

தீத்தடுப்பு, கண்டறிதல் மற்றும் மேலாண்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே வனத் தீத்தடுப்பு மற்றும் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தீத்தடுப்பு உபகரணங்கள் வாங்குதல், தீப்பற்றுப் பொருட்களை எரித்துக் கட்டுப்படுத்துதல், தீத்தடுப்புக் கோடுகள் அமைத்தல் மற்றும் பராமரிப்பு, மண் மற்றும் ஈரப்பதப்பாதுகாப்புப் பணிகள், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், உள்ளூர் சமுதாயத்தினரின் திறன் மேம்பாட்டுப்பயிற்சி, ஆராய்ச்சி, கண்காணிப்பு போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 4. 2021–22 ஆம் ஆண்டின் புதிய முயற்சிகள்

### 4..1 கோயம்புத்தூர் / முதுமலை, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மீட்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்களை (RTRCs) அமைத்தல்

வன உயிரினங்களின் மீட்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு வனத்துறையின் மிக முக்கியமான முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகும். கால்நடை பராமரிப்புத் துறையைச் சேர்ந்த கால்நடை மருத்துவர்களின் உதவியுடன் காயம் அடைந்து மீட்கப்பட்ட வன விலங்குகளுக்கு வனத்துறை தற்போது சிகிச்சை அளித்து வருகிறது. எனினும தற்போதுள்ள சிகிச்சை வசதிகள் போதுமானதாக இல்லை மற்றும் வனவிலங்கு சிகிச்சை தேவைகளின் தரத்தை நிறைவு செய்யவில்லை. தனிச் சிறப்புடைய மற்றும் நவீன கால்நடை பராமரிப்பு வசதிகள் இல்லாததால், காட்டு விலங்குகளுக்கு தேவையான மருத்துவ சிகிச்சை காலங்கடந்தோ அல்லது குறைவாகவோ அளிக்கப் பட்டு வருகிறது. இந்தச் சூழலில், ஏற்பளிக்கப்பட்ட அரசு நெறிமுறைகளின்படி, நோய்வாய்ப்பட்ட, காயமடைந்த, தனித்து விடப்பட்ட வன விலங்குகளுக்கு சிகிச்சை அளித்து மீண்டும் காட்டில் விடுவதற்காக, அதிநவீன மீட்பு,

சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்களை தமிழ்நாட்டில் அமைப்பது முக்கியம்.

எனவே மூன்று மீட்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்கள் (RTRCs) பின்வரும் நோக்கங்களுடன் அமைக்கப்படும்.

(1) குடியிருப்புகளில் வழிதவறிச் செல்லும் வன விலங்குகள் உட்பட காயமடைந்த, தனித்து விடப்பட்ட மற்றும் நோய்வாய்ப்பட்ட வன விலங்குகளை மீட்டல்.

(2) அறிவியல் பூர்வமாக வன விலங்குகள் தனிமைப்படுத்தல், மறுவாழ்வு மற்றும் அடையாளம் காணப்பட்ட வாழ்விடங்களில் அவற்றை விடுவிப்பதற்கான நிபுணத்துவம் மற்றும் சேவையை வழங்குதல்.

(3) மனித–வன உயிரின மோதல் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுக்கான முன்னணி அமைப்புகளாக செயல்படுதல்.

(4) வன விலங்குகளை மீட்டல் மற்றும் அவற்றின் பாரம்பரிய வாழ்விடங்களில் மறுவாழ்வு செய்வதற்கான நெறிமுறைகளை உருவாக்குதல் மற்றும் தரப்படுத்துதல்.

இந்த மீட்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்கள், வன விலங்குகளுக்கு சிறப்பு சிகிச்சை அளிப்பதற்காக அதிநவீன வசதிகள் மற்றும் நன்கு பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்டு இயங்கும். இந்த மையங்களில் சிறந்த சிகிச்சை மற்றும் கவனிப்பை அளிப்பதற்காக அறுவை சிகிச்சை அரங்குகள், ஆய்வகங்கள் மற்றும் இதர அனைத்து இன்றியமையா நோயறிதல் உபகரணங்களைக் கொண்டிருக்கும். பாதிக்கப்பட்ட வன விலங்குகளை விரைவாகவும், சுமுகமாகவும் மீட்பதற்கு, மீட்புக் குழுக்களுக்கும் இம்மையங்கள் பயிற்சி அளிக்கும்.

இந்த மையங்கள் முதன்முறையாக அமைக்கப்படுவதால், இது தொடர்பாக தேசிய மற்றும் பன்னாட்டு நிபுணர்களுடன் கலந்தாலோசிக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும். வல்லுநர்கள் மற்றும் கள அலுவலர்களுடன் கலந்தாலோசித்து ஒரு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

**4.2 தற்கால, எதிர்காலத் தேவைகளுக்காகவும் வனத்துறையின் செயல்பாடுகளை மின்னணு மயமாக்கல்.**

உலகெங்கிலும் உள்ள மின்னணுதொழில் நுட்பங்கள் வளர்ச்சி மற்றும் சிறந்த மேலாண்மை நடைமுறைகளுக்கு சிறந்த வாய்ப்பை வழங்குகின்றன. வனத்துறையும் விதிவிலக்கல்ல. பல்வேறு மின்னணுக் கருவிகள் மூலம் மேம்படுத்தப்பட்ட வனவியல் நடைமுறைகளை நோக்கி பல சேவைகளை ஆற்றி வருகின்றன. மின்னணு அரங்கில் கிடைக்கும் சிறந்த வாய்ப்பைக் கருத்தில்கொண்டு, சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் பின்வரும் நோக்கங்களுடன் மின்னணு முறையில் தடம் வகித்து இறங்க முடிவுசெய்துள்ளது:–

i. ஆக்கிரமிப்புகளை அடையாளம் காண உதவும் வகையில் வன எல்லைகளை மின்னணுமயமாக்குதல்.

ii. காட்டுத்தீ, வனவிலங்குகள் அழிவு போன்றவற்றை நிகழ்நேர முறையில் கண்காணித்தல்,

iii. இடஞ்சார்ந்த தரவுத்தளத்தின் மையப்படுத்தப்பட்ட களஞ்சியத்தை உருவாக்குதல்

iv. அனைத்து வனவளமேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் வனசொத்துக்களின் புவிகுறியிடல்.
v. வனத்தோட்ட நடவடிக்கைகளைக் கண்காணித்தல்
vi. காலநிலைதாக்க மதிப்பாய்வு
vii. பசுமைமயமாக்குதல் கண்காணிப்பு
viii. வனவிலங்கு பாதைகளின் கண்காணிப்பு
ix. மனிதவன விலங்குமோதல் அறிக்கை
x. எளிதான அணுகல், மீட்டெடுப்பு மற்றும் தகவல்பகிர்வு

இவைகள் அனைத்தும் மதிப்புமிக்க வனவளங்களைக் கண்டறிய உதவும் காரணிகளாகும். இவை முன் முயற்சி ஆதாரம் சார்ந்த முடி வெடுப்பதில் உதவியாக இருக்கும்.

"வன வளங்களை சிறந்த முறையில் நிர்வகிப்பதற்கும், தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளைப் நிறைவு செய்வதற்கும் வனத்துறையின் செயல்பாடுகள் மின்னணுமயமாக்கப்பட வேண்டும், வனத்துறையின் மின்னணுமயமாக்கலின் நோக்கமானது காடு மற்றும் வனவிலங்கு வாழ்விடங்களின் சிறந்த மேலாண்மைக்கான வலுவான புவி–இடஞ்சார்ந்த தரவுத்தளத்தை

உருவாக்குவதாகும். இது திட்ட உருவாக்கம், கண்காணிப்பு, மதிப்பீடு போன்றவற்றிற்கான துல்லியமான, உண்மையான, வெளிப்படையான தரவுத்தளத்தை வழங்கும், இது வனவிலங்குகளின் வலசைபாதை, சுற்றுச்சூழல் மண்டலங்கள், ஈரநிலங்கள், முக்கியத்துவம் வாய்ந்த மண்டலம் போன்றவற்றை வரையறுக்க பயனுள்ளதாக இருக்கும்.

## 4.3 மனித உயிரிழப்பு, நிரந்தர ஊனத்திற்கான இழப்பீடுத்தொகையினை உயர்த்திவழங்கப்படும்

மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான மோதல்களைக் குறைப்பதற்கும், சகவாழ்வை மேம்படுத்துவதற்கும் நன்கு திட்டமிடப்பட்ட ஒருங்கிணைந்த அணுகுமுறையின் மூலம் மனித–வனவிலங்கு மோதலுக்கு போதுமான அளவு தீர்வு காணப்பது மனித மோதல்களின் அணுகுமுறைகளில் ஒன்று. இதனை எதிர்கொள்ளவேண்டி, மனித உயிர் இழப்பு அல்லது நிரந்தர ஊனத்திற்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையை ரூ.4.0 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாக அரசு உயர்த்தியுள்ளது.

## 4.4 தமிழ்நாட்டில் தென்மாவட்ட யானைகள் வாழ்விடங்களைப் பாதுகாக்கும் பொருட்டு அகத்தியர்மலை யானைகள் காப்பகம் ஏற்படுத்தப்படும்

தமிழ்நாட்டில் தற்போது நீலகிரி, கோயம்புத்தூர், ஆனைமலை மற்றும் திருவில்லிப்புத்தூரில் யானைகள் பாதுகாப்பிற்கென்று யானைகள் காப்பகம் ஏற்படுத்தப்பட்டு, யானைகள் திட்டம் மூலம் வாழ்விட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதைப் போல், ஆசிய யானைகள் அவற்றின் வாழ்விடங்களை மேலும் சிறப்பாக மேலாண்மை செய்யும் பொருட்டு கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டத்திலுள்ள யானைகளின் வன வாழ்விடங்களை உள்ளடக்கி தமிழ்நாட்டின் ஐந்தாவது யானைகள் காப்பகமாக அகத்தியர்மலை யானைகள் காப்பகம் ஏற்படுத்தப்படும். இதன்மூலம் ஒருங்கிணைந்த யானைகள் வாழ்விட மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்,

## 4.5. "கடற்பசு பாதுகாப்பகம்" மன்னார் வளைகுடா, பாக் நீரிணை பகுதியில் ஏற்படுத்தப்படுத்துதல்.

பாக் நீரிணை இந்தியாவின் தென்கிழக்கு கடற்கரையில் அமைந்துள்ள ஒரு ஆழமற்ற

கடற்பகுதியாகும். இது கடற்கரையோரத்தில் உள்ள பல ஆறுகளிலிருந்து வரும் நீர்வரத்துடன் இணைந்த நீரிணைவாக இருப்பதன் காரணமாக இப்பகுதி சுற்றுச்சூழல் தனித்தன்மை வாய்ந்துள்ளது. இந்த சதுப்புநிலத்தின் நீரானது அங்குள்ள அலையாத்தி காடுகள் பசுமையாக இருப்பதற்கு உறுதுணையாக உள்ளதால், அங்குள்ள பல்வேறு வகையான பறவைகளும், வலசை பறவைகளும் வாழ்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. இப்பகுதியானது இறால், உட்பட வெவ்வேறு வகையான துடுப்பு–மீன் மற்றும் மத்தி மீன் போன்ற பல்வேறு மீன் இனங்களுக்கு உய்விடமாகத் திகழ்கிறது. இந்த நீரிணைவின் இயற்கை தன்மையானது அடிக்கடி வரும் டால்பின்கள், கடல் விலங்கினங்கள் (போர்போயிஸ்கள்) மற்றும் கடல் ஆமைகளுக்கு இந்த பாதுகாப்பான நீர் பகுதியினைக் கொண்டுள்ளது. பாக் நீரிணையானது சுற்றுச்சூழலில் முக்கிய இடம்பெற்றுள்ள உள்ள தாவரங்கள் மற்றும் விலங்கினங்களை உள்ளடக்கிய பல்லுயிர் வளம் நிறைந்ததாக உள்ளது.

அழிவின் விளிம்பில் உள்ள கடல் பசு இனங்கள் கடற்கரைக்கு அருகில் 10 மீட்டர் ஆழம் வரை உள்ள

ஆழமற்ற நீரில் வாழ்கிறது. இது பாக் நீரிணைவின் முதன்மையான கடல் வாழ் உயிரினமாகும். கடல் புற்கள், கடல் வாழ் தாவரங்கள் இதன் முக்கியமான உணவாகும். அண்மைக்காலங்களில் கட்டுப்பாடற்று மீன்பிடிப்பதாலும் அவற்றின் இறைதேடும் பரப்பு குறைந்து வருவதாலும் அவற்றின் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளது. இருப்பினும், அவை தற்போது வனஉயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972–ன்படி பாதுகாக்கப்பட்டு, அழிவின் விளிம்பில் உள்ள உயிரினங்களின் பிரிவில் பட்டியலிடப்பட்டுள்ளது. எனவே, கடல் பசு பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது உடனடித் தேவையாக உள்ளது.

தமிழ்நாட்டில் அழிந்து வரும் நிலையிலுள்ள மிக அரிதான கடற்பசு இனத்தையும் அதன் கடல் வாழ்விடங்களையும் பாதுகாக்கும் பொருட்டு "கடற்பசு பாதுகாப்பகம்" மன்னார் வளைகுடா, பாக் நீரிணை பகுதியில் ஏற்படுத்தப்படும் என்று 03.09.2021 அன்று அரசால் அறிவிக்கப்பட்டது.

## 4.6 வன மற்றும் வனவிலங்கு குற்றங்களைக் கண்டறிவதற்காக ஒவ்வொரு வன கோட்டத்திற்கும் வன மோப்ப நாய் பிரிவுகள் அமைத்தல்.

நிலையான வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, சமூக நல்வாழ்வு, நிலையான வாழ்வாதாரம் ஆகியவற்றில் வனவிலங்கு குற்றங்கள் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. வனவிலங்குகள் கடத்தல் அச்சுறுத்தலுக்கு உள்ளான அல்லது அழிந்து வரும் உயிரினங்களின் அழிவிற்கு வழிவகுத்து, நமது சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு நிரந்தர அழிவை ஏற்படுத்தும். இதனைத் திறம்பட கட்டுப்படுத்தப்படாவிட்டால், வனவிலங்கு குற்றங்கள் நீண்ட கால சூழலியல் சமநிலையின்மைக்கு வழிவகுத்து, உயிரினங்களின் உயிர்வாழ்வை அச்சுறுத்தும்.

சட்டத்திற்கு எதிரான வனஉயிரின வர்த்தகம் தொடர்ந்து நடைபெறுவதால், அது ஓர் அமைநிலை இயக்கமாக உருவெடுத்து இந்தியாவில் பல உயிரினங்களின் வாழ்தலை அச்சுறுத்துகிறது. சட்டத்தை மீறும் வனஉயிரின வர்த்தகங்களை எதிர்த்துப் போராடுவதற்கான தற்போதைய

வினைப்பாடுகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். வளர்ந்து வரும் இந்த அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த, ஆகச்சிறந்த செயலாக்க நடைமுறைகளைக் கைகொள்ள வேண்டியுள்ளது. குற்றம் கண்டறிதல் மற்றும் தடுப்புக்காக மோப்ப நாய்களை ஈடுபடுத்துவது நீண்டகாலமாக நிரூபிக்கப்பட்ட நடைமுறைகளில் ஒன்றாகும். மேலும், வேட்டையாடுவதைத் தடுப்பதிலும் குற்றங்களைக் கண்டறிவதிலும் உதவி புரிய, சுற்றுக்காவல் செல்வதற்கு மோப்ப நாய்கள் பெரும் பயனுள்ளதாக இருப்பதை உறுதி செய்துள்ளன.

தமிழகத்தில் வனவிலங்கு குற்றங்களை திறம்படக் கட்டுப்படுத்த அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், அரசு தமிழ்நாடு வனத்துறையில் பின்வரும் நோக்கங்களுடன் ஆறு வன மோப்ப நாய் படைப் பிரிவுகளை அமைக்க முடிவு செய்துள்ளது.

- பயனுள்ள சுற்றுக்காவல் உள்ளிட்ட வீறுமிக்க நடவடிக்கைகள் மூலம் குற்றச்செயல்கள் அதிகம் உள்ள பகுதிகளில் சட்டமீறிய வனஉயிரின வர்த்தகம், வேட்டையாடுதல் மற்றும் கடத்தல் ஆகியவை தடுக்கப்படும்.

- வனஉயிரின குற்ற வழக்குகளைக் கண்டறிவதற்கான கள நடவடிக்கைகளில் வனவிலங்கு கட்டுப்பாட்டுப் பணியகத்தின் முயற்சிகளை வலுப்படுத்துதல். விசாரணைகள் மற்றும் வழக்குத் தொடர சாட்சியங்களைச் சேகரிப்பதில் உதவுதல்.
- எலும்புகள், தோல்கள், உறுப்புகள், விலங்கு உறுப்புகள் சார்ந்த செய்பொருட்கள் போன்ற வனவிலங்கு குற்றப் பொருட்கள் கண்டறிதல் மற்றும் அறிவுசார் தரவுக் களஞ்சியத்தை உருவாக்குதல்.
- 03.09.2021 அன்று சட்டமன்றத்தில் அரசு பின்வரும் அறிவிப்பை வெளியிட்டது, "வனவிலங்கு குற்றங்களைக் கண்டறிய ஒவ்வொரு வனக் கோட்டத்திற்கும் வன மோப்ப நாய் பிரிவுகள் அமைக்கப்படும்".

**4.7. கடலோர மற்றும் கடல் பல்லுயிர்களின் பாதுகாப்பு, வனஉயிரின வேட்டையாடுதல் மற்றும் கடலோரப் பகுதிகளில் சட்டவிரோத வணிகம் ஆகியவற்றைத் தடுப்பதற்காக இரண்டு பிரிவுகளுடன் கடல்சார் உயர் இலக்கு படையை நிறுவுதல் – மன்னார் வளைகுடா கடல் தேசிய பூங்கா மற்றும் பாக் நீரினை பகுதிகள் உள்ளிட மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகத்தினை மையமாகக் கொண்ட தமிழ்நாட்டின்**

**கடலோரப் பகுதிகளில் வன உயிரினங்கள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களைப் பாதிக்கும் பேரழிவுகளைத் தணித்தல்.**

ஒன்றியப் பெருங்கடல், பாக் நீரினை மற்றும் வங்காள நீரினைவில் பரந்து விரிந்த தனித்துவமான கடல் வளங்களைக் கொண்ட தமிழகம் சுமார் 1076 கிமீ நீளமான கடற்கரையைக் கொண்டுள்ளது. பாக் நீரினை மற்றும் மன்னார் வளைகுடா தோரயமாக 675 கிமீ நீளமான கடற்கரையைக் கொண்டுள்ளன. மன்னார் வளைகுடா கடல்வாழ் உயிரினங்களின் வளமான வகைகளைக் கொண்டுள்ளது.

திமிங்கலங்கள், டால்பின்கள், போர்போயிஸ்கள் மற்றும் கடல் ஆமைகள் போன்ற பருவகால புலம்பெயர்ந்த கடல்வாழ் பாலூட்டிகளைத் தவிர, மற்ற அழிந்து வரும் பவளப்பாறைகள், கடற்புற்கள், மீன்கள், மொலஸ்கள், துடுப்பு மீன்கள் கடற்பாசிகள் மற்றும் பவளப் பாறைகள், பாறைக் கரைகள், மணல் கடற்கரைகள், மண் அடுக்குகள், முகத்துவாரங்கள், சதுப்புநிலக் காடுகள், கடற்பாசிகள் மற்றும் கடல் புல்கள் போன்ற குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கும் தாயகமாக உள்ளது. மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீரினை "உயிரியலாளர்களின் பிண்ணகம்" என்று

கருதப்படுகிறது. 4223 வகையான தாவரங்கள், விலங்கினங்களின் பதிவு பல ஆண்டுகளாக பல்வேறு ஆய்வாளர்களால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார காரணங்களுக்காக கடல் வளங்கள் தொடர்ந்து சுரண்டப்படுகின்றன. பல பாதுகாக்கப்பட்ட கடல் இனங்கள் வேட்டையாடுபவர்கள் மற்றும் கடத்தல்காரர்களால் சட்டத்திற்கு எதிராக வேட்டையாடப்படுகின்றன, ஏனெனில் அவை உள்நாட்டு மற்றும் பன்னாட்டு சட்டத்திற்கு எதிராக வனவிலங்கு சந்தைகளில் பெரும் விலையைப் பெறுகின்றன. இவ்வாறு, அரிய மற்றும் அழிந்து வரும் பல உயிரினங்கள் அதிகப்படியான சுரண்டல் காரணமாக தொடர்ச்சியான அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன. தடைசெய்யப்பட்ட இழுவை வலை மீன்பிடித்தல் மற்றும் பிற சட்டவிரோத மீன்பிடி முறைகள் ஆகியவை கடல் இனங்கள் மீது கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. கடல் ஆமைகள், கடல் அட்டைகள், கடல் குதிரைகள், சுறாக்கள், திருக்கை மீன்கள், குழாய் மீன்கள், கடல் பசு, டால்பின்கள் மற்றும் கடல் ஓடுகள் ஆகியவை அதிகபடியான வேட்டைக்குள்ளாகின்றன.

மேற்கூறியவற்றை, நிவர்த்தி செய்வதற்கும், மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகத்தில் குறிப்பாக மன்னார் வளைகுடா கடல் தேசிய பூங்கா மற்றும் பாக் நீரிணைவில் உள்ள சூழலியல் உணர்திறன் வாய்ந்த கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும், தொழில்முறை பயிற்சி மற்றும் வெளிப்பாட்டுடன் கடல்சார் உயர் இலக்கு படையை நிறுவ அரசு திட்டமிட்டுள்ளது. அதன் நோக்கங்களாவன:–

- கடல் பகுதியின் பாதுகாப்பு மற்றும் நிலையான மேலாண்மையை வலுப்படுத்துதல்.
- கடல் மற்றும் கடலோர வனவிலங்குகளைப் பாதிக்கும் பேரிடர் மேலாண்மை.
- திறன் மேம்பாடு
- புலனாய்வு சேகரிப்பு மற்றும் பரப்புதல்.

கடல்சார் உயர் இலக்கு படையின் முக்கிய கூறுகள் பின்வருமாறு–:

1. கடல்சார் உயர் இலக்குப் படையின் இரண்டு பிரிவுகளை நிறுவுதல்
2. ஒப்பந்த அடிப்படையில் ஒரு பிரிவிற்கு ஐந்து கடல்சார் காவலர்களைப் பணியமர்த்துதல்.
3. இரண்டு ஆழமான நீர் படகுகளை வாங்குதல்
4. இரண்டு படகு ஓட்டுநர்களை பணியமர்த்தல்.

5. கடல்சார் காவலர்கள் / படகு ஓட்டுநர்களுக்கு உணவு / சிறப்பு படிகள் / இடர் படிகள் வழங்குதல்
6. சுற்றுக்காவல் செல்லும் படகுகளுக்கு எரிபொருள் வழங்குதல்
7. உளவுத்தகவல் சேகரிப்பு மற்றும் தரவுப் பகிர்வு அதாவது சுங்கம், கடலோர காவல்படை, கடற்படை, மற்றும் மீன்வளத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைசார் அலுவலர்களுடன் உரையாடல் சந்திப்பு.
8. உயிர்க் காப்புடை, கண்காணிப்பு கேமிராக்கள், அகச்சிவப்பு (IR) கேமிராக்கள், காப்பு மற்றும் ஆழ்கடல் கண்காணிப்பு உபகரணங்கள் போன்ற பொருத்தமான கடல் கள உபகரணங்கள் வழங்குதல்.
9. கையடக்க எண்மத் தகவல் தொடர்புக் கருவிகளை (Transceivers) வழங்குதல்.
10. முகாம் உபகரணங்கள் இரவு நேர விளக்கு, கை விளக்கு, கூடாரங்கள் போன்றவற்றை வழங்குதல்,
11. கைச்சுவடிகள், சுவரொட்டிகள், துண்டு அறிக்கைகள் போன்றவற்றை வழங்குதல்.

**4.8 தமிழ்நாட்டில் உள்ள காடுகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக. காடுகளில் பல்கி பெருகியுள்ள அந்நிய களைத் தாவரங்களை அகற்றுவதற்கான தனிக் கொள்கையை உருவாக்குதல்.**

வனங்களில் பலுகி பெருகியுள்ள அந்நிய களைத் தாவரங்கள் கடுமையான பொருளாதார பாதிப்பையும், சுற்றுச்சூழல் அழிவையும் ஏற்படுத்துவதோடு சுற்றுச்சூழல் நலக்கேட்டையும் ஏற்படுத்துகின்றன. குறிப்பாக பலுகிப் பெருகியுள்ள அந்நிய தாவர இனங்கள், உயிரிப்பன்மையைப் பாதித்து உள்நாட்டு தாவரங்களை அழித்தும், நோய் கிருமிகளைப் பரப்புதல் மூலம் சூழலியல் அமைப்புகளைச் சீர்குலைத்தும் பூர்வீக உயிர்கள் அழிவுக்கும் வழிவகுக்கிறது. இந்த அந்நிய தாவர இனங்களின் மிகுதியால் பல்லுயிர் பெருக்கத்தும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

பலுகிப் பெருகும் அந்நிய தாவரங்களின் அச்சுறுத்தல் நேரடியாகவோ மறைமுகமாகவோ இருக்கலாம். மறைமுகமாக அந்நிய இனங்கள் சூழலியல் அமைப்பில் உணவு வலையை சீர்குலைப்பதன் மூலம் உள்நாட்டு இனங்களை ஒடுக்குகின்றன. பலுகிப் பெருகும் அந்நிய

உயிரினங்கள் உள்நாட்டு உயிரினங்களின் வளம், உயிர்ப்பன்மை, வாழ்விடம் ஆகியவற்றை பாதிக்கின்றன. ஊடுருவும் அந்நிய தாவர இனங்களின் பெருக்கத்தினால் மகரந்தச் சேர்க்கையில் குறுக்கிடுவதன் மூலமும் உள்நாட்டு தாவரங்களின் வளம் அழிக்கப்பட்டு, இனப்பெருக்கம் தடைப்படுவதால் விலங்கினங்கள் இடமாற்றம் மூலம் காடுகளின் கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுத்துவதாக அறியப்படுகிறது.

தொழில் மற்றும் வணிகத் தேவைகளைக் கருதி சீகை, பைன் மற்றும் தைல மரங்கள் தமிழ்நாட்டின் பல்வேறு வனப் பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டன. எனினும், இம்மர இனங்கள் அப்பகுதியின் சுற்றுச்சூழலில் குறிப்பாக நீரியல், காடு/ சமூக புல்வெளிகளை பாதிப்பதால் மனித–வனவிலங்கு மோதலை தீவிரப்படுத்த வழிவகுக்கின்றன.

தமிழ்நாட்டின் வனப்பகுதிகளில் பல்கி பெருகும் அந்நிய தாவர இனங்களின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள பொருத்தமான உள்ளூர் தாவரங்களுக்கு முன்னுரிமை அளித்து, ஊடுருவும் அந்நிய தாவர இனங்களின் பெருக்கத்தை

நிர்வகிப்பதற்கான உத்திகளை உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது. கடந்த காலங்களில், இந்தியாவில் ஊடுருவும் அந்நிய தாவர இனங்களின் பட்டியலைத் தொகுக்கவும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஊடுருவும் அந்நிய தாவர இனங்களின் தாக்கத்தை ஆய்வு செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும், கடுமையான அச்சுறுத்தலைக் கருத்தில் கொண்டு ஊடுருவியுள்ள அந்நிய தாவர இனங்களை நடப்பிலுள்ள மேலாண்மை மற்றும் கட்டுப்படுத்தும் முறைகளை பின்பற்றி அந்நிய களைத் தாவரங்களை கட்டுப்படுத்தி அழிக்க விரிவான கொள்கைக் கட்டமைப்பு உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டின் வனப் பகுதிகளில் ஊடுருவியுள்ள அந்நிய தாவர இனங்களை சம காலத்தில் மேலாண்மை செய்து அழிப்பதற்கும் இந்தக் கொள்கை உதவும். வனப்பகுதிகளில் மிகவும் சிக்கல் வாய்ந்த அந்நிய தாவர இனங்களை நிர்வகிப்பதற்கான உத்திகள், வழிமுறைகள், நெறிமுறைகளை உருவாக்குதல் / விரிவாக்கம் செய்வதில் முதன்மை கவனம் செலுத்தப்பட வேண்டும். குறிப்பாக உண்ணி, சீமை கருவேல் மற்றும் சீகை, பார்த்தீனியம் போன்ற அந்நிய தாவர இனங்களை அழித்து வனவிலங்குகளின் உயிர் வாழ்விட நலனை

மீட்டெடுப்பதற்கும், வன விலங்குகள் வனத்திலிருந்து வெளியே வருவதைத் தவிர்க்கவும் உரிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

### 4.9. வன ஆவணக் காப்பகம் மற்றும் வனத்தரவு மையம்.

தமிழ்நாடு வனத்துறை மிகவும் வளமான வரலாறு மற்றும் பல்லுயிர்ப் பெருமரபைக் கொண்டுள்ளது. 1856–ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இத்துறையானது 160 ஆண்டுகளில் மிகப்பெரிய அளவில் வளர்ந்துள்ளது. இத்துறையில் காடுகளின் வளமான மரபு அவற்றின் மேலாண்மை அமைப்புகள் மற்றும் பாதுகாப்பு முயற்சிகளை உள்ளடக்கிய பல வரலாற்று ஆவணங்கள், ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள், குறிப்புதவிப் நூல்கள் ஆகியவை உள்ளது. வனப்பாதுகாப்பு, பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் வனவிலங்கு மேலாண்மை ஆகிய துறைகளில் ஈர்க்கக்கூடியபணிகளைக் கொண்ட இந்தியாவின் பழமையான வனத் துறைகளில் இதுவும் ஒன்றாகும் என்பதில் பெருமைப்படலாம். எனினும், வனம் தொடர்பான பொருள்களின் ஈர்க்கக் கூடிய சேகரிப்பு இருந்தாலும், தரவுகளையும் தகவல்களையும் எளிதாகப் பேணுவதற்கேற்ற எந்த வனக்களஞ்சியமும் இல்லை. எனவே, வனத் தகவல்களின் மின்னணு

களஞ்சியத்தை உருவாக்குவது எதிர்கால வனக்காப்பு முயற்சிகளுக்கு மிகவும் பயனுள்ளதாகவும் எதிர்கால தலைமுறையினருக்கான தகவலைப் பாதுகாக்கவும், பயன் பெறவும் உதவும்.

வன ஆவணக்காப்பகம் மற்றும் தரவுமையம் அமைக்கப்படும் என்று செப்டம்பர் 3, 2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் அரசால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பின் படி, தமிழ்நாடு வன ஆவணக்காப்பகங்கள் மற்றும் தரவுமையம் (TNFADC) தமிழ்நாட்டின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் மற்றும் அதன் வளமான பாதுகாப்பு வரலாறு பற்றிய மதிப்பு மிகுந்த தகவல்களஞ்சியம் சென்னையில் அமைக்கப்படவுள்ளது. தமிழ்நாடு வன ஆவணக்காப்பகம் மற்றும் தரவுமையம் அமைப்பதன் மூலம் தமிழ்நாடு வன செயல்பாடுகள் பற்றிய கூடுதல் புரிதலுக்குப் பங்களிக்கும் தகவல்களை விரைவாகவும் அர்த்தமுள்ளதாகவும் பொருட்செறிவுடன் பெறுவதற்கும் அத்தகைய முழுவளத்தையும் ஒருமின் நூலகமாக ஆக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும். தமிழ்நாடு வன ஆவணக்காப்பகம் மற்றும் தரவுமையம் வனப்பாதுகாப்பு தொடர்பான கருவூலகாப்பகப் பொருட்களின் "பாதுகாப்பு பெட்டகம்" ஆகும்.

தமிழ்நாடு வன ஆவணக்காப்பகம் மற்றும் தரவுமையம் பின்வருவனவற்றின் களஞ்சியமாகத் திகழும்:–

i. வன ஆராய்ச்சி அறிக்கைகள்
ii. அறிவியல் வெளியீடுகள் மற்றும் ஆவணங்கள்
iii. அரசாங்க ஆணைகள் மற்றும் அரசிதழ் அறிவிப்புகள்
iv. பழைய கையெழுத்துப் பிரதிகள் மற்றும் வரலாற்றுக் குறிப்புகள்
v. வன வரைபடங்கள்
vi. வன தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் புத்தகங்கள் கையேடுகள், மூலிகை செடிகள்
vii. அரிய புகைப்படங்கள்
viii. வனச் செயல்திட்டங்கள், மேலாண்மைத் திட்டங்கள் மற்றும் ஆண்டு அறிக்கைகள்
ix. ஆராய்ச்சி வெளியீடுகள்
x. வனம் தொடர்பான புத்தகங்கள், காலமுறை வெளியீடுகள், செய்தி மடல்கள்
xi. வனகையேடுகள் மற்றும் நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் (SOPகள்)

xii. பாதுகாப்பு இயக்கத்தை உள்ளடக்கிய தனித்துவமான வளங்கள்

xiii. உலகெங்கிலும் உள்ள வனம் தொடர்பான வளங்கள்

xiv. தமிழ்நாடு வனத்துறையின் பரிணாம வளர்ச்சியின் வரலாற்றை ஆவணப்படுத்தும் அரிய புகைப்படங்கள், புகைப் படசுருள்கள் எதிர்மங்கள், குறுந்தகடுகள்.

xv. கட்டுரைகள், கடிதங்கள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் ஒளிப்படங்கள் போன்றவற்றின் பிரதிகள் உட்பட வனசேவை தொடர்பான வரலாற்றுக் குறிப்புகளின் தொகுப்பு.

xvi. விருதுகள், ஆராய்ச்சிகள் போன்றவற்றின் புகைப்படங்கள் மற்றும் விவரங்கள்.

xvii. ஒன்றிய, மாநில அரசுகளின் ஏற்பு பெற்ற, வனங்கள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான செயல் திட்டங்கள் மற்றும் தொலைநோக்கு ஆவணங்கள்

தமிழ்நாடு வன ஆவணக்காப்பகம் மற்றும் தரவுமையம் அமைப்பதன் மூலம் ஆராய்ச்சி, வெளியீடு

மற்றும் கல்விப் பரப்பில் நிறைந்த பயன் விளையும். வனங்களின் வரலாறு, இயற்கை வளங்கள் மற்றும் மேலாண்மை நுட்பங்களில் ஆர்வமுள்ள எவருக்கும் தமிழ்நாடு வன ஆவணக்காப்பகம் மற்றும் தரவுமையம் மதிப்புமிக்கதாக இருக்கும். ஆராய்ச்சி மாணவர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் முதற்கொண்டு இந்தியா மட்டுமின்றி உலகம் முழுவதும் உள்ள மாணவர்கள், பத்திரிகையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் வனங்கள் மற்றும் சுற்றுச் சூழலில் ஆர்வமுள்ளவர்களுக்கும் இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

தமிழ்நாடு வன ஆவணக்காப்பகம் மற்றும் தரவுமையம் சேதமடையகக் கூடிய வரலாற்று மற்றும் அறிவியல் பதிவுகளை நிரந்தரமாகப் பாதுகாப்பதில் பெரும் பங்கு அளிக்கும். தமிழ்நாடு வன ஆவணக்காப்பகம் மற்றும் தரவுமையம் அமைப்பு வெற்றிகரமாக ஆவணப்படுத்தி, தமிழ்நாடு வனத்துறையின் மரபு பெருமையை வெளி உலகத்துக்குப் பாதுகாத்துப் பறைசாற்றும். இந்தக் களஞ்சியம் வனத்துறையினர், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களின் தற்போதைய மற்றும் வருங்காலத் தலைமுறையினரை உறுதியாக ஊக்குவிக்கும். இதை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாராகி வருகிறது.

## 4.10 திட்டமிட்ட வன மற்றும் வன உயிரினக் குற்றங்களை கண்டறிதல் மற்றும் தடுப்பதற்காக மாநில அளவில் வன மற்றும் வன உயிரினக் குற்றக் கட்டுப்பாட்டுப் பிரிவு அமைத்தல்:

வன மற்றும் வன உயிரினக் குற்றங்கள் தாவர மற்றும் விலங்கினப் பன்மையை மிகுதியாக பாதிப்பதோடல்லாமல் சூழல்மண்டலத்தையும் பெரும் பாதிப்புக்குள்ளாக்குகிறது. வேட்டையாடுதல் மற்றும் திட்டமிட்ட, சட்டத்திற்குப் புறம்பான வன உயிரின வாணிகம் போன்றவை, உயிரினப் பன்மையின் மீது அதிதீவிர விளைவுகளை ஏற்படுத்துகிறது. மேலும், இவை அரிய வகை உயிரினங்களின் இழப்பிற்குக் காரணமாவதோடு, நிலைத்த மற்றும் சமமான வளர்ச்சியை அச்சுறுத்துகிறது. தமிழ்நாடு, 15 வன உயிரினச் சரணாலயங்கள், 16 பறவைகள் சரணாலயங்கள், 5 புலிகள் காப்பகங்கள், 5 தேசியப் பூங்காக்கள் மற்றும் 3 உயிர்கோளப் பெட்டகங்கள் ஆகியவற்றைக் கொண்டு, இந்தியாவின் வளமிகு உயிரினப் பன்மைப் பகுதிகளில் ஒன்றாகவும், தாவரப் பன்மையில் இந்தியாவிலேயே முதலாவதாகவும் உள்ளது.

தமிழ்நாட்டின் வன மற்றும் வன உயிரின வளங்கள் ஈடு இணையற்றவை. எனவே, தமிழகத்தில் வனம் மற்றும் வனவிலங்கு வளங்களின் பாதுகாப்பு அதிமுக்கியத்துவம் பெறுகிறது. தமிழகத்தின் வளமான பல்லுயிர் பெருக்கத்தை பாதுகாக்கவும், சட்டத்தை மீறிய வனம் மற்றும் வனவிலங்கு வர்த்தகத்தைத் தடுக்கவும், மாநில அளவில் திட்டமிட்ட வனம் மற்றும் வன உயிரினக் குற்றங்களைக் கண்டறிந்து தடுக்கவும், பின்வரும் நோக்கங்களுடன் வனம் மற்றும் வன உயிரினக் குற்றக் கட்டுப்பாட்டுப் பிரிவு அமைக்கப்பட வேண்டும்.

1. பயிற்சி பெற்ற வன ஊழியர்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட நிறுவன அமைப்பு மூலம் வன உயிரினக் குற்றங்களை எதிர்த்துப் போராடுதல்.
2. எல்லை தாண்டிய வர்த்தகத்தை உள்ளடக்கிய சட்டவிரோத வர்த்தகம் மற்றும் வன உயிரினக் குற்றம் தொடர்பான தகவல்களை சேகரித்தல்.
3. வன மற்றும் வன உயிரினக் குற்றங்களைக் குறைத்தல் மற்றும் கட்டுப்படுத்தும் நோக்கில், பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டு அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து உளவுச் செய்திகள் மற்றும் தகவல்களைப் பெறுதல்.

4. விசாரணை அமைப்புகளுக்கு உதவுவதற்காக, மாநில அளவிலான வன மற்றும் வன உயிரினக் குற்றத் தரவு வங்கியை உருவாக்குதல்.
5. வன மற்றும் வன உயிரினக் குற்றங்கள் தொடர்பான பல்வேறு நிலையான செயல்பாட்டு நெறிமுறைகளை உருவாக்கி செயல்படுத்துதல்.
6. சட்டத்தை மீறிய வர்த்தகத்தை திறம்படக் கண்காணிப்பதற்காக, அரசு துறைகளில் இருந்து பல ஆண்டுகளாக நன்கு பயிற்சி பெற்ற அதிகாரிகளை உள்ளடக்கிய அமைப்பை உருவாக்குதல்.
7. சட்டத்தை மீறிய வன உயிரின வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும், சிறந்த விசாரணைக்காகவும், பங்களிக்கும் ஆதாரங்களை சிறப்பாக மதிப்பிடுவதற்காக விசாரணையின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் விசாரணைக்கு ஆதாரங்களை அளிப்பவர்களை உரிய முறையில் பாராட்டுதல்.
8. வன மற்றும் வன உயிரின வாழ்விடங்களுக்கு அருகில் வசிக்கும் உள்ளூர் சமூகங்களிடையே தகவல் அளிப்போர் வலையத்தை உருவாக்குதல்

9. வேட்டையாடுதல் மற்றும் சட்டவிரோத வர்த்தகம் மிகுந்த இடங்களை உள்ளடக்கிய மாநில வரைபடம் தயாரிப்பதன் மூலம் அவற்றை முழு வீச்சுடன் தடுத்தல்

தமிழ்நாடு வன மற்றும் வன உயிரினக் குற்றக் கட்டுப்பாட்டுப் பிரிவு (TN FWCB), வன மற்றும் வன உயிரினக் குற்றங்களின் அண்மைப் போக்குகள் மற்றும் அதன் வகைகள் தொடர்புடைய மாதிரிகளைப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும். இது குற்றவியல் நுண்ணறிவு சேகரிப்பு மற்றும் வன மற்றும் வன உயிரினச் சட்டங்களைத் திறம்பட அமலாக்குவதில், தகவல் தொழில்நுட்பம் மூலம் தீர்வு காண வனத்துறைக்கு அதிகாரம் அளிக்கும்.

தமிழ்நாடு வன மற்றும் வன உயிரினக் குற்றக் கட்டுப்பாட்டுப் பிரிவு (TN FWCB), வன மற்றும் வன உயிரினக் குற்றங்கள், வனக் குற்றவாளிகள் மற்றும் திட்டமிட்ட வனவிலங்கு கடத்தல் சம்பவங்கள் பற்றிய மாநில அளவிலான தரவுகளை உருவாக்கி பராமரிக்க வேண்டும். மேலும் அது, சுங்கத் துறை, வருவாய் புலனாய்வுத் துறை, மாநில காவல்துறை மற்றும் பிற மாநில வனத் துறைகள் போன்ற புலனாய்வு அமைப்புகளுடன் இணைந்து, தேவையான தகவல் தொழில்நுட்ப நடைமுறைகள் மற்றும்

வன மற்றும் உயிரினக் குற்றத் தகவல்களைப் பயன்படுத்தும். இவை, தற்காலத்தில் மாற்றம் பெற்று வரும் குற்றங்கள் மற்றும் குற்றவியல் நடைமுறைகளுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ள உதவும்.

இதன் தலைமையகம் சென்னையில் அமைக்கப்படும். மேலும் சென்னை, கோவை, மதுரை மற்றும் ராமநாதபுரத்தில் நான்கு மண்டல அலுவலகங்கள் அமைக்கப்படும். முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத் துறைத்தலைவர்) தலைமையில் இப்பிரிவினை நிறுவுவதற்காக, விரிவான மற்றும் துல்லியமான திட்டமிடலுக்காக நிபுணர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

### 4.11 வனப்பாதுகாப்புப் படையினை நவீனமயமாக்கல்

2021–2022–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை உரையில் அறிவித்ததின்படி, ஆளில்லா விமானங்கள் செயற்கை நுண்ணறிவு, தகவல் மேலாண்மை அமைப்புகள், நவீன ஆயுதங்கள் மற்றும் வன நிலப்பரப்பிற்கேற்ற வாகனங்கள் உள்ளிட்ட நவீன கருவிகளுடன் வனப் பாதுகாப்பு படையை நவீனப்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 5 . இயக்கங்கள்

### 5.1 பசுமை தமிழகம்

புவியில் உயிர்கள் நிலைத்திருக்க வனமும் மரமும் அவசியம். பொருளாதார வளம், நிலையான வாழ்வாதாரம், உயிர்ப்பன்மை பாதுகாப்பு, நிலையான விவசாயம் மற்றும் உணவு பாதுகாப்பில் வனமும் மரமும் முக்கியப் பங்கு வகிக்கின்றது. மேலும், கார்பன் சேமிப்பு மற்றும் காலநிலை மாற்ற சவால்களை சமாளிப்பதிலும் வனமும், மரமும் பெரும் பங்காற்றுகின்றன.

எதிர்மறையான காலநிலை தாக்கங்களை குறைப்பதற்கும், சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரத்திற்கும் வனம் மற்றும் வனப்பரப்பை அதிகரிப்பது முக்கியமான ஒன்றாகும். அண்மைக் காலங்களில் பருவநிலை மாற்றத்தினால் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் அதிகமானதால் கடலோரப் பகுதிகள், நகர குடியிருப்புகள், வேளாண் நிலங்கள், வனங்கள், புல்வெளிகள், மனித உடைமைகள் மற்றும் உயிர் பன்மைக்கு அதிகமான அச்சங்கள் ஏற்பட்டுள்ளன.

மரங்களே, இயற்கையின் பருவ நிலை மாற்றத்திற்கு தலையாய தீர்வாக இருப்பதுடன், பருவ நிலை மாற்ற மேலாண்மையில் அவை உறுபயன் நல்குகின்றன. மரம் நடுதல் மட்டுமே ஒரு தீர்வாக இருக்க முடியாது என்றாலும், வனப்பரப்பை அதிகரிப்பது நிலைத்த, தூய, பசுமையான வருங்காலத்திற்கு தனித்துவமிக்க தேவையாகும். தீவனம், மரம் போன்ற தேவைகளுக்கு மரத் தோட்டங்கள் முக்கியமான ஆதாரமாக விளங்குகிறது. வேளாண்காடுகள், விவசாயம் மற்றும் விவசாயிகளுக்கு ஏற்படும் அழிவுகளிலிருந்து காப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மரங்கள் கார்பன் சேமிப்பிலும், மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதிலும், மக்களால் ஏற்படும் தாக்கங்களைக் குறைப்பதிலும் பெரும் பங்கு வகிக்கிறது.

பருவநிலை மாற்றங்களைக் கடைப்பிடிப்பதிலும், சேதாரங்களைக் குறைப்பதிலும் வனம் மற்றும் மரப் பரப்பினை அங்கிகரித்து தமிழ்நாடு அரசு வனம் மற்றும் வனப்பரப்பினை நிலைத்த மேலாண்மை செய்ய உறுதி பூண்டுள்ளது. 2030 ஆம்

ஆண்டு வாக்கில் வனப்பரப்பை அதிகரித்து 2.5 முதல் 3 இலட்சம் பில்லியன் டன் கார்பன் மடுக்களை உருவாக்குவதில் பாரிஸ் ஒப்பந்தத்தின்படி தேசிய பங்களிப்பு முயற்சியில் இணைந்து கீழ்க்கண்ட இரண்டு உத்திகளின்படி செயல்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

(i) மழை மற்றும் வெப்ப அதிகரிப்புகளுக்கு ஏற்ப வளர தகுந்ததாகவும் உயிர்ப்பன்மையை மேம்படுத்த வாய்ப்புள்ள உள்ளூர் மரங்களை வளர்த்து, வன நிலங்களை மறு சீரமைத்தல் மூலம் பருவ நிலை மாற்ற சிக்கல்களை சமாளித்தல்.

(ii) வனப்பகுதிக்கு வெளியே மரப்பரப்பை அதிகரித்து பருவ நிலை மாற்றங்களைத் தகவமைத்துக் குறைக்கவும் மற்றும் வேளாண் காடுகள்–வளர்ப்பு மூலம் விவசாய சமூகத்திற்கு வருமானப் பெருக்க வாய்ப்புகளை உருவாக்குதல். மாண்புமிகு நிதியமைச்சர் சட்டமன்றத்தில் 2021–22 ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை முன்வைத்தபோது, (13.08.2021) "மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில்,

2030–31 ஆண்டுக்குள் வனம் மற்றும் மரப்பரப்பை தமிழக புவிப்பரப்பின் 23.08 சதவீதத்திலிருந்து 33 சதவீதமாக உயர்த்துவதற்காக 'பசுமைத் தமிழ்நாடு திட்டம்' தொடங்கப்படும்" என்று அறிவித்தார்கள்.

மேற்காண் அறிவிப்பிற்கிணங்க 'பசுமைத் தமிழ்நாடு' திட்டத்தினை கீழ்க்கண்ட குறிக்கோள்களுடன் செயல்படுத்துவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(i) தமிழக அரசின் தொலைநோக்குத் திட்டம், தேசிய வனக் கொள்கை 1988– ன்படி வனம் மற்றும் வனப்பரப்பு 23.08 சதவீதத்திலிருந்து 33 சதவீதமாக 2030–31 ஆம் ஆண்டிற்குள், வனம் சாரா பகுதிகளில் அதிக அளவில் உயர்த்தும் வண்ணம் மரங்களை வளர்த்தல் மற்றும் நலிவடைந்த வனப்பகுதிகளை மேம்படுத்துவதன் மூலம் செயல்படுத்தப்படும்.

(ii) விவசாய நிலங்களில் விவசாய பயிர்களுடன் இணைந்து மரப்பரப்பு விரிவாக்கப்படும். நல்ல வியாபார நிறுவனங்களை உருவாக்கி மரம் வளர்ப்பவர்களின் வருமானங்களை அதிகரிக்க தகவல் தரவு மையம் உருவாக்கப்படும்.

(iii) தமிழக பொதுமக்கள் மற்றும் தனியார் பங்கேற்புடன் உயிர்ப்பன்மை மற்றும் மர வளர்ச்சி வீதம் மேம்படுத்தப்படும்.

இந்த இயக்கத்தின்கீழ், பொருளாதாரம் மற்றும் இயற்கை சூழல் முக்கியத்துவம் வாய்ந்த 261 கோடி உள்ளூர் மர வகைகள் அடுத்த பத்தாண்டு காலத்தில் தகுதி வாய்ந்த நகர்ப்புற பகுதிகள், விவசாயப் பண்ணைகள், கல்வி நிறுவனங்கள், கோயில் நிலங்கள், கோயில் வனங்கள், தொழிற்சாலைகள், தொழிற்சாலைகளுக்கு சொந்தமான நிலங்கள், ஏரிக்கரை மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகள், ஆற்றுப் படுகைகள், காவல் துறை மற்றும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நிலங்களில் சுமார் 13,500 சதுர கிலோமீட்டரில் உள்ளூர் மரங்கள் நடப்படும். பருவ நிலை சூழல்களுக்கும் மண்ணின் தன்மைக்கும் ஏற்றவாறு நடவு செய்யப்பட உள்ள மரங்கள் தேர்வு செய்யப்படுவதில் தனிக்கவனம் செலுத்தப்படும். இதனால் நடப்பட்ட மரங்கள், மரக்கன்றுகள் நன்கு உயிர்ப்புடன் வளரும். ஈர நிலங்கள், புல்வெளிகள், ஒரே வகையான மரங்கள் மற்றும் வெளியூர் மரங்களை நடுவதில் கவனம் செலுத்தப்படாது. பசுமைத் தமிழக இயக்கத்தின் மூலம் 33 சதவீத வனம் மற்றும் வனப்பரப்பு எய்த வேளாண் காடுகள் முக்கிய பங்கு

வகிக்கும். மேலும் பசுமைத் தமிழகத்தின் செயல்பாடுகள் தேசிய வனக் கொள்கை 1988 மற்றும் தமிழக அரசின் தொலைநோக்குத்திட்ட குறிக்கோள்களையும் அடைய வழிவகை செய்யும்.

காலநிலை மாற்றத்தின் எதிர்மறைத் தாக்கமானது மாநிலத்தின் கடற்கரைப்பகுதிகளிலும், நிலப்பகுதிகளிலும் ஏற்படும் வெப்பம் மற்றும் மழை அதிகரித்தல், கடல் மட்டம் உயர்வு, கடற்கரை அரிப்பு, வறட்சி, நகர மற்றும் கிராமப்பகுதிகளில் வெள்ளம் சூழ்தல் இப்பகுதிகளில் நீரின் உப்புத் தன்மை அதிகரித்து நன்னீர் இருப்பு குறைவு ஆகியவற்றால் பெரிதும் உணரப்படுகிறது. பருவ நிலை மாற்றத்தைச் சிறந்த முறையில் மேலாண்மை செய்வதற்காக தமிழ்நாடு பசுமை இயக்கத்தைத் தவிரவும் தமிழ்நாடு அரசு ஏற்கனவே தமிழக பருவ நிலை மாற்ற இயக்கம் மற்றும் தமிழக ஈரநில இயக்கம் ஆகிய இரண்டு இயக்கங்களை கூடுதலாக உருவாக்கியுள்ளது.

மேற்கூறிய மூன்று இயக்கங்களையும் அதன் குறிக்கோள்களையும் சிறப்பாக மேலாண்மை செய்திட தமிழ்நாடு பசுமை பருவநிலை நிறுவனம் (சிறப்பு நோக்க நிறுவனம்) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு திட்ட மேலாண்மை அமைப்பு (PMU) தமிழ்நாடு கட்டமைப்பு

நிதி மேலாண்மை கழகத்துடன் இணைந்து திட்டச் செயல்பாடுகளை ஒருங்கிணைத்துக் கண்காணிக்கும்.

## 5.2 தமிழ்நாடு ஈர நிலங்கள் இயக்கம்

நம் வாழ்வின் சமூக–பொருளாதாரத் துறையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளை ஈரநிலங்கள் வழங்குகின்றன. இலட்சக் கணக்கான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக ஈரநிலங்களை நம்பியுள்ளனர். நீர் சுத்திகரிப்பு, நிலத்தடி நீர் மீட்சி, வறட்சி மற்றும் வெள்ள மேலாண்மை ஆகியவற்றில் அவை முக்கியப் பங்கு வகிக்கின்றன. நீர், உணவுப் பாதுகாப்பிற்கு ஈரநிலங்களைப் பாதுகாப்பது அவசியம். காலநிலை மாற்றத்தின் கேடுதரும் கடுந்தாக்கத்தினைக் கருத்தில் கொள்ளும்போது ஈர நிலங்கள் மேலும் முக்கியத்துவம் பெறுகின்றன. குறிப்பாக கடல் மட்ட உயர்வு, அதிகரித்த கடல் மேற்பரப்பு வெப்பநிலையின் விளைவாக பவள வெளுப்பு மற்றும் உள்நாட்டு நீரியல் மாற்றத்தால் பாதிக்கப்படுகின்றன. ஈரநிலங்கள் கார்பனின் களஞ்சியங்களாக அறியப்படுகின்றன மற்றும் அவை "கரிம தாங்கிகள்" என்று கருதப்படுகின்றன.

ஈர நிலங்கள் இயற்கையான காலநிலை கட்டுப்பாட்டாளர்களாகக் கருதப்படுகின்றன, ஏனெனில் அவை சுற்றுச்சூழல் அமைப்பில் நீர் சமநிலையைப் பேணுவதில் பெரும் பங்காற்றுகின்றன. ஈரநிலங்களில் எண்ணற்ற தாவர மற்றும் விலங்கு இனங்கள் செழித்து வளர்கின்றன. ஈர நிலங்கள் இலட்சக்கணக்கான சதுப்புநிலப் பறவைகளுக்கும், புலம்பெயர்ந்த பறவைகளுக்கும் புகலிடம் வழங்குகின்றன மற்றும் பல்லுயிர் பெருக்கத்திற்கான முக்கிய பகுதிகளாக உள்ளன. சதுப்பு நிலங்கள் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முக்கியத்துவமும் நன்கு அறியப்பட்டதாகும். எனவே ஈர நிலங்களின் செழுமையும், பாதுகாப்பும் உயிரினங்கள் வாழ்வதற்கு இன்றியமையாததாகும்.

காலநிலை மாற்றம் நீரியல் ஆட்சிகளை மாற்றி, ஈரநிலங்களின் பாதிப்பை அதிகரிக்க வழிவகுக்கிறது, அதே நேரத்தில் ஆக்கிரமிப்பு, திடக்கழிவு கொட்டுதல், நீடிக்க முடியாத சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் மாசுபாடு ஆகியவை ஈர நிலங்களின் நன்னிலையைச் சீர்குலைத்து, மக்களின் வாழ்வையும், வாழ்வாதாரத்தையும் பாதிக்கிறது. உலகளாவிய காலநிலை மாற்றம் ஈர நிலங்களில்

திடீர் மாற்றம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளை அதிகரிக்கக்கூடும். இதனால், ஈரநிலங்கள் ஒரு முக்கியமான கார்பன் மற்றும் மீத்தேன் தாங்கியாக அமைவதுடன் புவி வெப்பமடைதல் தொடர்பான காலநிலை பாதிப்புகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கும் மனித உயிர்களுக்கும் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு அரசு விரிவான பாதுகாப்பு மற்றும் மேலாண்மைத் திட்டத்தின் மூலம் அதன் ஈரநிலங்களைப் பாதுகாக்க உறுதிபூண்டுள்ளது 2021–22 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு உரையின் போது, மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், "தமிழ்நாட்டிலுள்ள ஈரநிலங்களின் சூழலியலை மேம்படுத்தவும், அதன் இயற்கை சூழலை மீளுருவாக்கவும், மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையின் கீழ் "தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம்" ஒன்றினை இந்த அரசு ஏற்படுத்தும். "தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம்" 5 ஆண்டுகளில் 100 ஈரநிலங்களை கண்டறிந்து, அவற்றின் இயற்கைச்சூழலை மீளஉருவாக்கும் பணிகளை மேற்கொள்ளும். இதனால் அவற்றை சார்ந்தோரின்

வாழ்வாதாரம் உயரும். இதற்கென ரூ.150 கோடி நிதி 5 ஆண்டுகளில் செலவிடப்படும்" என்று அறிவித்தார்.

அதன்படி, 2021–2022 முதல் 2025–2026 வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.115.15 கோடியில், பின்வரும் பரந்த நோக்கங்களுடன், "தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம்" பணியை செயல்படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

**பணியின் நோக்கங்கள்**

i) தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள ஈர நிலங்களை அடையாளம் கண்டு வரைபடமாக்குதல்.

ii) ஈர நிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017–ன் கீழ் அடையாளம் காணப்பட்ட ஈர நிலங்களை அறிவிப்பதற்கான விரிவான ஆவணங்கள் மற்றும் ஒருங்கிணைந்த ஈரநில மேலாண்மை திட்டம் தயாரித்தல்.

iii) சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 மற்றும் அதனைச் சார்ந்த விதிகளின் கீழ் ஈரநிலங்களை பாதுகாப்பதற்காக அதற்கென அடையாளம் காணப்பட்ட நிலங்களை அறிவிக்கை செய்தல்.

iv) நிரூபிக்கப்பட்ட அறிவியல் உத்திகள் மற்றும் சான்றுகள் அடிப்படையிலான முறைகளுக்கு ஏற்ப ஈரநிலங்களின் சூழல் சமநிலையை மீட்டெடுத்தல்.

v) ஈரநிலங்களை பாதுகாப்பது குறித்து பிரச்சாரம் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

vi) ஈரநில வளங்கள், கண்காணிப்பு மற்றும் அதன் பயனுள்ள மேம்பாட்டுக்காக ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்.

vii) ஈரநில வளங்களைப் பாதுகாக்கவும் உற்பத்தித்திறனை உறுதி செய்வதற்காக நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை ஊக்குவித்து ஆதரித்தல்.

viii) ஈர நிலங்களைத் திறம்பட நிர்வகிப்பதற்கு பங்குதாரர்களின் பங்களிப்பை ஊக்குவித்தல்.

ix) சமூக அடிப்படையிலான அணுகுமுறைகள் மூலம் ஈரநில பல்லுயிர்களைப் பாதுகாத்தல்

**காலவரையறை:**

மேற்கண்ட இயக்கத்தின் பணிகளுக்கான காலவரையறை 2021–2026 இலிருந்து 5 ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**எதிர்பார்க்கப்படும் முடிவுகள்:**

i. இயற்கை ஈரநிலங்களின் இழப்பின் வீதத்தைக் குறைப்பதற்காக அரசு, வல்லுநர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் அல்லது ஈரநில நண்பர்களின் உதவியுடன் இயன்ற இடங்களில் ஈரநிலச் சீரழிவை முற்றாக்குதல்.

ii. ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017–ன்படி மாநிலத்தில் குறைந்தபட்சம் 100 ஈரநிலங்களை அறிவிப்பு செய்தல்

iii. மனித வாழ்வாதாரம் மற்றும் எதிர்கால சந்ததியினரின் சுற்றுச்சூழலியல் நன்மைகளுக்காகவும் ஈரநிலங்களுக்கு மிக உயர்ந்த பாதுகாப்பை வழங்குவதற்காகவும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த குறைந்தபட்சம் 50 ஈரநிலங்களை ராம்சார் தளங்களாக அறிவித்தல்.

iv. முன்னுரிமையின் அடிப்படையில் புதிய ஈரநிலங்களை அறிவிக்கை செய்ய மற்றும் ராம்சார் தளங்களாக அறிவிப்பதற்கு கூடுதலாக 500 சுருக்க ஆவணங்களைத் தயாரித்தல்

v. ராம்சார் தளங்கள் உட்பட அடையாளம் காணப்பட்ட 100 ஈரநிலங்களுக்கு ஒருங்கிணைந்த ஈரநில மேலாண்மைத் திட்டங்களைத் தயாரித்தல். இந்த ஒருங்கிணைந்த ஈரநில மேலாண்மைத் திட்டமானது பல்லுயிர், சுற்றுச்சூழல் சேவைகள் மற்றும் தற்போதைய மற்றும் எதிர்காலத்திற்கான ஈரநிலங்களின் மதிப்பு ஆகியவற்றை விவரித்தல்.

vi. மாநிலத்தில் உள்ள உள்ளூர் சமூகங்களுக்கு பயனளிக்கும் வகையில் 100 முன்னுரிமையளிக்கப்பட்ட ஈரநில சுற்றுச்சூலியல் அமைப்புகளை மீளுருவாக்குதல் மற்றும் ஈரநில சுற்றுச்சூழல் அமைப்பின் மொத்த பொருளாதார மதிப்பீட்டைப் பெறுதல்.

vii. சுத்தமான குடிநீர், விவசாயத்திற்கான நீர் மற்றும் வெள்ளம் தணிப்பு, மண் அரிப்பு கட்டுப்பாடு, வண்டல் படிவு, கார்பன்

நிலைநிறுத்துதல், விவசாய உற்பத்தியில் அதிகரிப்பு, உள்நாட்டு மீன்பிடி மற்றும் சுற்றுலா நடவடிக்கைகள் போன்ற நீர் தொடர்பான சுற்றுச்சூலியல் அமைப்பு சேவைகளை மேம்படுத்துதல்.

viii. ஈரநிலங்கள், மழைப்பொழிவை உறிஞ்சும் இயற்கை பாசிகளாக செயல்படுவதையும், கடலோர மற்றும் நதி வெள்ளத்தில் இருந்து பாதுகாப்பை வழங்குவதையும், நிலையான நகரங்கள் மற்றும் மனித குடியிருப்புகள், மனிதனால் உருவாக்கப்பட்ட உள்கட்டமைப்பின் தேவைகளை நிறைவு செய்கிறது.

ix. வறட்சியின் நிகழ்வுகளைக் குறைத்தல், மீன்பிடிப்புக்காக கடலோரப் பகுதியைப் பாதுகாத்தல், அதிக மீன் உற்பத்திக்கான மீன் உற்பத்தி பகுதி அமைத்தல், கடலோர வண்டல் படிவு மண்டலங்களின் பசுமை மீட்பு மூலம் 10 சதுர கிமீ அலையாத்தி காடுகளை மீட்டெடுப்பது, கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளை நிலைநிறுத்துவதற்காக கடல் புற்கள் மற்றும் பவளப்பாறைகளை மீளுருவாக்குதல்.

x. 5 ஆண்டுகளின் முடிவில் ஈர நிலங்களை ஒட்டி இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதன் மூலம் ஈரநிலங்களில் ஊட்டச்சத்து செறிவூட்டல் நிகழ்வுகளை தற்போதைய 100% இலிருந்து 25% ஆக குறைத்தல்.

xi. பொருளாதார சுழற்சியை மேம்படுத்துவதன் மூலம் கடல் மற்றும் நன்னீர் சுற்றுச்சூழல் அமைப்புகளை ஒட்டியுள்ள கழிவு குவியல்கள் 100% முதல் 25% வரை குறைத்தல், உள்ளூர் சமூகங்களை உட்படுத்துவதன் மூலம் வெற்றிகரமான பொருளாதார சுழற்சிக்கான தீர்வு காணுதல். ஆற்றங்கரையோரப் பகுதிகளில் சீரழிவைத் தடுப்பதில் கவனம் செலுத்தப்படும், ஏனெனில் அப்பகுதிகளில் கழிவுகள் கொட்டப்பட்டு, நாளடைவில், இது மெதுவாக ஊருக்குள்ளும் கடலோர ஈரநிலங்களுக்கும் விரிவடைந்து சூழல் கேட்டுக்கு வழிவகுக்கும்.

xii. ஈரநிலங்கள் மீளுருவாக்கம், கார்பன் சேமிப்பு திட்டம் அறிமுகப்படுத்துதல், உள்ளூர் சமூகங்களை உட்படுத்துவதன் மூலம்

எதிர்காலத் தன்னார்வலர்களுக்கு கார்பன் சந்தையின் பலன்களை பெறச்செய்தல்.

xiii. வெள்ள மண்டல வரைப்படம் மூலம் ஈரநிலங்களின் நிலையான சூழலியல் மறுசீரமைப்பு, நீர்ப்பாசனம் மற்றும் பயிர் முறைகளை நிகழ்நேர கண்காணிப்பு, நீரின் தரம் பகுப்பாய்வு மற்றும் மாதிரியாக்கம், தொலை உணர்வு மற்றும் புவியியல் தகவல் அமைப்பு மூலம் மேற்பரப்பு நீர்நிலைகள் மற்றும் ஈரநிலங்களை வரைபடம் செய்தல்.

xiv. ஈரநிலங்களின் சுற்றுச்சூழல் மதிப்பு மற்றும் எதிர்கால சந்ததியினரின் வாழ்வாதாரத்திற்காக அதன் பாதுகாப்பு மற்றும் அவசியம் குறித்து மக்கள் சமூகங்களிடையே பரவலான விழிப்புணர்வை உருவாக்குதல்.

xv. பசுமை மற்றும் கடல்சார் சொத்துக்களை பாதுகாக்கவும் ஈரநிலச் சீரழிவைத் தடுப்பதற்காகவும் ஒருங்கிணைந்த ஈரநில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தல்.

## 6. 2022– 23 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டங்கள்

### 6.1. காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம் (TBGPCCR)

மாநில அரசு அனுப்பிய கருத்துருவின் அடிப்படையில், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன் கூடிய "காலநிலை மாற்றத்திற்கான தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம் (TBGPCCR)" எனும் புதிய திட்டத்தினை 2022–23 முதல் 2029–30 வரையிலான 8 ஆண்டு காலத்தில் ரூ.920.52 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள் (MoD) மற்றும் கடன் ஒப்பந்தமானது (LA) முறையே 05.01.2022 மற்றும் 31.03.2022 அன்று கையெழுத்தானது. இத்திட்டத்தின் நோக்கமானது, உயிர்ப்பன்மை பாதுகாப்பு, மனித வன உயிரின மோதல் தடுப்பு நடவடிக்கைகள், விநியோக சங்கிலி மேம்பாட்டினை ஊக்குவித்தல், வாழ்வாதார

மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் மேலாண்மைத் திறன் மேம்பாடு ஆகியவற்றின் வாயிலாக காலநிலை மாற்றத் தணிப்பு மற்றும் தகவமைப்புக்கு உறுதுணையாக இருப்பதே ஆகும். இதன் மூலம் தமிழ்நாட்டின் நிலையான சமூகப்பொருளாதார மேம்பாட்டில் முக்கிய பங்காற்றுகிறது.

இத்திட்டமானது (i) சூழலமைப்பு சார்ந்த காலநிலை மாற்ற நடவடிக்கைகள், (ii) மனித–வன உயிரின மோதல் தடுப்பு நடவடிக்கைகள், (iii) விநியோக சங்கிலி மேம்பாட்டினை ஊக்குவித்தல், (iv) வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் (v) மேலாண்மைத்திறன் மேம்பாடு போன்ற 5 முக்கிய அங்கங்களைக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக 2032ஆம் ஆண்டிற்குள், 4 லட்சம் மெட்ரிக் டன் அளவிலான கார்பன் சேகரம் அதிகரிப்பு, 3.6 எக்டேர் பரப்பிலான பவளப்பாறைப் பகுதிகள் மறுசீரமைப்பு, 600 எக்டேர் பரப்பிலான கடற்புற்கள் மற்றும் 300 எக்டேர் பரப்பிலான கடல் பாசிகள் மீட்பு, 1050 எக்டேர் பரப்பிலான சதுப்புநிலப்பகுதிகள்

அதிகரிப்பு, வனங்களுக்கு வெளியே 60,000 எக்டேர் அளவிலான பசுமைப்பரப்பு அதிகரித்தல் மற்றும் 5400 துறைப்பணியாளர்களின் திறன் மேம்பாடு போன்ற முக்கிய பலன்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் முதலாமாண்டான 2022–23ஆம் ஆண்டில், நகர்ப்புற மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நடுவதற்கென 68..40 லட்சம் மரக்கன்றுகளை வளர்த்தல், 25 கி.மீ. நீளத்திற்கு யானை புகா அகழிகள் அமைத்தல், 8 வன விரிவாக்க மையங்களில் உயர்தர மைய நாற்றங்கால்களை நிறுவுதல், சூழல் சுற்றுலா மற்றும் சூழல் மேம்பாட்டுப் பணிகள், உள்கட்டமைப்பு மற்றும் வாகன வசதி மேம்பாடு போன்ற ஒப்பளிக்கப்பட்ட பணிகளை ரூ.116.81 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 6.2 தரங்குன்றிய வனங்களை மறுசீரமைக்கும் திட்டம்

அலையாத்தி காடுகள் மேம்பாடு, சோலைக்காடுகள் மேம்பாடு, சந்தன மரத்தோட்டம் உருவாக்குதல். மண் மற்றம் நீர்வளப் பணிகள் மேற்கொள்ளுதல், மழைநீர் சேகரித்தல், விவசாயிகள்

மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி மரப்பரப்பை அதிகரித்தல். வனத்தீ தடுப்பணி, பேரிடர் மேலாண்மை செய்தல் மற்றும் பல வகைத் தோட்டங்கள் உற்பத்திகள் மூலம் நலிவடைந்த வனங்கள் மறுசீரமைக்கப்பட உள்ளது.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தமது கடித எண். NB.TN.SPD/ RIDF – 7 (A)XXVII/(TAMIL NADU)/196th PSC/2021-22 DT. 01.02.2022 –ல் தரங்குன்றிய வனங்களை மறுசீரமைப்பிற்காக ரூ. 45698.15 இலட்சம் கடனாக வழங்கி உள்ளது. இத்திட்டம் 01.04.2021 முதல் 31.03.2027 வரை அமல்படுத்தப்படும். இந்த திட்டத்தின்கீழ் 33,290 எக்டர் தரங்குன்றிய வனப்பகுதிகளில் 33,50,000 மரங்கள் வளர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

### 6.3 சென்னைக்கு அருகில் தாவரவியல் பூங்கா

தாவரவியல் பூங்காக்கள் பல்லுயிரினங்களின் இருப்பிடங்களாகவும், பொதுமக்களுக்கு பொழுதுபோக்கு மையங்களாகவும் திகழ்கின்றன. 2022-23 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை உரையின் போது, லண்டனில் உள்ள கியூ கார்டன்ஸ்

நிறுவனத்துடன் இணைந்து ரூ.300 கோடி செலவில் சென்னைக்கு அருகில் தாவரவியல் பூங்கா அமைக்கப்படும் என அரசு அறிவித்தது.

### 6.4 வரையாடு பாதுகாப்புத் திட்டம்

தமிழ்நாட்டின் மாநில விலங்கான வரையாடுகளைப் பாதுகாத்தல் அவற்றின் வாழ்விடத்தை விரிவுபடுத்துதல் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களுடன் 2022–23 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை உரையின் போது, **வரையாடு பாதுகாப்புத் திட்டத்தை** ரூ.10.00 கோடி செலவில் செயல்படுத்துவதாக அரசு அறிவித்தது.

### 6.5 குழந்தைகள் இயற்கை பூங்கா

இளம் வயதிலிருந்தே குழந்தைகளுக்கு வனம் மற்றும் வனவிலங்குகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த , கிண்டி சிறுவர் பூங்காவை மறுவடிவமைத்து பறவைகள் , வண்ணத்துபூச்சிகள் விலங்குகள் உள்ளடங்கிய இயற்கை பூங்காவாக ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் அமைக்க 2022–23 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை உரையின் போது, இந்த அரசு அறிவித்துள்ளது.

## 6.6 வன ஆணையம்

வனப் பாதுகாப்பு, பசுமைப் பரப்பை அதிகரித்தல், வன மேலாண்மையில் பழங்குடியினரை ஈடுபடுத்துதல், மனிதர்களுக்கும் வன விலங்குகளுக்கும் இடையேயான மோதல்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் வனத்துறையின், திறன் மேம்பாடு குறித்த கொள்கை மாற்றங்கள் ஆகியவற்றை அரசுக்கு பரிந்துரைக்க வன ஆணையம் அமைக்கப்படும் என 2022-23 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை உரையின் போது, அரசு அறிவித்துள்ளது

## 6.7 சுற்றுலா தலங்களை மேம்படுத்துதல்

அணிநிழல் காடுகளும், எழில்மிகு சூழல் சுற்றுலா தலங்களும் நிறைந்தது தமிழ்நாடு. வனங்களுக்கு பாதகமின்றி சுற்றுச்சூழல் சுற்றுலாவை ஊக்குவிப்பது அரசின் கொள்கை ஆகும். இதன் அடிப்படையில், சேத்துமடை (கோவை மாவட்டம்) மணவனூர், தடியன் குடிசை (திண்டுக்கல் மாவட்டம்), ஏலகிரி (திருப்பத்தூர் மாவட்டம்) ஆகிய பகுதிகளில் சூழல் சுற்றுலாத் தலங்களாக தனியார் பங்களிப்புடன் மேம்படுத்தப்படும் என 2022-23ம் ஆண்டுக்கான நிதிநிலை உரையில், அரசு அறிவித்துள்ளது.

## 7. வனக்கொள்கை மற்றும் சட்ட கட்டமைப்பு

தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரினங்களை நிர்வகிப்பதற்கான ஒரு சிறந்த கொள்கை மற்றும் நெறியினைக் கொண்டுள்ளது. திட்டங்களை முறையாக செயல்படுத்துவதை உறுதி செய்யும் வகையில் கொள்கைக் கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவு 48–A மற்றும் 51A (g)–ன் வாயிலாக வகுக்கப்பட்ட வழிகாட்டுக் கொள்கைகள், மாநிலத்திற்கும் அனைத்து குடிமக்களுக்கும் உரிய கடமைகளைத் தீர்மானிக்கிறது.

> "சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, மேம்படுத்துவதற்கும், நாட்டின் காடுகளையும், வன உயிரினங்களையும், காப்பணைவு செய்து வருவதற்கும் அரசு முனைந்து முயலுதல் வேண்டும்"

என இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 48–A வலியுறுத்துகிறது.

> "காடுகள், ஏரிகள், ஆறுகள், வன உயிரினங்கள் உள்ளடக்கிய இயற்கைச் சூழலை அழியாது காத்து

> வளர்த்தலும், உயிரினங்களிடம் இரக்கங்காட்டுதலும், இந்திய குடிமக்கள் ஒவ்வொருவரின் கடமையாகும்."

என்று அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 51 A (g) எடுத்துரைக்கிறது.

தேசிய வனக்கொள்கை, 1988, வன உயிரினப் (பாதுகாப்பு) சட்டம், 1972, மாநில வனக்கொள்கை, 2018, சூழல்சுற்றுலா கொள்கை, 2017, காலநிலை மாற்றம் குறித்த மாநில செயல் திட்டம் மற்றும் நிலையான வளர்ச்சிக் குறிக்கோள்கள் போன்றவற்றில் உள்ள கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு வனங்களின் நீடித்த, நிலையான மேலாண்மை திட்டங்கள் மற்றும் உத்திகள் வகுக்கப்படுகின்றன. தற்போதைய நடைமுறைகள் மற்றும் மாறிவரும் உலகளாவிய மற்றும் தேசிய சூழலுக்கேற்ப மாநில வனக்கொள்கை 2018 மற்றும் சூழல் சுற்றுலா 2018 ஆகியவற்றை மாற்றியமைத்து மேம்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

## 7.1 தேசிய வனக்கொள்கை, 1988

அனைத்து உயிர்களுக்கும் உயிராதாரணமான சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, சூழலியல் சமநிலையைப் பேணுதல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக நாட்டின் புவிப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு வனப்பரப்பு மற்றும் மரப்பரப்பாக இருக்க வேண்டுமென தேசிய வனக்கொள்கை, 1988 நோக்கமாக கொண்டுள்ளது. மலைத் தொடர்களில் மண் அரிமானம், நிலவளம் குன்றுதல், நிலச்சரிவு போன்ற பலவீனமான சூழலமைப்பினை வலுப்படுத்த மூன்றில் இரு பங்கு மலைப்பகுதிளில் வனப்பரப்பு இருக்க வேண்டுமெனவும் தேசிய வனக்கொள்கை வலியுறுத்துகிறது.

## 7.2 மாநில வனக்கொள்கை, 2018

மாநில வனக்கொள்கை 2018, வனச் சட்டங்களைக் கடுமையாக அமல்படுத்துதல், தரங்குன்றிய வனப்பகுதிகளை மீட்டெடுத்தல், அனைத்து வனப் பகுதிகளிலும் நீர் சேகரிப்பு திறனை மேம்படுத்துதல், பாதுகாக்கப்பட்ட பகுதிகளை பலப்படுத்துதல், வன உயிரினங்களின் வழித்தடங்களை கையகப்படுத்துதல் மற்றும் வன உயிரின வாழ்விடங்களை விரிவாக்குதல்

ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், வனங்களில் வசிப்போர் சுய விருப்பத்தின் பேரில், வனங்களுக்கு வெளியே மறுகுடியமர்வு செய்யவும் மாநில வனக் கொள்கை வழிவகுக்கிறது. ஈரநிலங்களைப் பாதுகாத்தல், பசுமை பகுதியினை அதிகரிப்பது மூலம் பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தை மட்டுப்படுத்துதல், வலுவான வன விரிவாக்க அமைப்பை ஏற்படுத்துதல், பழங்குடியின சமுதாயத்தினரின் வளமான பாரம்பரிய அறிவைப் பயன்படுத்துதல், போன்றவை மாநில வனக்கொள்கையின் முக்கிய அம்சங்களாகும்.

## 7.3 சட்டங்கள் மற்றும் விதிகள்

வனப்பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கென மாநிலத்தில் நடைமுறையில் உள்ள சில முக்கிய சட்டங்கள் மற்றும் விதிகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

**சட்டங்கள்**

- தமிழ்நாடு வனச்சட்டம், 1882
- தமிழ்நாடு (தனியார் காடுகள் பாதுகாப்பு) சட்டம், 1949

- தமிழ்நாடு மலைப்பகுதிகள் (மரங்கள் பாதுகாப்பு) சட்டம், 1955
- வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972
- வனப் (பேணுகை) சட்டம், 1980
- தமிழ்நாடு ஈட்டிமரங்கள் (பாதுகாப்பு) சட்டம், 1994
- உயிர்ப்பன்மை சட்டம், 2002

**விதிகள்**

- தமிழ்நாடு சந்தனமர போக்குவரத்து விதிகள், 1967
- தமிழ்நாடு தடிமரப் போக்குவரத்து விதிகள், 1968
- தமிழ்நாடு சந்தனமர இருப்பு விதிகள், 1970
- தமிழ்நாடு தொழிற்சாலை/வணிக நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படும் அட்டவணைப்படுத்தப்பட்ட தடிமரங்களுக்கான கணக்குகள் பராமரிப்பு விதிகள், 1988
- தமிழ்நாடு பட்டா நில சந்தன மர விதிகள், 2008
- தமிழ்நாடு மர அறுவை ஆலைகள் ஒழுங்குமுறை விதிகள், 2010

- ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2012
- தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரினப் பகுதிகள் (மலையேற்ற ஒழுங்குமுறை) விதிகள், 2018

## 7. 4 நிலையான வளர்ச்சிக் குறிக்கோள்கள் (SDGs)

நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) உலகம் எதிர்கொள்ளும் பொருளாதார, அரசியல் மற்றும் சுற்றுச்சூழல் சவால்களைச் சமாளிக்க ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளால் ஒப்புக் கொள்ளப்பட்ட உலகளாவிய செழுமைக்கான இலக்குகளாகும். 2012 இல் நீடித்த வளர்ச்சிக்கான ஐக்கிய நாடுகள் மாநாட்டில் மொத்தம் 17 நிலையான வளர்ச்சி இலக்குகள் அறிவிக்கப்பட்டன, அவை 169 குறியீடுகள் மற்றும் 232 குறிகாட்டிகளாக மேலும் வரையறுக்கப்பட்டுள்ளன. உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள் 2030 ஆம் ஆண்டிற்குள் ஒப்புக்கொள்ளப்பட்ட இலக்குகளை அடைவதற்கு பொறுப்பேற்க வேண்டும். ஒவ்வொரு இலக்கும் குறிப்பிட்ட மற்றும் செயல்படக்கூடிய இலக்குகளை வழங்குகிறது. நிலையான வளர்ச்சி இலக்குகள் 14 மற்றும் 15 நேரடியாக துறையுடன்

இணைக்கப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்தால் (MoEF&CC) முன்னுரிமை அமலாக்கத்திற்காக இருபத்தேழு குறிகாட்டிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

### 7.4.1 . நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான துறையின் பணிகள்

**(அ) துறையின் நிலையான வளர்ச்சி இலக்கு அலகு**

வனத்துறையில் நிலையான வளர்ச்சி இலக்கு அலகுகள் பின்வருமாறு உருவாக்கப்பட்டுள்ளன:–

**வனத்துறை (மாநில அளவில்)**

| வ. எண் | அலுவலரின் பெயர் / பதவி | நிலை |
|---|---|---|
| 1 | கூடுதல் முதன்மை தலைமை வன பாதுகாவலர், (திட்டம் மற்றும் வரவு செலவு) | தலைவர் |
| 2 | கூடுதல் முதன்மை தலைமை காப்பாளர் (வனஉயிரினம்) | உறுப்பினர் |
| 3 | முதன்மை தலைமை வன பாதுகாவலர் மற்றும் முதன்மைச் செயல் அதிகாரி (CAMPA) | உறுப்பினர் |
| 4 | புள்ளியியல் அலுவலர் | உறுப்பினர் |
| 5 | கணிணி கட்டளையாளர் | உறுப்பினர் |
| 6 | உதவியாளர் | உறுப்பினர் |

## வனத்துறை (கோட்ட / மாவட்ட அளவில்)

| வ. எண் | அலுவலரின் பெயர் / பதவி | நிலை |
|---|---|---|
| 1 | மாவட்ட வன அலுவலர் | தலைவர் |
| 2 | உதவி வனப் பாதுகாவலர் | உறுப்பினர் |
| 3 | ஒரு வனச்சரக அலுவலரை மாவட்ட வன அலுவலரால் உறுப்பினராக நியமனம் செய்தல் வேண்டும் | உறுப்பினர் |
| 4 | மாவட்ட வன அலுவலர் அலுவலகத்தில் கண்காணிப்பாளர் ஒருவர் | உறுப்பினர் |

மேலும், திட்டம் வளர்ச்சித் துறை நிலையான வளர்ச்சி இலக்கு பிரிவுடன் இணைந்து நிலையான வளர்ச்சி தரவு பலகையில் உள்ள தரவுகளை தொடர்ந்து கண்காணித்து தரவை மேம்படுத்த துறையில் ஒரு நியமன அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். கோட்டங்கள் மற்றும் கள அலுவலகங்கள் பணிக்குழு 7 (இலக்கு 13, 14 மற்றும் 15) மற்றும் பணிக்குழு 6 (இலக்கு 12) பிரிவு இலக்குகளை அடைவதை நோக்கமாக கொண்டு செயல்படுகின்றன.


**(ஆ) பணிக்குழுக்களின் கூட்டங்கள்**

12.08.2021, 01.12.2021 மற்றும் 09.02.2022 ஆகிய தேதிகளில் நடைபெற்ற பணிக்குழு 2, 6 மற்றும் 7–க்கு உரிய கூட்டங்களில் பயனுள்ள ஈடுபாட்டுடன் பங்கேற்பு உறுதி செய்யப்பட்டது.

**(இ) துறையுடன் இணைக்கப்பட்ட இலக்குகள்**


இலக்கு எண்.14 (கடல் சார் வாழ்க்கை) மற்றும் இலக்கு எண்.15 (நிலம் சார் வாழ்க்கை) ஆகியவை காடுகள் மற்றும் வனவிலங்குகளுடன் நேரடியாக இணைக்கும் இலக்குகளைக் கொண்டுள்ளன, இலக்கு 6 (தூய்மையான நீர்), இலக்கு எண். 12 (பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி) மற்றும் இலக்கு 13 (காலநிலை நடவடிக்கை) வனம் மற்றும் வனவிலங்கு துறைகளுடன் ஒன்றுடன் ஒன்று தொடர்பினைக் கொண்டுள்ளது. நிலையான வளர்ச்சி இலக்கு எண்: 14 கடல் மற்றும் கடலோர சுற்றுச்சூழல் அமைப்பு மாசுபாடுவதிலிருந்து நிலையான முறையில் நிர்வகிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது, அத்துடன் கடல் அமிலமயமாக்கலின் தாக்கத்தைக்

குறைத்திடவும் ஏற்படுத்தப்பட்டது. நிலையான வளர்ச்சி .




இலக்கு எண்: 15 நிலப்பரப்பு மற்றும் உள்நாட்டு நன்னீர் சுற்றுச்சூழல் அமைப்புகளின் பாதுகாப்பு, மறுசீரமைப்பு மற்றும் நிலையான பயன்பாடு மற்றும் அவற்றின் சேவைகளை நோக்கமாகக் கொண்டுள்ளது. காடுகள், ஈரநிலங்கள், மலைகள் மற்றும் வறண்ட நிலங்கள் ஆகியவை இந்த இலக்கின் கீழ் அடையாளம் காணப்பட்டவையாகும். காடுகளுக்கு வெளியே மரங்களை வளர்ப்பது, வனப்பகுதியை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல், தரங்குன்றிய வனப்பகுதிகளை மீட்டெடுத்தல், நில மற்றும் நீர்வாழ்

பல்லுயிர் பாதுகாப்பு, நீர்பிடிப்பு பகுதி மேலாண்மை, ஆக்கிரமிப்பு வேற்றுகிரக உயிரினங்களை அகற்றுதல்.




**(ஈ) இந்தியாவில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வளர்ச்சி குறிகாட்டிகளின் அடிப்படையில் மாநிலத்தின் செயல்திறன் அட்டவணை 2.0 மற்றும் 3.0**

நிலையான வளர்ச்சி இலக்கு –இந்தியா குறியீட்டின் (2.0) படி, நிலையான வளர்ச்சி இலக்கு எண்: 14 ஐ செயல்படுத்தும் ஒன்பது கடலோர மாநிலங்களில் தமிழ்நாடு நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.

நிலையான வளர்ச்சி இலக்கு –இந்தியா குறியீட்டின் (3.0) படி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை ஆகியவற்றில் மூன்று குறிகாட்டிகள் குறைந்த செயல்திறன் கொண்டவை என எடுத்துக்காட்டப்பட்டன, அதற்கான செயல் புள்ளிகளுடன் தனித்தனி கூட்டம் நடத்தப்பட்டது. இந்திய வன ஆய்வு வெளியிட்டுள்ள அண்மைக்கால ISFR அறிக்கை 2021 இன் படி, இந்த குறிகாட்டி முன்னேற்றம் கண்டுள்ளது.

**சதுப்பு நிலத்தின் கீழ் பகுதி**





**பிச்சாவரம்**



திருவாரூரில் அலையாத்திக் காடு வளர்ப்பு

**(உ) நிலையான வளர்ச்சி இலக்கு அறிக்கைகளின் படி மாநிலத்தின் செயல்திறன்**

நிதி அயோக் நிலையான வளர்ச்சி இலக்கு குறியீட்டின்படி, இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு 4வது இடத்தில் உள்ளது. இலக்கு எண்: 15–ஐப் பொறுத்தவரை, தமிழ்நாடு 2018 இல் 12–வது இடத்தில் இருந்து 2019–இல் 8–வது இடத்திற்கு முன்னேறியுள்ளது, இது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.

**(ஊ) மாநில அளவில் குறிகாட்டிகள் (மாநில குறிகாட்டி கட்டமைப்பு)**

வனத் துறையைப் பொறுத்தமட்டில் 13 குறியீடுகள் மற்றும் 27 குறிகாட்டிகள் மாநில குறிகாட்டி கட்டமைப்பில் இடம் பெற்றுள்ளன. மேற்கண்ட குறிகாட்டிகள் மாநில அளவில் தொடர்ந்து

கண்காணிக்கப்படும் நிலையான வளர்ச்சி இலக்கு எண்: 14 மற்றும் 15 இன் கீழ் வரும். இத்துறையின் சில அளவீடு தொடர்பாக சில குறிகாட்டிகள் / துணை குறிகாட்டிகள் மாற்றத்திற்காக கோரப்பட்டுள்ளன.

### 7.4.2 நிலையான வளர்ச்சி இலக்கு குறிகாட்டியை மேம்படுத்துவதற்கான திட்டங்கள்

தேசிய மற்றும் மாநில அரசுகளின் வளர்ச்சித் திட்டங்கள், எதிர்கால விருப்பங்கள் நிலையான வளர்ச்சி இலக்குகளாக மாறியுள்ளன. நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் உரிய கவனம் செலுத்தி அதன் திட்டங்கள் மூலம் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் துறை முன்னோடியாக உள்ளது.

**நிலையான வளர்ச்சி இலக்கு எண்: 14–இல் (கடல்சார் வாழ்க்கை) துறை முயற்சிகள்**: சதுப்புநில காடுகள், சதுப்பு நிலங்கள் மற்றும் கடல் தேசிய பூங்கா ஆகியவற்றை நிர்வகிப்பதற்கு திணைக்களம் கவனம் செலுத்தும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்திய வன ஆய்வு அறிக்கை (ISFR), 2021 இன் படி, தமிழ்நாட்டின் சதுப்புநிலப் பரப்பு 44.94 சதுர கி.மீ. சதுப்புநில மறுசீரமைப்பு, பழைய தோட்டங்களைப் பராமரித்தல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மேம்பாட்டு நடவடிக்கைகள்,

விழிப்புணர்வு உருவாக்கம் போன்ற வாழ்விட மேம்பாட்டு நடவடிக்கைகள்; கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு போன்றவை முக்கிய செயல்பாடுகளாகும்.

காற்றின் அரிப்பைக் குறைப்பதற்கும், சுனாமி ஆழிப்பேரலை, சூறாவளி, கடல் அலைகள் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்களுக்கு எதிராக பாதுகாப்புக் கவசமாகச் செயல்படுவதற்கும், காற்றின் வேகத்தைக் குறைக்கவும் கடலோரப் பாதுகாப்புத் தோட்டங்கள் வளர்க்கப்படுகின்றன.

மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகம் மற்றும் மன்னார் வளைகுடா கடல் தேசிய பூங்கா ஆகியவற்றின் நிர்வாகம் பல்லுயிர் பாதுகாப்பு, நிலையான கடலோர மண்டல மேலாண்மை மற்றும் வாழ்வாதார மேம்பாடு தொடர்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழக அரசு "தமிழகத்தில் அழிந்து வரும் கடல் பசு இனங்களையும் அதன் கடல் வாழ்விடங்களையும் பாதுகாக்கும் வகையில், இந்தியாவில் முதல்முறையாக கடற்பசு (Seacow) பாதுகாப்பகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது வளமையான கடல் வாழ் உயிர்ப் பன்மை பாதுகாப்பிற்கு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.



கடல் ஆமை முட்டை



குஞ்சு பொரிப்பகம்



ஆமைகளை விடுவித்தல்







கடல் புல் மூடி



மன்னார் வளைகுடா 'கடற்பசு'

**நிலையான வளர்ச்சி இலக்கு எண்:** 15 (நிலத்தில் வாழ்வு) மீதான துறை முயற்சிகள்– மொத்த நிலப்பரப்புக்கு விகிதாச்சாரமாக வனப் பகுதியை அதிகரிக்கவும், காடு மற்றும் மரங்களின் பரப்பளவினை அதிகரிக்கவும் வனத்துறை பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. பல்லுயிர் பாதுகாப்பு, மண், ஈரப்பதம் பாதுகாப்பு, வாழ்விட பாதுகாப்பு மற்றும் செறிவூட்டல்,

மனித–வனவிலங்கு மோதலைத் தணித்தல், வனப்பகுதி மற்றும் அதை சுற்றியுள்ள மக்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றுக்கு வழிவகுக்கும் நிலையான வன மேலாண்மைக்கு தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. வனவிலங்குகளைப் பாதுகாப்பதற்கும் மாநிலம் ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் உள்ளது. தமிழ்நாடு பதிவுசெய்யப்பட்ட வனப்பகுதி 23,188.042 சதுர கிலோமீட்டர் ஆகும், இது அதன் புவியியல் பரப்பளவில் 17.83% ஆகும். இந்திய மாநில வன அறிக்கை (ISFR), 2021 இன் படி, மாநிலத்தின் வனப்பகுதி 26,419.23 சதுர கிலோமீட்டர் ஆகும், இது மாநிலத்தின் புவியியல் பரப்பளவில் 20.31% ஆகும். தமிழ்நாட்டின் மரங்களின் பரப்பளவு 4,424 சதுர கி.மீ என மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் மொத்த காடு மற்றும் மரங்களின் பரப்பளவு 30,843.23 சதுர கிமீ ஆகும், இது மாநிலத்தின் புவியியல் பரப்பில் 23.7% ஆகும்.

நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைவதில் உந்துணர்வு கொண்டு, தற்போதைய தமிழ்நாடு அரசு இரண்டு முக்கியமான திட்டங்களை அறிவித்துள்ளது.

**பசுமை தமிழ்நாடு இயக்கம்**:

தமிழகத்தில் காடு மற்றும் மரங்களின் மொத்தப் பரப்பளவை மாநிலத்தின் நிலப்பரப்பில் 33 சதவீதமாக அதிகரிக்க பசுமைத் தமிழ்நாடு இயக்கம் தொடங்கப்பட்டு இப்பணியின் கீழ், 10 ஆண்டுகளுக்கும் மேலாக, பல துறைகள், பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன், பழங்குடியின மற்றும் பலதரப்பட்ட உயிரினங்களின் பாரம்பரிய மரம் நடும் திட்டம் மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும்.





**தமிழ்நாட்டில் உள்ள சதுப்பு நிலங்களின்** சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு நோக்கத்துடன் தமிழ்நாடு சதுப்பு நில இயக்கம் தொடங்கப்பட்டது. இந்த பணியானது 5 ஆண்டுகளில் 100 சதுப்பு நிலங்களை கண்டறிந்து வரைபடமாக்குவதுடன் மற்றும் ரூ.150 கோடி செலவில் வாழ்வாதார விருப்பங்களை

மையமாகக் கொண்டு சுற்றுச்சூழல் சமநிலையை மீட்டெடுக்கும்.



பள்ளிக்கரணை சதுப்பு நிலம்

### 7.4.3 குறிகாட்டிகளைக் கண்காணிப்பதற்கும் மாவட்ட அளவிலான ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கும் மாவட்ட அளவிலான இலக்குகளை நிர்ணயித்தல்.

நிலையான வளர்ச்சி இலக்கு செயல்படுத்தும் உத்தியின் ஒரு பகுதியாக நிலையான வளர்ச்சி இலக்குகளின் உள்ளூர்மயமாக்குவது ஒன்றிய அரசால் வலுவாக பரிந்துரைக்கப்படுகிறது. மாநில அளவிலான செயல்திறனில் மாவட்டங்கள் முக்கிய பங்குதாரர்களாக இருப்பதால், நிலையான வளர்ச்சி இலக்குகளின் உள்ளூர்மயமாக்கல் நிகழ்ச்சி நிரலை மாவட்ட அளவிலான குறிகாட்டி கட்டமைப்பிற்கு எடுத்துச் செல்வது அவசியம். நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதை நோக்கிய பயணத்தில்

ஊக்கமளிக்கும் வகையில், மாவட்ட அளவில் குறிக்காட்டி கட்டமைப்புப் பயிற்சியை மாநில அரசு செய்து முடித்துள்ளது.

### 7.4.4 நிலையான வளர்ச்சி இலக்கு குறிப்பிட்ட சிறந்த நடைமுறைகள்

வனத் துறையானது, 2030–ஆம் ஆண்டுக்கான உலகளாவிய நிலையான வளர்ச்சி இலக்குக்கு முழுமையாக அர்ப்பணிப்புடன் உள்ளது. SDG இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை அடைவதற்கான நோக்குநிலையில் பல லட்சிய திட்டங்களைத் தொடங்கியுள்ளது. பல முன்முயற்சிகளுக்கு பல பங்குதாரர்களின் ஒருங்கிணைப்பு மற்றும் ஒருங்கிணைந்த உத்திகள் தேவை. தற்போதைய அரசால் அறிவிக்கப்பட்ட பசுமைத் தமிழ்நாடு இயக்கம் மற்றும் தமிழ்நாடு சதுப்பு நிலத் திட்டம் போன்றவை அறிவிக்கப்பட்டு செயல்படுத்தபடவுள்ளது.

2030–31 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் காடு மற்றும் மரங்களின் பரப்பை தற்போதுள்ள 23.8% இலிருந்து 33% ஆக உயர்த்தும் நோக்கத்துடன் பசுமைத் தமிழ்நாடு இயக்கம் முன்மொழியப்பட்டது. இலக்கு நடவுப் பகுதியில் 50% வனம் அல்லாத நிலங்களாக இருப்பதால், வரித் துறைகள் (வேளாண்மை, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து

ராஜ், தொழில்கள், தோட்டக்கலை போன்றவை) மற்றும் தனியார் நில உரிமையாளர்கள் உள்ளிட்ட இயற்கை பங்குதாரர்களுடன் வலுவான ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. இதேபோல், மாநிலத்தின் சதுப்பு நிலங்களை மீட்டெடுக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்ட தமிழ்நாடு சதுப்பு நில இயக்கம், பல துறைகள், முக்கியமாக. நிலம் வைத்திருக்கும் துறைகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த செயல்திட்டம் தேவை. 100 சதுப்பு நிலங்களைக் கண்டறிந்து வரைபடமாக்குதல், மீட்டெடுத்தல் ஐந்தாண்டு பணியாக கருதப்படுகிறது. வாழ்வாதார விருப்பங்களை மையமாகக் கொண்ட சுற்றுச்சூழல் சமநிலைப்படுத்தப்படுகிறது.

## 7.5 தேசிய வனச்செயல் குறியீடு

தேசிய செயல் திட்டக்குறியீடு 2014–ன்படி, செயல்திட்டம் என்பது ஒரு வனக்கோட்டத்தில் உள்ள வனங்களை மேலாண்மை செய்வதற்கான ஆவணம் ஆகும். இந்த திட்டம், வனவளம் நிலைகுறித்த மதிப்பீடு கடந்தகால மேலாண்மையின் வெளிப்பாடு வருங்காலத்தில் நிலைத்த வனமேலாண்மைக்கான திட்டத்தைக்

கொண்டுள்ளதாகும். வனச்செயல்திட்டம் ஒவ்வொரு பத்தாண்டு காலத்திற்கு ஒருமுறை எழுதப்படுவதாகும். அறிவியல் முறையில் வன மேலாண்மை மேற்கொள்ள வனச்செயல் திட்டம் ஒரு முக்கிய ஆவணமாக விளங்குகிறது. வனச்செயல் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடியே அனைத்து வனங்களும் நிலைத்த தன்மையுடன் மேலான்மை செய்யப்பட வேண்டும். "அதிகாரம் பெற்ற அலுவலரால் ஒப்பளிக்கப்பட்ட வனச்செயல் திட்டத்தின்படியே வனங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்" – தேசிய வனக்கொள்கை 1988 இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், வனச் செயல் திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பதற்கு அங்கீகாரம் கொண்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள அனைத்து வனம் மற்றும் வன உயிரினக் கோட்டங்களில் கட்டுப்பாட்டில் உள்ள வனங்கள் அனைத்தும், வனச்செயல் திட்டம், மேலாண்மை திட்டம் மற்றும் புலிகள் பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளபடியே அறிவியல் பூர்வமாக முறையில் மேலாண்மை செய்யப்படுகிறது.

## 8. வன மற்றும் வன உயிரின மேலாண்மைக்கான சட்டப்படியான அமைப்புகள்

### 8.1 தமிழ்நாடு மாநில உயிர்ப்பன்மை வாரியம்

உயிர்ப்பன்மை அல்லது பூமியில் உள்ள பல்வேறு வகையான உயிரினங்கள், சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளின் நீடித்த நிலைக்கு இன்றியமையாதது. குறிப்பாக, அவை காலநிலை மாற்றம் மற்றும் தற்போது சர்வதேச அளவில் பரவியுள்ள தொற்றுநோய் மற்றும் பரந்த மாறுபட்ட சூழ்நிலையில் அனைத்து வகையான வாழ்க்கையின் வாழ்வாதாரத்திற்கும் நல்வாழ்விற்கும் இன்றியமையாதவை, எனவே, உயிரிப்பல்வகைமைகளின் பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாடானது காலநிலை மீள்தன்மை, உணவு, நீர் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை அடைவதற்கும், உண்மையில் நீண்ட காலத்திற்கான நமது இருப்புக்கு மிகவும் முக்கியமானது.

உயிரிப்பல்வகைமை பாதுகாப்பு அதன் கூறுகளின் நிலையான பயன்பாடு மற்றும் மரபணு வளங்களின் பயன்பாட்டினால் எழும் நன்மைகளை நியாயமான மற்றும் சமமான பகிர்வு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் 1994ம் ஆண்டில்

நடைபெற்ற உயிரிப்பல்வகைமை மாநாட்டில் இந்தியா ஒரு உறுப்பினராக ஆனது. இம் மாநாட்டில் தீர்மானங்களை இந்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளதால் அதன் தேசிய கடமைகளின் ஒரு பகுதியாக, இந்தியாவில் உயிரியல்பல்வகைமை சட்டம் 2002 மற்றும் அதனைத் தொடர்ந்து உயிரிப்பல்வகைமை விதிகள் இயற்றப்பட்டன, இது சமூகம் சார்ந்த நிலையான உயிரிப்பல்வகைமை பாதுகாப்பை நிறுவனமயமாக்குவதற்கான சட்டக் கட்டமைப்பை வழங்குகிறது. இந்தச் சட்டப்படி அனைத்து மாநிலங்களிலும் உயிரிப்பல்வகைமை சட்ட விதிகளை நடைமுறைப்படுத்த உயிரிப்பல்வகைமை வாரியங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் உயிரிப்பல்வகைமைகளை பாதுகாக்க உள்ளூர் சமூகங்களுக்கும் அதிகாரம் அளிக்க முயல்கிறது. மேற்கூறிய உயிரிப்பல்வகைமை சட்டத்திற்கு இணங்க, தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியம் 2008ல் தமிழ்நாடு அரசின் தன்னாட்சி பெற்ற, சட்டப்பூர்வ ஒழுங்குமுறை அமைப்பாக உயிரிப்பலவகைமை விதிகளை முழு மூச்சுடன் செயல்படுத்துவதற்காக அமைக்கப்பட்டது.

உயிரிப்பல்வகைமை சட்டம் பிரிவு 41ன் படி, ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் அதன் எல்லை பகுதிக்குள் உயிரிப்பல்வகைமை மேலாண்மைக் குழுவை அமைத்து உயிரியல் பல்வகைமை பாதுகாத்தல், நிலையான பயன்பாடு மற்றும் உயிரிப்பல்வகைமை உயிரினங்களை ஆவணப்படுத்தல் ஆகியவற்றை சட்டப்படி மேற்கொள்ள வலியுறுத்துகிறது. இதன்படி 13607 உள்ளாட்சி அமைப்புகளில் இந்நாள் வரை உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்களின் முக்கிய செயல்பாடுகளில் ஒன்றாக அதன் எல்லைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் கிடைக்கும் உயிரியல் வளங்களின் பட்டியலான மக்கள் உயிரிப்பல்வகைமை பதிவேட்டினை (People Biodiversity Register) தயாரித்தல், பராமரித்தல் மற்றும் அதனை சரிபார்த்தல் ஆகும். இதன்படி தோற்றுவிக்கப்பட்ட அனைத்து உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்களிலும் மக்கள் உயிரிப்பல்வகைமை பதிவேடுகள் தயாரிக்கப்பட்டு தற்போது அவற்றின் புதுப்பித்தல் மற்றும் சரிபார்ப்பு பணிகள் நடந்து வருகிறது.

மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான தொழில்நுட்ப ஆதரவு குழுக்கள் உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்களுக்கு தொழில்நுட்ப வழிகாட்டுதலை வழங்கவும், உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்களை வலுப்படுத்தி மக்கள் உயிரிப்பல்வகைமை பதிவேடு தயாரித்தல், மேம்படுத்தல் மற்றும் சரிபார்ப்பு ஆகியவற்றிற்கு அவர்களுக்கு உதவ அமைக்கப்பட்டுள்ளன.

உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்கள் செயல்பாட்டிற்கான வழிகாட்டுதல்களின் படி, அவற்றின் உருவாக்கம் மற்றும் குழுக்களின் தொடக்க நிதிக்கு உரிய தொகை பெற வேண்டும். இது தொடர்பாக, தேசிய உயிரிப்பல்வகைமை ஆணையம் வழங்கிய நிதியில் முதல் தவணையாக 13.12.2021 அன்று மாண்புமிகு வனத்துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரிய தலைவரால் 90 வட்டார அளவிளான மாதிரி உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்களுக்கு ரூ. 45.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. . எஞ்சிய 26.39 இலட்சம், 90 வட்டார அளவிலான மாதிரி உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்களுக்கு தமிழ்நாடு

உயிரிப்பல்வகைமை வாரியத்தால் 18.3.2022 அன்று இரண்டாம் தவணையாக வழங்கப்பட்டது.

தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியம், உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்கள் மற்றும் தொடர்புடைய பிற துறையினருக்கும் நேரடியாகவும் இணைய வழியிலும் உயிரிப்பல்வகைமை தொடர்பாக பயிற்சி அளித்துள்ளது. இதுவரை 90 உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சி அளிக்கும் நோக்கத்திற்காக வாரியம் பல்வேறு விளம்பரங்கள் மற்றும் பயிற்சி ஆவணங்களை உருவாக்கியுள்ளது. பல்வேறு துறை அதிகாரிகள் மற்றும் தொடர்புடைய பிற துறையினருக்கும் உயிரிப்பல்வகைமை தொடர்பான திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

உயிரியல் பல்வகைமை சட்டம் 2002, பிரிவு 37(1)ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, மாநில அரசு, உள்ளாட்சி அமைப்புகளுடன் கலந்து ஆலோசித்து உயிரியல் பல்வகைமை முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை பாரம்பரிய உயிரிப்பல்வகைமை தளமாக (Biological Heritage Site) அறிவிக்கலாம். ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் ஒரு பாரம்பரிய உயிரிப்பல்வகைமை தலத்தையாவது அறிவிக்க அரசு

கருதுகிறது. இது வரை 36 கருத்துருக்கள் பெறப்பட்டு வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

உயிரிப்பல்வகைமை சட்டத்தின்படி அணுகுதல் மற்றும் பலன் பகிர்வு நடைமுறைகளின் கீழ், உயிரியல் வளங்களை அணுகவும், வணிக முறையில் பயன்படுத்தவும் விரும்பும் நிறுவனங்கள், உயிரியல் வளங்களைப் பயன்படுத்துவதால் எழும் பலன்களை நியாயமான முறையில் பயன் கோருபவர்களுடன் சட்டப்படி பகிர்ந்து கொள்ள கடமைப்பட்டுள்ளனர். இது வரை 53.04 இலட்சம் வசூலிக்கப்பட்டு உரிய பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூ. 49.15 இலட்சம், 13.12.2021 அன்று நடைபெற்ற வாரியத்தின் 10வது கூட்டத்தின் போது, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியத் தலைவரால் வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பை அடைவதற்கும் நிலையான வளர்ச்சி இலக்குகளை நோக்கி செறிவான முன்னேற்றத்தை அடைவதற்கும், வலுவில்லாமல், ஆரம்ப நிலையில் இருக்கும் உயிரிப்பல்வகைமை மேலாண்மை குழுக்களுக்கு தேவையான முழு ஆதரவை வழங்குவதன் மூலம், அவைகளை துடிப்பான மற்றும் தன்நிறைவான அமைப்புகளாக

மாற்றுவதற்கு மாநில அரசு உறுதியாக உள்ளது. மாநில உயிரிப்பல்வகைமை வாரியத்தை வலுப்படுத்தி தற்போதைய திட்டங்களில் உயிரிப்பல்வகைமை பாதுகாத்தலை முதன்மை நீரோட்டத்திற்குக் கொண்டு வந்து தொடர்புடைய பிற துறைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் விரும்பிய பயன்களைப் பெற முடியும்.

## 8. 2 மாநில வன உயிரின வாரியம்

வன உயிரின (பாதுகாப்பு) சட்டம், 1972ன் கீழ் உள்ள பிரிவு 6– ன்படி, தமிழ்நாடு மாநில வன உயிரின வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாரியமானது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையில் இயங்கி வருகிறது. இவ்வாரியத்தில் 3 சட்டமன்ற உறுப்பினர்கள், 14 அலுவல் வழி உறுப்பினர்கள் மற்றும் 13 அலுவல் சாரா உறுப்பினர்கள் உள்ளனர். வன உயிரினம் மற்றும் முக்கிய தாவர வகைகளை பேணிப் பாதுகாப்பதற்கான கொள்கையை வகுப்பதில் இவ்வாரியம் அரசுக்கு உரிய அறிவுறையினை வழங்குகிறது. வன உயிரினங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கும், உரிய நடவடிக்கைகள் குறித்தும் அரசுக்கு உரிய பரிந்துரைகளை இவ்வாரியம் வழங்கும்.

## 8.3 தமிழ்நாடு உயிரியல் பூங்கா ஆணையம்

தமிழ்நாடு உயிரியல் பூங்கா ஆணையம் மாநில அரசால் 2005–ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கும் இந்த ஆணையம், மத்திய உயிரியல் பூங்கா ஆணையம், ஒன்றிய அரசு, மாநில அரசு மற்றும் இதர முகமைகளிலிருந்து நேரடியாக பெறப்படும் நிதி மற்றும் உதவித் தொகைகளை உயிரியல் பூங்காக்கள் மேம்பாட்டிற்கு பயன்படுத்த வழிவகை செய்யும்.

## 8.4 தமிழ்நாடு மாநில ஈரநிலங்கள் ஆணையம்

தமிழ்நாடு ஈரநிலங்கள் ஆணையமானது, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஈரநிலங்களின் பாதுகாப்பு, வளம் பேணல் மற்றும் சூழலியல் மறுசீரமைப்புக்கான முதன்மை ஆணையமாகும்.. இந்த மாநில ஈரநிலங்கள் ஆணையத்தை அமைப்பதில் முன்னோடி மாநிலங்களில் தமிழ்நாடு மாநிலமும் ஒன்றாகும். 2016–ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில ஈரநிலங்கள் ஆணையம், 26.09.2017–ல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள் 2017–ன் படி தமிழ்நாடு

ஈரநிலங்கள் ஆணையம் 2019 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது. இதேபோல், மாவட்ட அளவில் ஈரநிலங்களைப் பாதுகாத்தல், மேலாண்மை செய்தல், வளம் பேணல் மற்றும் ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள் 2017–ஐ நடைமுறைப்படுத்துவதற்காக மாநில ஈரநிலங்கள் ஆணையத்திற்கு உதவும் பொருட்டு 2017–ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மாவட்ட அளவிலான ஈரநிலங்கள் மேலாண்மைக் குழுவானது 2019–ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது .

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், அரசு தலைமை செயலாளரை துணைத் தலைவராகவும் கொண்டு தமிழ்நாடு மாநில ஈரநிலங்கள் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. ஈரநிலங்களின் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் மேலாண்மைக்கென மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு, மாவட்ட அளவிலான மேலாண்மைக் குழுக்கள் இயங்கி வருகின்றன.

**<u>தமிழ்நாடு மாநில ஈர நிலங்கள் ஆணையத்தின் செயல்பாடுகள்</u>**

- ஈரநிலங்களின் பட்டியலைத் தயாரித்தல்

- அனைத்து ஈரநிலங்களையும் எண்ம முறையில் உள்ளடக்கிய இருப்பு பட்டியல் தயாரித்தல்
- அறிவிக்கை செய்யப்பட வேண்டிய இயற்கை ஈரநிலங்களின் பட்டியலைத் தயாரித்தல்,
- அறிவிக்கப்பட்ட ஈரநிலங்களுக்குள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய, அனுமதிக்கப்பட்ட மற்றும் தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகளின் விரிவான பட்டியலை உருவாக்குதல்
- ஈரநிலங்களைப் பாதுகாத்தல் மற்றும் திறமையாக பயன்படுத்துவதற்கான உத்திகளை வரையறுத்தல்
- அறிவிக்கப்பட்ட ஒவ்வொரு ஈரநிலங்களுக்கும் ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டத்தை மதிப்பாய்வு செய்தல்
- ஈரநிலங்கள் (பாதுகாப்பு மற்றும் மேலாண்மை) விதிகள், 2017 அமலாக்கத்தை உறுதி செய்தல்

- மாநிலத்திற்குள் உள்ள அனைத்து ஈரநிலங்கள் சார்ந்த குறிப்பிட்ட காரணங்களுக்கு முதன்மை ஆணையமாக செயல்படுதல்
- ஈரநிலங்களின் பாதுகாப்பு மற்றும் நிலையான மேலாண்மைக்கு தேவையான வழிகாட்டுதல்களை அந்தந்த செயல்படுத்தும் நிறுவனங்களுக்கு வழங்குதல்
- ஈரநிலங்களின் முக்கியத்துவம் குறித்து உள்ளூர் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

ஈரநிலங்கள் சுற்றுச்சூழல் அமைப்புகள் நீர்நிலை சுழற்சியின் முக்கிய பகுதிகளாகும், அதிக உற்பத்தித் திறன் கொண்டவை, வளமான பல்லுயிர்ப் பெருக்கத்தை ஆதரிக்கின்றன மற்றும் நீர் சேமிப்பு, நீர் சுத்திகரிப்பு, வெள்ளம் தணிப்பு, புயல் தடுப்புகள், மண் அரிப்பு, நீர்நிலை மறுசுழற்சி, நுண்ணிய காலநிலை ஒழுங்குமுறை, நிலப்பரப்புகளின் புற அமைப்பு மேம்பாடு போன்ற பரந்த அளவிலான சுற்றுச்சூழல் சேவைகளை வழங்குகின்றன. அதே நேரத்தில் பல குறிப்பிடத்தக்க பொழுதுபோக்கு, சமூக மற்றும் கலாச்சார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கிறது.

பலர் தங்கள் வாழ்வாதாரத்திற்காகவும் உணவு மற்றும் தண்ணீருக்காகவும் ஈரநிலங்களைச் சார்ந்துள்ளனர். மேற்குறிப்பிட்ட உண்மைகளை உணர்ந்து, 100 ஈரநிலங்களின் சூழலியலை மேம்படுத்தவும், அதன் இயற்கை சூழலை மீள்உருவாக்கி அதை சார்ந்துள்ள சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் 13.08.2021 அன்று சட்ட சபை கூட்டத்தொடரில் முதல் முறையாக "தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம்" அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம், 5 ஆண்டுகளில் 100 ஈரநிலங்களைக் கண்டறிந்து வரைபடமாக்குவது மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை மையமாகக் கொண்டு சுற்றுச்சூழல் சமநிலையை மீட்டெடுக்கும். உள்ளூர் சமூகங்கள் தொடர்புடைய அனைத்து பங்குதாரர்களையும் உள்ளடக்கி, பங்கேற்பு செயல்முறையின் மூலம் ஒரு ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டத்தைத் தயாரித்து, ஈரநிலங்களின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. அனைத்து நடவடிக்கைகளும் எண்மிய தொழில்நுட்பங்கள் மூலம் மேற்கொள்ளப்படும். மேற்கூறிய பணியின் கீழ், ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டங்களின்

அடிப்படையில் இந்த ஈரநிலங்களை உறுதி செய்வதற்காக அறிவிப்பு மற்றும் சுற்றுச்சூழல் மறுசீரமைப்புக்காக 100 இயற்கை ஈரநிலங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேலும், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்துடன் இணையும் சுமார் 50 ஈரநிலங்கள், சென்னை நகரம் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் அண்மையில் ஏற்பட்ட பெரிய அளவிலான வெள்ளத்தின் அடிப்படையில் சென்னை நகர்ப்புற மற்றும் புறநகர் வெள்ளத்தைத் தணிப்பதற்காகவும் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பிற்காகவும் முன்மொழியப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டத்தின் அடிப்படையில் மேற்கூறிய ஈரநிலங்கள் சூழலியல் முறையில் மீட்டெடுக்கப்படும்.

தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம் அறிவிக்கப்பட்டதிலிருந்து மாவட்ட அளவிலான ஈரநில மேலாண்மைக் குழுக் கூட்டங்கள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட வன அலுவலர்கள் / வனஉயிரின காப்பாளர்கள் மாவட்ட அளவில் முதன்முறையாக அனைத்து ஈரநிலங்களையும் புவிசார் ஒருங்கிணைப்புகளுடன் அடையாளம்

காணுதல் மற்றும் வருவாய் புல எண்கள் எடுக்கப்பட்டு வருகிறது.

ராம்சார் உடன்படிக்கை (Ramsar Convention) என்பது, ஈரநிலங்களின் பாதுகாப்பு, மற்றும் அவற்றின் அறிவுசார்ந்த முறையான பயன்பாடு என்பவை தொடர்பான ஒரு பன்னாட்டு ஒப்பந்தம் ஆகும். இதை ஈரநிலங்களுக்கான உடன்படிக்கை என்றும் அழைப்பதுண்டு. 1971ல் இந்த ஒப்பந்தம் ஈரானில் உள்ள ராம்சார் என்னும் நகரில் கையெழுத்தானது. இந்த நகரின் பெயரைத் தழுவியே ராம்சார் உடன்படிக்கை என்னும் பெயர் ஏற்பட்டது. ராம்சார் உடன்படிக்கை என்பது உலகத்தரம் வாய்ந்த ஈரநிலங்களை பாதுகாப்பதாகும். ராம்சார் உடன்படிக்கையின் கீழ் மொத்தம் 170 உலக நாடுகள் உறுப்பினராக உள்ளன. இதில் இந்தியா 1982 பிப்ரவரி 1 முதல் உறுப்பினராக உள்ளது .

ராம்சார் ஈரநிலங்கள் என்பது சதுப்புநிலம் (Marsh), நீர் செறித்த சதுப்புநிலம் (fen), கரிநிலம் (peatland) அல்லது நீர், இயற்கை அல்லது செயற்கை, நிரந்தர அல்லது தற்காலிக, நிலையான அல்லது பாயும் நீருடன், புதிய, சிறிது உப்பான அல்லது உப்பு நீர் , கடல் நீரின் பகுதிகள் உட்பட, குறைந்த அலையின் ஆழம்

ஆறு மீட்டருக்கு மிகாமல் இருக்கும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

தற்போது, தமிழ்நாட்டில் ஒரே ஒரு ராம்சார் தளம் மட்டுமே உள்ளது. அதாவது, 2002 ஆம் ஆண்டில் நாகப்பட்டினத்தில் உள்ள கோடியக்கரை ஒருங்கிணைந்த ஈரநில வளாகம் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ராம்சார் தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு நிதியினை இந்த ஈரநிலத்திற்கு பெற இயலும்.

காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்கான இயற்கை அடிப்படையிலான தீர்வாக ஈரநிலங்கள் உள்ளன. இதைக் கருத்தில் கொண்டு, மன்னார் வளைகுடாவிற்குள் சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் கடல் புற்கள் நடவு மூலம் கடல் வாழ்விடத்தை மீட்டெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னையின் நிலையான கடற்கரை மேலாண்மைக்கான தேசிய மையத்தின் வழிகாட்டுதலின் கீழ், கூடுதல் கார்பன் மடுவை உருவாக்கவும் கடல் பசு வாழ்விடத்தை மேம்படுத்துதலையும் திட்டம் செய்யப்பட்டுள்ளது. கடல் புற்கள் மட்டும் ஆண்டுக்கு ஒரு ஹெக்டேருக்கு 2,74,00,000 டன்கள் (27.4 டெரா கிராம்) கார்பனை

படிய செய்கிறது என்று அறிவியல் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஈரநிலங்களில் கூடுதல் கார்பன் மடுவை உருவாக்குவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக மாற விரும்புகிறது.

தமிழ்நாடு ஈரநிலங்கள் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையை மக்கள் இயக்கமாக உருவாக்க தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம் திட்டமிடுகிறது, அதன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஈரநிலங்களின் நண்பர்கள் (வெட்லேண்ட் மித்ரா) உருவாக்கப்பட்டு, உள்ளூர் சமூகங்கள் ஈரநிலத்தை பாதுகாப்பாக வைத்திருக்கவும் அதன் தனித்துவத்தைப் பாதுகாப்பதிலும் அரசாங்கத்தின் முயற்சிகளை எளிதாக்குகிறது. மேலும், எதிர்கால தலைமுறையினருக்கான சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

## 8.5 பள்ளிக்கரணை சதுப்புநிலப் பாதுகாப்பு ஆணையம்

பள்ளிக்கரணை சதுப்புநிலத்திற்கென மாநில / ஒன்றிய அரசுகளிலிருந்து பெறப்படும் / விடுவிக்கப்படும் நிதியினை உரிய வகையில் பயன்படுத்தி மேலாண்மை செய்யும் பொருட்டு பள்ளிக்கரணை சதுப்புநிலப் பாதுகாப்பு ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. நிதி, சுற்றுச்சூழல், சுற்றுலா, சென்னை மாநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர்

வாரியம் மற்றும் பொதுத்துறை போன்ற பல்வேறு துறைகளின் ஈடுபாட்டுடன் சதுப்பு நிலப்பாதுகாப்பு மற்றும் மேலாண்மையில் ஒருங்கிணைந்த அணுகுமுறையினைக் கையாள இவ்வாணையம் ஏற்படுத்தப்பட்டது. சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திற்குட்பட்ட சதுப்பு நிலங்களுக்கான உயர் தொழில்நுட்ப ஆலோசனை அமைப்பாக இவ்வாணையம் செயல்பட்டு வருகிறது.

### 8.6 ஈடுசெய் காடுவளர்ப்பு நிதி மேலாண்மை மற்றும் திட்ட ஆணையம் (CAMPA)

ஈடுசெய் காடுவளர்ப்பு நிதி சட்டம், 2016 மற்றும் ஈடுசெய் காடுவளர்ப்பு விதிகள், 2018–இன் கீழ் தமிழ்நாடு ஈடுசெய் காடு வளர்ப்பு நிதி மேலாண்மை மற்றும் திட்ட ஆணையம் (Tamil Nadu CAMPA) எனும் சட்ட வழியான அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாநிலத்தின் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், சீரிய வன உயிரின மேலாண்மை மற்றும் கண்காணிப்பு, வனத்துறையில் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் அது சார்ந்த பிற பணிகளை விரைவுபடுத்தும் அமைப்பாக இவ்வாணையம் செயல்பட்டு வருகிறது. TN CAMPA நிதி உதவி மூலம் ஈடு செய் காடு வளர்ப்பு

மற்றும் பிற நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கைகள், வனம் மற்றும் வன விலங்கு மேலாண்மை நடவடிக்கைகள் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்கு மற்றும் கண்காணிப்பதற்கும் ஆணையம் பொறுப்பாகும். இவ்வாணையத்தின் நிர்வாகக் குழுவின் தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் செயல்படுவார். இந்த ஆணையம் வன நிலங்களை வனமற்ற பணிகளுக்காகப் பயன்படுத்துவதால் ஏற்படும் தாக்கத்தினைத் தணிக்கும் அமைப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும், ஈடுசெய் காடு வளர்ப்பு நிதியினை விரைவாக விடுவித்து, வெளிப்படைத் தன்மையுடன் உரிய முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்யும் அமைப்பாகவும் இவ்வாணையம் இயங்கி வருகிறது.

## 9. வன மேலாண்மை

மனித நாகரிகத்தின் நீண்டகால வாழ்வாதாரத்திற்கு வனங்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை மிகவும் இன்றியமையாதது. உள்ளூர் சமூகங்களின் முழுமையான பங்கேற்பின் வாயிலாக வனங்களின் சீரிய பாதுகாப்பு மற்றும் மேலாண்மையில் உரிய பலன்களை அடையமுடியும் என்பதை தமிழ்நாடு வனத்துறை நன்கு உணர்ந்துள்ளது. சமூக, பாதுகாப்பு மற்றும் உற்பத்தித் தேவைகளை நிறைவு செய்யும்

பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள வனங்கள் பின்வரும் விரிவான நோக்கங்களுடன் மேலாண்மை செய்யப்பட்டு வருகின்றன.

1. வனங்கள் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாப்பதன் வாயிலாக, உயிர்ப்பன்மை மற்றும் மரபியல் வளங்களைப் பேணுதல்
2. வனப்பகுதிகளில் நீர்வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் பெருக்குதல்
3. வனங்கள் அடர்ந்த பகுதிகளின் மேம்பாட்டிற்காக தரங்குன்றிய காடுகளை மீளுருவாக்கி அதன் இயல்பு நிலைக்கு கொண்டு வருதல்
4. பழங்குடியினர் மற்றும் இதர வனம் சார்ந்து வாழும் சமுதாயத்தினரின் நலன் மற்றும் பொருளாதார செழுமையினை நிலைத்த சூழல் தன்மையுடன் உறுதி செய்தல்

## 9.1 வனப்பாதுகாப்பு

சட்டத்திற்கு எதிராக மரம் வெட்டுதல், தீ வைத்தல், வனநிலங்களை ஆக்கிரமித்தல், மணல் மற்றும் பல்வேறு வகையான வளங்களை அகற்றுதல்,

வனஉயிரினங்களை வேட்டையாடுதல் போன்றவற்றிலிருந்து வன வளங்களை பாதுகாப்பது மற்றும் பல்லுயிர்ப் பெருக்கத்தால் வனவளம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. மேற்காணும் சட்ட விரோத நடவடிக்கைகளை தடுக்கவும், வன வளங்கள் பாதுகாப்பினை உறுதி செய்யவும் மற்றும் உயிர்ப்பன்மையினை பெருக்கவும் தமிழ்நாடு வனத்துறை பின்வரும் உத்திகளை வகுத்துள்ளது.

1. முன்களப்பணியாளர்கள் நியமனம் வாயிலாக வனப்பாதுகாப்பினை பலப்படுத்துதல் மற்றும் அவர்களின் பணித்தன்மை குறித்த அறிவு மற்றும் திறனை மேம்படுத்த சிறப்புப் பயிற்சிகள் வழங்குதல்
2. பணியாளர்களுக்கு நவீன ஆயுதங்கள் மற்றும் படைக்கலன்கள் வழங்குதல், தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி உள்கட்டமைப்பினை பலப்படுத்துதல்.
3. புலனாய்வுத் தகவல் சேகரிப்பினை மேம்படுத்துதல் மற்றும் பிற அமலாக்க அமைப்புகளுடன் ஒருங்கிணைத்தல்

4. துல்லிய புவியிடங்காட்டி அமைப்புகள் (Differential Global Positioning Systems), தொலையுணர்வு செயற்கைக்கோள் தரவுகள் (Remote Sensing) மற்றும் புவித்தகவல் அமைப்பு (GIS) தொழில்நுட்பம் போன்ற மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வன எல்லைகளை அளவை செய்து வன நிலங்களை ஒருங்கிணைத்தல்
5. மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்களுடன் கண்காணிப்பு அமைப்பினை உருவாக்குதல்
6. கடல்சார் சூழலமைப்பு பாதுகாப்பினை பலப்படுத்துதல்

மாநிலத்தின் வன மேலாண்மைக்கு வனத் தீ நிகழ்வுகள் மிகப்பெரிய சவால்களாக உள்ளன. தமிழ்நாட்டின் பெரும்பாலான காடுகள் இயற்கையாகவே இலையுதிர் தன்மை கொண்டவையாக இருப்பதால், தீ நிகழ்வுகள் அடிக்கடியும், அதிகமாகவும் நிகழ்கின்றன. பல்வேறு மனிதக் காரணிகளால் மாநிலத்தின் வனங்கள் அடிக்கடி தீ நிகழ்வுக்கு உள்ளாகின்றன.

தற்போது மாநிலத்தின் வனங்களாட்சி (Territorial) மற்றும் வன உயிரினக் கோட்டங்களுக்கு, 13 வனப்பாதுகாப்புப் படைகள், 17 வனக்காவல் நிலையங்கள் மற்றும் 11 சுழல் தணிக்கைச் சாவடிகள் துணை புரிகின்றன. இவை மாநிலம் முழுவதுமுள்ள முக்கியமான மற்றும் வனப்பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள இடங்களில் இயங்கி வருகின்றன. மேலும், கண்காணிப்பு வசதிகளுடன் கூடிய 112 வனத் தணிக்கைச் சாவடிகள் (Forest Check Posts) அமைந்துள்ளன.

பாதுகாப்பு கண்காணிப்பு மற்றும் வனம், வன உயிரின குற்ற புலனாய்வு தகவலகம், அரசாணை எண்.117 சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை நாள்.27.09.2017 ன் படி கூடுதல் முதன்மை தலைமைப் பாதுகாவலர் பதவி நிலையிலான (பாதுகாப்பு கண்காணிப்பு மற்றும் வனம், வன உயிரின குற்ற புலனாய்வு தகவலகம்) கட்டுப்பாட்டின் கீழ், பேரிடர் மேலாண்மை, தீ தடுப்பு மற்றும் தணிப்பு மற்றும் பிற அவசரகால சூழ்நிலைகளில் தேவைகளைப் நிறைவு செய்ய வன உயரடுக்குப் படை உருவாக்கப்பட்டது. வன வளங்களைப் பாதுகாக்க, வன விலங்கு குற்றக் கட்டுப்பாட்டுப் பணியகம் (WCCB), சுங்கம், காவல்துறை மற்றும் பிற துறைகள் போன்ற பிற

சட்ட அமலாக்க நிறுவனங்களுடன் பாதுகாப்பு, கண்காணிப்பு மற்றும் வனம், வன உயிரின குற்ற புலனாய்வு தகவலகம் ஒருங்கிணைக்கிறது. அதன் சொந்த தகவல் வலையமைப்பிலிருந்து புலனாய்வு உள்ளீடுகளைச் சேகரித்து, அவற்றை மற்ற சட்ட அமலாக்க நிறுவனங்களுடன் பகிர்;ந்து கொள்கிறது மற்றும் வன நிலையங்கள், வனப் பாதுகாப்புப் படைகள் மற்றும் பிற பணியாளர்கள் மூலம் இரகசிய மற்றும் வழக்கமான குற்றங்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் உள்ளது. 2021–22 ஆம் ஆண்டில் பாதுகாப்பு கண்காணிப்பு மற்றும் வனம், வன உயிரின குற்ற புலனாய்வு தகவலகத்தின் (PVFWCB) பல்வேறு நிகழ்வுகளில், இரகசிய நடவடிக்கைகள் மூலம் யானை தந்தங்கள், ஆம்பார்கிரிஸ், சிவப்பு சந்தனம் போன்ற சட்டவிரோத கடத்தல் பொருட்கள் பெரிய அளவில் பறிமுதல் செய்யப்பட்டு தவறு செய்த நபர்கள் மீது தகுந்த நீதித்துறை நடவடிக்கையினை தொடர சம்பந்தப்பட்ட வனங்கள் ஆட்சி சரகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டனர்.

### 9.1.2 வனத் தீ கட்டுப்பாடு

உள்ளூர் மற்றும் உலக அளவில் மாறுபடக்கூடிய பரந்த அளவிலான பொருளாதார மற்றும் சூழலியல்

தாக்கங்களை ஏற்படுத்துகிறது. இது வாழ்க்கை, உடைமை மற்றும் உயிர்ப்பன்மை, வன உயிரின வாழ்விடங்களில் வனப்பரப்பு குறைதல், நீர்ப்பிடிப்புப் பகுதிகள் தரங்குன்றுதல், பசுமைக்குடில் வாயுக்கள் அதிகரிப்பதன் விளைவாக புவி வெப்பமடைதல் மற்றும் கார்பன் மடுக்கள் குறைதல் ஆகியவற்றில் நேரடி தாக்கங்களை வனத்தீ நிகழ்வுகள் ஏற்படுத்துகின்றன.

வனத் தீயினைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் பின்வரும் வழிமுறைகள் மாநிலத்தில் கடைபிடிக்கப்படுகின்றன.

1. தேசிய தொலையுணர்வு மையம் (National Remote Sensing Centre) மற்றும் இந்திய வன அளவை நிறுவனத்திடமிருந்து கிடைக்கும் வன எச்சரிக்கை அமைப்புகள் (Forest Fire Alerts)
2. வனத் தீ தொடர்பான தகவல்களைப் அளிக்க கட்டணமில்லா தொலைபேசி எண் (Toll free)
3. கம்பியில்லா தந்தி (Wireless) மற்றும் தகவல் தொடர்பு கட்டமைப்பு
4. வனத் தீக்கோடுகள் உருவாக்கம் மற்றும் பராமரிப்பு

5. கட்டுப்பாடுடன் கூடிய வனத்தீயை ஏற்படுத்தி பெரும் தீ நிகழ்வுகளைத் தவிர்த்தல்.

6. கண்காணிப்பு கோபுரங்கள், நீர்சேகர கட்டமைப்புகள் மற்றும் வாகனங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்

7. மனித வளத்தினை திறம்பட பயன்படுத்துதல், திறன்களை மேம்படுத்துதல், தீயணைப்பு உபகரணங்கள் வழங்குதல், அதிவிரைவுக் குழுக்கள் (Rapid Response Teams) மற்றும் வன உயர்நிலைப் படையினை (Forest Elite Force) பலப்படுத்துதல்

8. தொடர் சுற்றுக் காவல் மேற்கொள்ளுதல்

9. களப்பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் திறன் மேம்பாடு

10. பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், விளம்பரப் பலகைகள் அமைத்தல் மற்றும் பொதுமக்கள் பங்கேற்புடன் மேற்கொள்ளப்படும் வனதீத்தடுப்பு நடவடிக்கைகளை ஊக்குவித்தல்

11. ஆளில்லா குட்டி விமானங்கள் (Drones), அனல்நிழற்படக்கருவிகள் (Thermal Imaging

Cameras), மின்னணு கண்காணிப்பு (e–Surveillance) போன்ற நவீனக் கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் பயன்பாடு

## 9.2 வன வளங்களைப் பேணுதல்

### வன மற்றும் வன உயிரின உயிர்ப்பன்மை மற்றும் மரபியல் வளங்களின் பாதுகாப்பு

வன உயிரின நலன் என்பது உயிரியல், சமூக மற்றும் சுற்றுச்சூழல் மாற்றங்களுக்கு தகுந்தாற்போல் தன்னைத்தானே தகவமைத்துக் கொள்ளும் உயிரினங்களின் திறன் ஆகும். சூழலியல் தேவைகள் மற்றும் நிலவமைப்பு சார்ந்த நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு, வனநிலப் பகுதிகளில் உயிர்ப்பன்மை பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்க சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும், ஊக்குவிக்கப்பட்டும் வரப்படுகிறது. அந்நிய களைத்தாவர வகைகளை (உண்ணிச்செடிகள், சீமைக்கருவேல், சீகை போன்றவை) அகற்றும் நடவடிக்கையானது, உள்ளூர் தாவர இனங்களுடன் கூடிய பரப்பினை அதிகரித்தல், உள்ளூர் தாவரங்களின் மறு உற்பத்தி மற்றும் வளர்ச்சி, வன உயிரினங்களின் தீவனப்பயிர் பகுதிகள் அதிகரிப்பு, பாதுகாக்கப்பட்ட (வன உயிரினம்) மற்றும்

பிற வனப்பகுதிகளில் செழுமையான உயிர்ப் பன்மை, உள்ளூர் தாவரங்களை மீட்டெடுப்பதன் வாயிலாக வன உயிரினங்களின் வாழ்விட மேம்பாடு மற்றும் தீவனப்பயிர்கள் அதிகரிப்பின் மூலம் மனித–வன உயிரின மோதல்களை குறைப்பது போன்ற வன உயிரின உயிர்ப்பன்மைப் பாதுகாப்பிற்கு தேவையான நடவடிக்கைகள் ஆகும். பல்வேறு திட்டங்களின்கீழ், இப்பணிகளை துறையானது மேற்கொண்டு வருகிறது.

வனப்பகுதிகளில் உள்ள அந்நிய களைச்செடிகளை அகற்றுவது மற்றும் மேலாண்மை செய்வதற்கென தனிக்கொள்கை ஒன்றை அரசு வகுக்கவுள்ளது. வன உயிரினங்களின் நலனைக் கருத்தில் கொண்டு இயற்கை நீர்க்குட்டைகள் மட்டுமின்றி, செயற்கை வழிமுறைகள் மூலமும் குடிநீரைப் பெருக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வன எல்லைப்பகுதிகளில் மனித–வன உயிரின மோதல் நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து, மனித–வன உயிரின மோதல் சிக்கல்களைக் குறைப்பதற்கு பின்வரும் பல்முனை உத்திகள் வகுக்கப்பட்டுள்ளன:

- நீர்வள இருப்பினை உறுதி செய்யவும், தீவனப்பயிர் வளங்களைப் பெருக்கவும் மற்றும் வன உயிரின வாழ்விடங்களை கண்காணித்தல்
- முன் எச்சரிக்கை அமைப்பு (Early Warning System) வாயிலாக முன்னெச்சரிக்கை விடுத்து, வன உயிரின நடமாட்டத்தினைப் பொதுமக்களுக்கு முன் அறிவிப்பு செய்தல்
- உள்ளூர் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
- வன உயிரினங்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உரிய நிவாரணம் வழங்குதல்
- வனப்பகுதிகளை விட்டு வெளியே வரும் வன உயிரினங்களை மீட்டெடுத்தல் மற்றும் அவற்றின் மறுவாழ்விற்கான நெறிமுறைகளை வகுத்தல்
- அதிவிரைவுக் குழு மற்றும் நடமாடும் வனக்கால்நடை உதவி மையங்கள் வாயிலாக வன உயிரினங்களுக்கான மருத்துவ சேவைகளைப் பலப்படுத்துதல்.

வன உயிரினங்களின் விலங்குகளின் பாதுகாப்பிற்கு தொற்றுநோய்களும் அச்சுறுத்தல்களை

ஏற்படுத்துகின்றன. எனவே, கால்நடைத் துறையுடன் இணைந்து வனங்களையொட்டி அமைந்துள்ள கிராமங்களில் கால்நடைகளுக்கான தடுப்பூசி முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

**கடலோர சூழலமைப்பு பாதுகாப்பு மற்றும் மேலாண்மை**

இந்தியாவின் மொத்த கடலோர நீளத்தில் சுமார் 15 விழுக்காடான 1076 கி.மீ. நீளத்தை தமிழ்நாடு கொண்டுள்ளது. வங்காள விரிகுடா, அரபிக்கடல் மற்றும் இந்திய பெருங்கடல் வரை இதன் நீளம் நீண்டுள்ளது. கடலோர மண்டலமானது, பல்வேறு இயற்கை வளங்கள் மற்றும் உயிரினங்களுக்கு வாழ்விடமாக உள்ளது. நம் நாட்டின் கடலோர பகுதியானது மிகவும் அரிதான மற்றும் உயர்ந்த சூழலியல் அமைப்பினைக் கொண்டுள்ளது. சதுப்புநிலங்கள், பவளப்பாறைகள், கடற்பாறைகள், கடல் புல் படுக்கைகள், உவர் சதுப்பு நிலங்கள், மணல் படுக்கைகள், மணல் குன்றுகள் போன்ற பல்வேறு கடலோர வாழ்விடங்களை தமிழகக் கடற்கரை கொண்டுள்ளது. கடலோர சூழலியல் அமைப்பின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, சதுப்புநிலக் காடுகள், ஈரநிலங்கள் மற்றும் கடல் தேசிய பூங்காவை

நிருவகிப்பதற்காக பல்வேறு திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது.

2021–ஆம் ஆண்டின் இந்திய வனநிலை அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் சதுப்பு நிலக்காடுகள் 8 மாவட்டங்களை உள்ளடக்கி 45 சதுர கிலோமீட்டர் பரப்பில் அமைந்துள்ளது. காற்றின் திசைவேகத்தினை குறைக்கவும், காற்று அரிமானத்தைக் குறைக்கவும், ஆழிப்பேரலை, புயல்கள், அலைச்சீற்றங்கள் மற்றும் வெள்ளம் உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்களுக்கு எதிராக கடலோரப்பகுதிகளில் பாதுகாப்பு அரணாக செயல்படுவதற்கும் கடலோரத் தொடர் காற்றுத் தடுப்புக் காடுகள் வளர்க்கப்படுகின்றன.

மன்னார் வளைகுடா உயிர்க்கோள் காப்பகம் மற்றும் மன்னார் வளைகுடா கடல்வாழ் தேசிய பூங்கா திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் கடல்சார் உயிர்ப்பன்மையினை பாதுகாப்பதுடன் பல்வேறு பயன்களுள்ள ஒரு பெரிய உயிர் கோளக் காப்பகத்தில் ஒருங்கிணைந்த உயிர்ப்பன்மை பாதுகாப்பு, நிலையான பல்வேறு பகுதி மேலாண்மை மற்றும் வாழ்வாதார வளர்ச்சிகள் பற்றி விளக்குவதாகவும் உள்ளது.

**காலநிலை மாற்றத் தணிப்பு மற்றும் தகவமைப்பு**

பசுமைக்குடில் வாயுக்கள் வெளியேற்றத்தினைக் குறைப்பதற்கான பல்வேறு பன்னாட்டு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். வனங்களை வளர்த்து கரிமத்தை சேமித்தல் என்பது குறைந்த செலவில் காலநிலை மாற்றத்திற்குத் தீர்வுகாணும் வழிமுறையாகக் கருதப்படுகிறது. பசுமைத் தமிழகத் திட்டத்தினை செயல்படுத்துவதன் வாயிலாக, காலநிலை மாற்றத்தணிப்பு மற்றும் தகவமைப்பில் நெடுந்தூரம் பயணிக்க உறுதுணை புரியும்.

மாநிலத்திலுள்ள வனங்கள் மற்றும் மரப்பரப்பில் அதாவது, ஒரு ஹெக்டேருக்கு மேல் இருக்கும் வனங்களுக்கு வெளியே உள்ள மரங்களில் காணப்படும் கார்பனின் இருப்பு 214.61 மில்லியன் டன்கள் (786. 90 மில்லியன் டன்கள் கார்பன்டை ஆக்சைடுக்கு சமம்). இது நாட்டின் வனங்களில் காணப்படும் மொத்த கார்பனில் 2.98 விழுக்காடு ஆகும் **(ஆதாரம்: இந்திய வனநிலை அறிக்கை, 2021).**

## ஒருங்கிணைந்த நீர்ப்பிரி முகடு மேலாண்மை வாயிலாக நீர்ப்பெருக்கம்

வனங்கள் மற்றும் ஒருங்கிணைந்த நீர்ப்பிரி முகடு மேம்பாடு என்பது ஒரு நீர்பிடிப்பு பகுதியில் உள்ள நிலம், நீர், தாவரம்,வன உயிரினம் மற்றும் மனித இனம் போன்ற அனைத்து இயற்கை வளங்களையும் பாதுகாத்தல், மறு உற்பத்தி செய்தல் மற்றும் சரியான பயன்பாட்டினைக் குறிப்பதாகும். நீர்ப்பிரிமுகடு மேலாண்மையானது ஒருபுறம் இயற்கை வளங்களுக்கும், மறுபுறம் மனிதனுக்கும் வன உயிரினங்களக்கும் இடையேயுள்ள சூழல் சமநிலையைப் பேணுவதில் முக்கிய பங்காற்றுகிறது.

மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்பு மற்றும் ஊரக வறியமக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதல் என்ற இரட்டைக் குறிக்கோள்களுடன் தமிழ்நாட்டில் நீர்ப்பிரிமுகடு மேலாண்மையை ஒட்டி திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன.

ஒருங்கிணைந்த நீர்ப்பிரிமுகடு மேலாண்மையின்கீழ் பல்வேறு வகையான நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றில் மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்புப் பணிகள் (சம உயர் வரப்புகள், தளர்வான கற்பாறை தடுப்பணைகள், சிறு

தடுப்பணைகள், பெரிய தடுப்பணைகள், கசிவு நீர்க்குட்டைகள்) மற்றும் காடு வளர்ப்புப் பணிகளும் அடங்கும். வனம் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது மட்டுமின்றி வனத்தை சாந்து வாழ்வோரின் வாழ்வாதாரப் பாதுகாப்பு போன்றவைகளை அடிப்படையாக கொண்டு நீர்ப்பிரிமுகடு செயல்பாடுகள் உள்ளன.

**பழங்குடியினர் மற்றும் வனம் சார்ந்த பிற சமுதாயத்தினரின் நலன்**

2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 7.21 லட்சம் பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர். இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 1.10 விழுக்காடு ஆகும். பழங்குடியினரின் சமூக–கலாச்சார வாழ்க்கை இயற்கையை மையமாகக் கொண்டது. பழங்குடி மக்களின் நலனுக்கென, வனத்துறை மூலம் கீழ்க்கண்ட நோக்கங்களுக்கான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றது.

- தொடர்பு சாலைகள், குடிநீர், வீட்டுவசதி மற்றும் மரபுசாரா முறை வாயிலாக மின்வசதி போன்ற அடிப்படை வசதிகளை பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு வழங்குதல்

- 20 பழங்குடியினர் பள்ளிகளை நடத்துவதன் வாயிலாக பழங்குடியினர் குழந்தைகளுக்கு பள்ளிக்கல்வி வழங்குதல்
- மாற்று வாழ்வாதாரப் பணிகளுக்காக பழங்குடியினர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்
- பழங்குடியினர் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க தனியார் நிறுவனங்களுடன் இணைந்து பழங்குடியினர் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துதல்

**சூழல் சுற்றுலா**

சுற்றுலா என்பது சமூகப் பொருளாதார மாற்றத்தையும் உள்ளூர் சமூகங்களுக்கு பொருளாதாரச் செழிப்பையும் தரவல்ல ஒரு துறையாகும். தமிழ்நாட்டில் அதிகம் அறியப்படாத பல்வேறு சூழல் சார்ந்த பகுதிகள் உள்ளன. பொறுப்பான சுற்றுச்சூழல் என்பது இயற்கை பாரம்பரியத்தை பாதுகாப்பதுடன், வேலைவாய்ப்பினை உருவாக்குதலுடன், உள்ளூர் கலாச்சாரத்தையும், மரபையும் ஊக்குவிப்பதாகும். தமிழ்நாடு சூழல் சுற்றுலா கொள்கை மறுஆய்வு செய்யப்பட்டு, பொறுப்புள்ள சூழல் சுற்றுலா கொள்கை 2018

உருவாக்கப்பட்டுள்ளது. இக்கொள்கை இயற்கை பாரம்பரியத்தை பாதுகாக்கவும், உள்ளூர் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை மேம்படுத்தவும் உதவும். சூழல் சுற்றுலா கொள்கை கட்டமைப்பானது உள்ளூர் சமூகத்துடன் வளங்களைப் பகிர்தலுடன் நிலையான மற்றும் பொருத்தமான சூழல் சுற்றுலா வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துவதை உறுதி செய்கிறது.

**வன ஆராய்ச்சி**

தமிழ்நாடு வனத்துறையின் ஆராய்ச்சிப்பிரிவானது 1918–ம் ஆண்டு துவக்கப்பட்டு, 2018–ம் ஆண்டில் நூற்றாண்டைக் கொண்டாடியது. அவ்வப்போது களத்தின் தேவையினை கண்டறிவதை அடிப்படையாகக் கொண்டு அதன் மீது பல்வேறு ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஆராய்ச்சிப் பிரிவு சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு சென்னை, கோவை, தருமபுரி, திருச்சி மற்றும் மதுரை ஆகிய ஐந்து கோட்டங்கள் தமிழ்நாட்டில் உள்ள 7 வேளாண் தட்பவெட்ப மண்டலங்களிலும் மொத்தமாக 52 ஆராய்ச்சி மையங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் பல்வேறு மரவகைகளில் விதையில்லா இனப்பெருக்கத்தின் மூலம் விதை உற்பத்திதோட்டம், விதையின் மூலம் விதை உற்பத்தி தோட்டம், விதை உற்பத்தி தோட்டம் எழுப்பப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் 1000–த்திற்கு மேல் நல்லியல்பு மரங்கள் தேர்வு செய்யப்பட்டு அதிலிருந்து தரமான விதைகள் சேகரம் செய்யப்பட்டுவருகிறது.

ஆராய்ச்சிப் பிரிவின் முக்கிய குறிக்கோள்களாக தேர்வு செய்யப்பட்ட நல்லியல்பு மரங்களிலிருந்து விதைகள் சேகரம் செய்து விநியோகம் செய்தல் மற்றும் தரமான விதைகளை பதப்படுத்தி பாதுகாத்தல், தரமான விதைகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்தல், வேளாண்காடுகளுக்கு தகுந்த மரங்களை கண்டறிதல், தொழிற்சாலைகைளுக்கு தேவைப்படும் வேகமாக வளரக்கூடிய மரங்களை கண்டறிதல், தரமான மண்புழு உரம் உற்பத்தி மற்றும் விநியோகம், மரம் அடிப்படையிலான பயன்பாட்டு தயாரிப்புகளின் மதிப்புகூட்டல் மற்றும் அழியும் நிலையில் உள்ள தாவரங்களை மூல உயிருறு வங்கி அமைத்து பாதுகாத்தல் ஆகியவையாகும்.

தற்போது ஆராய்ச்சிப் பிரிவின் செயல்பாட்டினை உயர்த்துதல் என்பது மரபியல் மற்றும் கானக வளர்ப்பு மேம்பாடு மூலம்

உற்பத்தித்திறனை அதிகரித்து, இயற்கை வளத்தின் மீதான அழுத்தத்தைக் குறைப்பது, வேளாண்காடுவளர்ப்பு, தரிசு நிலமேம்பாடு, சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு மற்றும் வனசுற்றுச்சூழலைப்பாதுகாத்தல், வனப்பரப்பளவை அதிகரிக்க பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த மரவகைகளின் உயர்தர நாற்றுக்கள் கிடைப்பதை உறுதிசெய்வது, தனியார் நிலங்களில் அதிக அளவிலான வளர்ப்பை மேற்கொள்ளுதல் ஆகும். ஆராய்ச்சிப் பிரிவில் விதையில்லா இனப்பெருக்கத்தின் மூலம் விதை உற்பத்திதோட்டம், விதையின் மூலம் விதை உற்பத்திதோட்டம், மறுதளிர்ப்பு மற்றும் ஹெட்ஜ்ஸ்டூல் முறையில் எழுப்பப்பட்டு பேணப்பட்டு வருகிறது. தேக்கு, சந்தனம், சில்வர்ஓக், மலைவேம்பு, பீநாரி, தைலம், சவுக்கு போன்ற வருவாய் ஈட்டித்தரும் மர இனங்களுக்கு நுண் தாவர பெருக்கம் மற்றும் பேரின பெருக்கத்தின் மூலம் நாற்றுக்கள் உற்பத்தி செய்யும் முறைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

தற்போதைய ஆராய்ச்சியை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும் பின்வரும் வழிமுறைகள் முன்மொழியப்படுகின்றன. நல்லியல்பு மரத்தேர்வு, விதைத்தோட்டம், விதை உற்பத்தித் தோட்டம்

ஆகியவற்றின் மூலம் பல்வேறு வணிக முக்கியத்துவம் வாய்ந்த மர மற்றும் மருத்துவ தாவரங்களின் மரபணுவை கண்டறிந்து வளப்படுத்துதல், அனைத்து ஆராய்ச்சி மையங்களில் இருக்கக்கூடிய உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்திப் பாதுகாத்தல், உயிரியல் தொழில்நுட்ப ஆய்வுகளை மேற்கொள்ள மேம்பட்ட ஆய்வக வசதிகளை நிறுவுதல், தேவையான தாவரவளங்களின் மரபணுவை வலுப்படுத்தல் மற்றும் நுண்ணுயிரியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்வது, அதிக உற்பத்தித்திறனை ஊக்குவிப்பது, வணிக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வேகமாக வளரக்கூடிய செடிகளை அதிகஅளவில் உற்பத்தி செய்தல் மற்றும் வணிக மரம் மற்றும் மருத்துவப் பொருட்களின் தரத்திற்கான சான்றிதழை வழங்குதல் போன்றவையாகும்,

## 10. வன வருவாய் மற்றும் செலவின விவரங்கள்

### 10.1 வன வருவாய்

தடிமர விற்பனை மற்றும் சமூகக்காடு தோட்டங்கள் விற்பனை ஆகியவை வன வருவாய்க்கான முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன. ஆற்றுப் படுகைகளில்

வளர்க்கப்படும் முதிர்ந்த தேக்கு மரங்கள் ஆண்டுதோறும் அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. முதிர்ந்த தைலமரம் மற்றும் சீகைமரத்திலிருந்து பெறப்படும் வன மூலப்பொருட்கள், காகித ஆலை பிளைவுட் மற்றும் பிற தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருள்களாக வழங்கப்படுகின்றன.

| வ. எண். | வருவாய் – இனங்கள் | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2022 –23 (ரூ. லட்சங்களில்) |
|---|---|---|
| 1 | சந்தன மரம் | 198.25 |
| 2 | தடிமரம் | 6.65 |
| 3 | தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்கள் வழங்குதல் | 86.51 |
| 4 | இதர சிறு வனப்பொருட்கள் | 62.63 |
| 5 | பண்ணைக்காடுகள் வளர்த்தல் (மீள அளிக்கப்படும் தொகையைத் தவிர்த்து) | 945.00 |
| 6 | மூங்கில், முந்திரி, மென்மரம் முதலிய தோட்டங்களின் விற்பனை | 70.09 |

| | | |
|---|---|---|
| 7 | இதர வருவாய்கள் | 3745.17 |
| | மொத்தம் | 5114.30 |
| | பிடித்தங்களைக் கழிக்க (–) | 0.16 |
| | ஆக மொத்தம் | **5114.14** |

## 10 .2 செலவினம்

வன உயிரினங்களின் வாழ்விட மேம்பாடு, வன விரிவாக்க நடவடிக்கைகள், வன ஆராய்ச்சி மற்றும் கல்வித் திட்டங்கள் உட்பட அனைத்து பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் பயனுள்ள முறையில் தொடரும். நிதியொதுக்கத்தில் துறை சார்ந்த திட்டங்களுக்குத் தேவையான மதிப்பீட்டுத் தொகைகள் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளன:–

| திட்டங்களின் பெயர் | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2022–23 (ரூ. லட்சங்களில்) |
|---|---|
| மாநில திட்டங்கள் | 71084.19 |
| வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங்கள் | 10,00 |
| ஒன்றிய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் | 0.01 |
| ஒன்றிய மற்றும் மாநில அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் | 2038.26 |
| மொத்தம் | **73122.46** |

## 11. வனக்கழகங்கள்

### 11. 1 தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்

**1974–ம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம், தைலத் தோட்டங்களை உற்பத்தி செய்து, தொடர்ந்து பராமரித்து, அறுவடை செய்து, கூழ்மர மற்றும் காகித ஆலை நிறுவனங்களுக்கு விநியோகம் செய்தல், வனப்பரப்புகளின் உற்பத்தித் தன்மையை அதிகப்படுத்தப்படுவது, ஊரக வேலைவாய்ப்பு வழங்குவது, மண் வளப்பாதுகாப்பு மற்றும் ஊரக மக்களின் விறகுமர தேவையை நிறைவு செய்தல் ஆகிய நோக்கங்களுடன் செயல்பட்டு வருகிறது.**

இந்தக் கழகம் ரூ.10 கோடி மதிப்பில் அனுமதிக்கப்பட்ட மூலதனம் மற்றும் ரூ.5.64 கோடி மதிப்பிலான வழங்கப்பட்ட செலுத்தப்பட்ட மூலதனத்தைக் கொண்டுள்ளது. தற்போது, 71,540.50 ஹெக்டேர் காப்புக்காடுகள், தமிழ்நாடு வனத்துறையால் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அரசின் ஆணைப்படி ஆண்டு வருவாயில் 30 விழுக்காடு அளவு தொகையினை தமிழ்நாடு வனத்துறைக்கு இக்கழகம் செலுத்தி வருகிறது.

அதிக மகசூல் தரக்கூடிய வகையில் ஒட்டுமுறை நுட்பம், தோட்டங்கள் எழுப்பும் நடவடிக்கைகளில் இயந்திங்கள் பயன்பாடு, பாசனம் ஆகிய நவீன யுக்திகளை

தழுவி தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் வெற்றிகரமாக உற்பத்தியினைப் பெருக்கியுள்ளது. 2020–21 மற்றும் 2021–22 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தில் எழுப்பப்பட்டுள்ள தோட்டங்கள் மற்றும் செலவின விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ.எண் | எழுப்பப்பட்ட தோட்ட வகைகள் | செயல் (ஹெக்டேரில்) | | நிதி (ரூ.லட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | 2020–21 | 2021–22 | 2020–21 | 2021–22 |
| 1 | தைலமரம் | 1462 | 1009 | 535.63 | 488.34 |
| 2 | முந்திரி | 319 | 252 | 72.68 | 154.70 |

தைல மரம் உற்பத்தி செய்வதற்கு மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் விதிக்கப்பட்ட இடைக்கால தடை காரணமாக தைல மரத்திற்கு பதிலாக பொறுத்தமான மாற்று வணிக கூழ்மர இனங்களை நடவு செய்வதற்கான கள/ஆய்வு பரிசோதனைகளை மேற்கொள்ள அரசு பரிந்துரைத்தது. அதன்படி தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் பரிசோதனையின் அடிப்படையில் 23.51 எக்டேர் பரப்பளவில் புதுக்கோட்டை மண்டலத்தில் சவுக்கு

மரக்கன்றுகள் (Clonal Casurina) 2021–22 ஆம் ஆண்டு நடப்பட்டுள்ளது.

நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவு 135–ன்படி, தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் ஒவ்வொரு ஆண்டும் சமூக கூட்டாண்மை பொறுப்புணர்வு மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த மூன்று நிதியாண்டுகளில் சராசரி நிகர லாபத்தில் சமூக கூட்டாண்மை பொறுப்புணர்வு தொகை 2% என கணக்கிடப்படுகிறது. தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் 2021–22 ஆம் ஆண்டில் சமூக கூட்டாண்மை பொறுப்புணர்வு செயல்பாடுகளுக்காக முன்னர் ஆண்டுகளிலுள்ள செலவிடப்படாத தொகை உட்படி ரூ.120.00 இலட்சங்கள் செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது,

2020–21 மற்றும் 2021–22 ஆம் ஆண்டுகளில் காகித ஆலைகளுக்கு விநியோகம் செய்யப்பட்ட கூழ்மரங்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**<u>கூழ்மர விநியோகம் மற்றும் வருவாய்</u>**

| ஆண்டு | விநியோகம் செய்யப்பட்ட அளவு (மெ.டன்னில்) | வருவாய் (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 2020-21 | 2,39,165.073 | 106,42.85 |
| 2021-22 (31.01.2022) | 2,24,443.000 | 99,87.72 |
| 2022-23 (வரவு செலவு திட்ட மதிப்பீடு) | 1,96,000.00 | 87,22.00 |

அண்மைக் காலங்களில், ஒரு ஹெக்டேருக்கு முந்திரித் தோட்டங்களிலிருந்து பெறப்படும் வருவாயினை அதிகரிக்கும் வகையில், தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் அதிக கவனம் செலுத்தி வருகிறது. அதிக வருவாய் ஈட்டும் இரண்டாவது கழகமாக இந்நிறுவனம் உள்ளது. வருவாய் ஈட்டப்பட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## முந்திரி

| ஆண்டு | வருவாய் (ரூ.லட்சத்தில்) |
|---|---|
| 2020-21 | 1463.70 |
| 2021-22 (31.03.2022) | 1691.48 |
| 2022-23 (வரவு செலவு திட்ட மதிப்பீடு) | 1700.00 |

2020-21 மற்றும் 2021-22 ஆம் ஆண்டுகளுக்கான கழகத்தின் வருவாய் மற்றும் செலவின விவரங்கள் மற்றும் 2022-23 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**<u>வருவாய் மற்றும் செலவினம்</u>**

| ஆண்டு | வருவாய் | செலவினம் | லாபம்(+) நட்டம்(-) (ரூ.லட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | | | திட்ட மதிப்பீடு | உள்ளபடியாக |
| 2020-21 | 13749.69 | 10287.76 | -- | 3461.93 |
| 2021-22 | 12901.11 | 10581.81 | 2319.30 | -- |
| 2022-23 (வரவு செலவு திட்ட மதிப்பீடு) | 11478.45 | 9298.52 | 2179.93 | -- |

**2022-23 ஆம் ஆண்டில் எழுப்பப்பட்ட தோட்டங்களின் விபரம் பின்வருமாறு**

| தோட்டங்கள் | செயல் (ஹெக்டேரில்) | நிதி (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| யூகலிப்டஸ் | 1210 | 485.33 |
| முந்திரி | 802 | 362.42 |

## 11 .2 தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் (TANTEA)

சாஸ்திரி-ஸ்ரீமாவோ உடன்படிக்கையின்படி, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் மறுவாழ்விற்காக, சமூகப்பொருளாதார நோக்கத்துடன், தேயிலைத் தோட்டங்களை உருவாக்க, 1968 ஆம் ஆண்டில் தமிழக அரசால் 'அரசு தேயிலைத் திட்டம்' ஏற்படுத்தப்பட்டு, அரசு வனத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டது. பின்னர் 1975ல் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் ஒரு அரசு நிறுவனமாக நிறுவனங்களுக்கான கம்பெனி சட்டம் 1956-ன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.25.00 கோடி ஆகும். இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.14.96 கோடியாகும். தமிழ்நாடு

தேயிலைத் தோட்டக் கழகம் தலையாய குறிக்கோள்கள் கீழ்வருமாறு.

- இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு தேயிலைத் தோட்டங்களில் பணி வழங்கி, அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்.

- நீலகிரி மற்றும் தமிழ்நாட்டின் இதர தகுந்த இடங்களில் அரசு வனத்துறைக்கு சொந்தமான நிலங்களைத் தேயிலைத் தோட்டக் கழகத்தின் மூலம் குத்தகைக்கு எடுத்து, அதில் தேயிலைத் தோட்டங்களை உருவாக்கி, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் தமிழ்நாடு அரசு வனத்துறைக்கு சொந்தமான நிலங்களை குத்தகைக்கு எடுத்து, 4053.758 ஹெக்டேர் நிலத்தில் தேயிலை பயிரிட்டு பராமரித்து வருகிறது. விவரங்கள் பின் வருமாறு.


| நிலை | ஆண்டு | சாகுபடி பரப்பு (ஹெக்டேர்) | | |
|---|---|---|---|---|
| | | நீலகிரி | ஆனைமலை | மொத்தம் |
| முதல் நிலை | 1969–1979 | 1747,32 | -- | 1747,32 |
| இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை | 1979–1984 | 795.87 | -- | 795.87 |
| நான்காம் நிலை | 1990–1995 | 554.21 | 956.358 | 1510.568 |
| **மொத்தம்** | | **3097.40** | **956.358** | **4053.758** |

அரசாணை எண் (1டி) 107 சுற்றுச்சூழல் (ம) வனம்(8) வனத்துறை நாள் 31.07.2018 மற்றும் அரசாணை எண் 266 நாள் 20.09.2018–ல் வழிவகைகளின்கீழ், முன்பணமாக ரூ.39.95 கோடி தொகை தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## <u>தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்</u>

## செயல்திறன் அறிக்கை







### 11.2.1 தேயிலைத்தூளின் விற்பனையை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை.

இக்கழகத்தில் மாவட்ட மொத்த விற்பனை முகவர்கள் மற்றும் சில்லறை விற்பனை முகவர்களை அதிகளவில் நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது டேன்டீ 135 சில்லறை விற்பனை முகவர்களையும், 15 மாவட்ட மொத்த விற்பனை முகவர்களையும், 2 மண்டல முகவர்களையும் கொண்டுள்ளது. மேலும், டேன்டீ தயாரிப்புகளை விளம்பரப்படுத்தும் நோக்கிலும், அதிகளவில் நுகர்வோர்களை சென்றடையும் வகையிலும், அரசு கண்காட்சிகள். சுற்றுலாத்துறை விழாக்களிலும் இக்கழகம் கலந்து கொண்டு வருகின்றது.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் மேற்கொண்ட சீரிய முயற்சிகளைத் தொடர்ந்து பொது வழங்கல் திட்டத்தின் கீழ் டேன்டீ தேயிலைத்தூள் விற்பனை செய்ய நுகர்வோர் வாணிபக் கழகத்திடமிருந்து ஆணை கிடைக்கப்பெற்று 267.500 மெட்ரிக் டன் தேயிலைத்தூள் கடந்த 3 ஆண்டுகளில் பொது விநியோக திட்டத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா, ஆந்திரா மற்றும்

தெலுங்கானா போன்றவற்றில் பொது வழங்கல் திட்டத்தின் மூலம் டேன்டீ தேயிலைத்தூளை விற்பனை செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் சத்தீஸ்கர் மாநிலத்திற்கு பொது விநியோகத்திட்டத்தின் மூலமாக 100 மெட்ரிக் டன் தேயிலைத்தூள் விற்பனை செய்வதற்குப் புதியதாக ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

நெய்வேலி நிலக்கரி கழகம், சேலம் உருக்காலை, தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம், இராணுவ பொருள் அங்காடிகள் மற்றும் தபால் நிலையங்கள், சிறைச்சாலைகள் மற்றும் மின்வாரியம் போன்ற நிறுவனங்களுக்கு இக்கழகத் தயாரிப்புகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

### 11.3 அரசு இரப்பர் கழகம், நாகர்கோவில் (ARC)

இலங்கையில் இருந்து தாயகம் திரும்பிய அகதிகளின் மறுவாழ்வினையும் அவர்களது தொழில் திறனையும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தட்ப வெட்ப சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு 1961 ம் ஆண்டு அரசு ரப்பர் தோட்டங்கள் தொடங்கப்பட்டது. மேலும், படிப்படியாக 4785.70 ஹெக்டேர் அளவுக்கு 1979 ம் ஆண்டு வரை விரிவாக்கம் செய்யப்பட்டது.

அரசு ரப்பர் கழகம் 01.08.1984–ஆம் ஆண்டு முதல் நிறுவனச் சட்டம்,1956 –ன்படி பதிவு செய்யப்பட்டு ரூ.13.07 கோடியை தற்போதைய ஒப்பளிக்கப்பட்ட மற்றும் வாங்கப்பட்ட மூலதனமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இவை அனைத்தும் தமிழ்நாடு அரசின் வசம் உள்ள பங்குகளாகும். ரப்பர் நடவிற்கு உகந்ததாக இல்லாத பகுதிகளை மீண்டும் வனத்துறைக்கு ஒப்படைத்தது போக, தற்போது 3772..114 ஹெக்டேரில் செயல்பட்டு வருகிறது. அரசு ரப்பர் கழகம் இதர பெரு நிறுவனங்கள் போன்று அல்லாமல், தட்பவெட்ப சூழ்நிலை சார்ந்த நிறுவனமாகும். அரசு ரப்பர் கழகம் சுமார் 1,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது.

அரசு இரப்பர் கழகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு

1. ரப்பர் தோட்டங்களின் நலனைப் பாதுகாத்தல்.
2. தொழிலாளர்களின் நலனைப் பாதுகாத்தல் மற்றும் உபரி தோட்டத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை உறுதி செய்தல் மற்றும் இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு அளித்தல்.
3. ரப்பர் தொழிலில் உள்ள ஊக வணிகத்தை தடை செய்தல்.

**அரசு ரப்பர் கழகத்தின் ரப்பர் உற்பத்தி மற்றும் ஈட்டப்பட்ட வருமானம்**

| வ. எண் | விபரங்கள் | 2020–21 (உண்மை நிலவரம்) | 2021–22 தற்காலிக மற்றும் தணிக்கை செய்யப்படடாதது | 2022–23 பட்ஜெட் மதிப்பீடு அடிப்படையில் |
|---|---|---|---|---|
| அ) | ரப்பர் உற்பத்தி (மெட்ரிக் டன்னில்) | (உள்ளபடி) 1479 | 1622 | 1300 |
| ஆ) | வரவு மற்றும் செலவு (ரூபாய் இலட்சத்தில்)<br>அ) வரவு<br>ஆ) செலவு | (தணிக்கை செய்யப்பட்டது)<br>3807.17<br>3547.47 | 5159.79<br>4308.98 | (மாறுதலுக்கு உட்பட்டது)<br>3924.99<br>4152.59 |
| இ) | லாபம்(+) அல்லது நட்டம் (−) ரூ.இலட்சத்தில் | (+) 259.70 | 850.81 | (−) 227.60 |

**எதிர்காலத் திட்டங்கள்**

ரப்பர் தோட்டங்கள் 1961–ஆம் வருடம் முதல் 1979 ஆம் வருடம் வரை உள்ள இடைப்பட்ட வருடத்தில் 4785.70 ஹெக்டேர் பரப்பளவில் படிப்படியாக நடப்பட்டன. ஒரு ரப்பர் மரம் ஏழாம்

வருடத்தில் ரப்பர் பால்வடிப்பு பணி மேற்கொள்வதற்குரிய வளர்ச்சியடையும். 35 வருடங்களுக்குப் பின்னர் ரப்பர் பால் உற்பத்தி மிகவும் குறையும். எனவே, பொருளாதார ரீதியாக கூடுதல் ரப்பர் பால் உற்பத்தி பெறுவதற்கு 35 ஆண்டுகளான ரப்பர் மரங்களை வெட்டி அப்புறப்படுத்திவிட்டு புதிய ரப்பர் செடிகள் நடவு செய்யப்பட வேண்டும். எனவே, முதலில் நடப்பட்ட ரப்பர் மரங்கள் அந்தந்த தோட்டங்களின் வயதின் அடிப்படையில் 1995 முதல் 2014 வரை இடைப்பட்ட வருடத்திற்குள் வெட்டி அப்புறப்படுத்தியிருக்க வேண்டும். இருப்பினும், பல்வேறு காரணங்களால் முதலில் நடப்பட்ட ரப்பர் மரங்களை மேற்குறிப்பிட்டுள்ள கால அளவுக்குள் வெட்ட இயலவில்லை. எனவே, தற்போது முதிர்ந்த ரப்பர் மரங்களை வெட்டி அப்புறப்படுத்தி மறுநடவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்த முதிர்ந்த ரப்பர் மரங்களை குறிப்பிட்டுள்ள கால அளவுப்படி அவை வெட்டப்பட்டு வருகின்றன. அவ்விடங்களில் உயர்தர

வீரியமிக்க ரப்பர் கன்றுகள் நடவு செய்யப்பட்டு வருகிறது.

மறு நடவுப் பணிகள் அனைத்தும் முடிவடைந்து, மறுநடவு செய்யப்பட்ட மரங்களில் 7 வருடங்கள் ஆன மரங்களில் பால்வடிப்பு பணி மேற்கொள்ளப்படும். இது வருவாய் உருவாக்கத்திற்கான பெரும் பங்காகும். இதனால், கழகத்தின் நிதிநிலை நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**12. 2021–22 ஆம் ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்**

- மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 03.06.2021 அன்று தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களில், மரப்பரப்பினை அதிகரிக்கவும், சுற்றுச்சூழலை மேம்படுத்தவும் மாவட்டந்தோறும் 1000 மரக்கன்றுகள் வீதம் 38,000 வளர்ந்த மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.
- அரசாணை எண்.264, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்–5) துறை, நாள் 16.06.2021ன் படி உயிரியல் பூங்காக்கள் / தேசிய பூங்காக்கள் / வன உயிரின சரணாலயங்கள் / புலிகள் காப்பகங்கள் /

காப்புக்காடுகளில் கொரோனா பெருந்தொற்றினை கண்காணிக்க சிறப்பு பணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

- நுணுக்கமான திட்டமிடல் மற்றும் நவீன தொழில்நுட்பத்தைக் கைக்கொண்டு 'ரிவால்டோ' யானை பிடிக்கப்பட்டு உரிய மருத்துவ கவனிப்பிற்கு பின்னர் வெற்றிகரமாக மீண்டும் முதுமலை புலிகள் காப்பக வனப்பகுதிக்குள் விடப்பட்டது,
- முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ள பிரச்சனைக்குரிய புலியை (MDT23) அறிவியல் முறையிலான திட்டமிடுதல் மற்றும் கண்காணிப்பு முறைகளுக்குப் பிறகு வெற்றிகரமாகப் பிடிக்கப்பட்டது.
- மனித நடமாட்டமுள்ள பகுதிகளில் கண்டறியப்பட்ட புலிக் குட்டியை மீட்டு, அதன் மறுவாழ்வுக்காக ஆணைமலை புலிகள் காப்பக காடுகளில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.
- கடந்தாண்டு மற்றும் நடப்பாண்டில் வழங்கப்பட வேண்டிய இழப்பீடு நிவாரணத் தொகையில் 91% நிவாரணத் தொகை வழங்கப்பட்டுவிட்டது.
- கழுவேலி பறவைகள் சரணாலயம் (5151.60 ஹெக்டேர்) வனஉயிரின (பாதுகாப்பு) சட்டம்

1972 இன் பிரிவு 18(1) இன் கீழ் 06.12.2021 அன்று அறிவிக்கப்பட்டது

- ஜூலை 2021 முதல் பல வனக்குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் 25 நபர்கள் கைது செய்யப்பட்டதுடன், ரூ.75 கோடி மதிப்புள்ள ஆம்பர் கிரீஸ் பறிமுதல் செய்யப்பட்டது.

- ஆனைமலை புலிகள் காப்பகம், கோயம்புத்தூர் மற்றும் ஓசூரில் 3 தனித்தனி வழக்குகளில் திருடப்பட்ட தந்தங்கள் ஆகஸ்ட் 2021, அக்டோபர் 2021 மற்றும் பிப்ரவரி 2022 மாதங்களில் குற்றம் கண்டறியப்பட்ட 2 வாரங்களுக்குள் மீட்கப்பட்டது.
- ஜூலை 2021 முதல் அவசியமில்லாமல் வன உயிரினங்களைப் பிடிப்பதைத் தவிர்க்கவும் மற்றும் சேதங்களைக் குறைக்கும் வகையில் நீலகிரியில் இருந்து வனஉயிரினங்களை விரட்டுவதற்கு ஆளில்லா வானூர்தி மற்றும் பிடி யானைகளை பயன்படுத்தி வருகிறது.

- பசுமை காலநிலை நிறுவனத்தின் கீழ் தமிழ்நாடு பசுமை இயக்கம் மற்றும் தமிழ்நாடு

ஈரநிலங்கள் இயக்கத்தை அரசு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- முதன்முறையாக ஒருங்கிணைந்த அனைத்து தமிழ்நாடு பறவைகள் கணக்கெடுப்பு ஜனவரி 2022, பிப்ரவரி 2022 மற்றும் மார்ச் 2022 ஆகிய நாள்களில் மூன்று கட்டங்களாக நடத்தப்பட்டது. முதற்கட்டமாக, கடலோர மற்றும் கடல் வாழ்விடங்களிலும், இரண்டாம்கட்டமாக, ஈரநிலங்கள் மற்றும் நீர்நிலைகளிலும் மூன்றாம்கட்டமாக நிலப்பறவைகளின் கணக்கெடுப்பு நடைபெற்றுவருகிறது. வெற்றிகரமாக கணக்கெடுப்பு முடிக்கப்பட்டுள்ளன.
- வளர்ப்பு யானைகளின் சுகாதார மேலாண்மை மற்றும் நலன் கருதி புதியதாக வளர்ப்பு யானைகள் போக்குவரத்து விதிகள் உருவாக்கப்பட்டு 09.02.2022 முதல் தமிழகத்தில் நடைமுறையில் உள்ளது.

## 13. முடிவுரை

1988 ஆம் வருட தேசிய வனக்கொள்கை மற்றும் 2018 மாநில வனக்கொள்கையில்

குறிப்பிடப்பட்டுள்ள 33 சதவீத பசுமைப் பரப்பினை எய்தி மாநிலத்தின் வளமான உயிர்ப்பன்மையினைப் பாதுகாத்திட, தமிழ்நாடு வனத்துறை முழுவீச்சில் செயல்பட்டு வருகிறது. இவ் இலக்கினை எய்துவதற்காக ஏற்கனவே முழு ஈடுபாடு கொண்ட குழு செயல்பட்டு வரும் நிலையில், அனைத்துப் பங்கேற்பாளர்களின் வீறுமிக்க செயலூக்கத்துடன் இப்பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படும்.

**கா. ராமச்சந்திரன்**
**வனத்துறை அமைச்சர்**



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்கரணை சூழல் பூங்காவை 10.12.2021 அன்று திறந்து வைத்தார்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை 24.11.2021 அன்று மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு- கா. ராமச்சந்திரன் அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்து தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் 2020 - 21ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத் தொகையான 10 கோடியே 38 இலட்சத்து 57 ஆயிரத்து 965 ரூபாய்க்கான வங்கி வரைவோலையை வழங்கினார்.



13.12.2021 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியத்தின் தலைவராக உள்ள மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற வாரியத்தின் 10வது கூட்டத்தில், உயிரியல் வளங்களை ஆராய்ச்சிக்காக அணுகியதற்கு தமிழ்நாடு உயிரிப்பல்வகைமை வாரியத்திற்கு தேசிய உயிரிப்பல்வகைமை ஆணையம் வழங்கிய அணுகுதல் மற்றும் பலன்களை பங்கிடுதல் தொகைக்கான காசோலைகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.



அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை-600 001.